நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# புதிய பூமி

புதிய பூமி

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

PUTHIYA POOMI

சுற்று 09 | டிசம்பர் 2002 | பக்கம் 16 | விலை 10/- | சுழற்றி 53

# பிரதேச சுயாட்சி நியாயமானது

## பேரினவாதிகள் இணங்குவார்களா?

கடந்த சில வருடங்களின் மாவீரர் தின உரைகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தமிழீழத்திற்கு மாற்றீடாக ஆளும் பேரினவாத அரசாங்கங்கள் ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்தால் அதனைத தாங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளத் தயாராக இருப்பதாகக் கூறி வந்தார். ஆனால் ஏற்றுக் கொள்ளத்தக்க மாற்றுத் தீர்வுத் திட்டம் தீர்வைத் தாம் ஏற்கத்தயாராக இருப்பதாகக் கூறி இருக்கிறார். உள்ளக சுயநிர்ணய உரிமை என்னும் அர்த்தப் பரிமாணத்தின் கீழ் தமிழர் தேசியம், தமிழர் தாயகம், பொருளா தாரம், பண்பாடு என்பனவற்றை உள்ளடக்கி தம்மைத் தாமே ஆட்சிசெய்யும் பிரதேச சுயாட்சியானது ஒன்றுபட்ட இலங்கைக்குள் இருந்து விடும் என்பதையும் விளக்கியிருக்கிறார்.

பூர்வமானதாகவும் எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்டதுமாகும்.

விடுதலைப் புலிகள் இயக்கம் இரண்டு தசாப்த கால விட்டுக் கொடுக்காத போராட்டத்திற்கும் பின் இன்றைய சூழலில் தமிழீழத்திற்குப் பதிலாக பிரதேச சுயாட்சித் தீர்வுத் திட்டத்திற்கு ஏன் வந்து கொண்டது எனச் சிலர் ஆச்சரியம் தெரிவிக்கின்றனர். ஆனால்


## அரசியல் யதார்த்தம் மறுக்கப்பட்டால் நாட்டிற்கு பேரழிவு நிச்சயமானது!

ஐக்கிய தேசியக் கட்சியால் முன்வைக்கப்படவே இல்லை. பொதுசன ஐக்கிய முன்னணி முன்வைத்த தீர்வுப்பொதியானது முழுமைபெற்றதாக இருக்கவில்லை. அதுகூட படிப்படியாக வெட்டி வெட்டிக் குறைக்கப்பட்டது. அவ்வாறான கனம் குறைந்த பொதியைக்கூட ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்றத்தில் எரித்து எதிர்ப்புக் காட்டியது. இவை கடந்து சென்ற நிகழ்வுகள்.

ஆனால் இவ்வருட மாவீரர்தின உரையில் வே. பிரபாகரன் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தமிழர் தாயகப்பிரதேசத்தில் பிரதேச சுயாட்சித் மேலும் இத்தகைய பிரதேச சுயாட்சியை சுயநிர்ணய உரிமை அடிப்படையில் வழங்க மறுத்தால் பிரிந்து சென்று தனியரசு அமைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதையும் பேரினவாத ஆளும் தரப்பினர்களுக்கும் சிங்கள மக்களுக்கும் தெளிவான ஒரு செய்தியாகப் பிரபாகரன் தனது உரையில் தெரிவித்துள்ளார்.

அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஏற்கனவே உள்ளக சுயநிர்ணய உரிமை-பிரதேச சுயாட்சி பற்றிக் கூறியிருந்தாலும் பிரபாகரனின் மாவீரர்தின உரையானது அதிகார வரலாற்றில் எந்த ஒரு கொள்கையும் அதற்கான போராட்டமும், அதன் தலைமைத்துவமும் நாட்டின் அக, புறச் சுழல்கள் உருவாக்கி நிற்கும் அரசியல் பொருளாதார புவியியல் யதார்த்த எல்லைகளை மீறிச் செல்லமுடியாது என்பது நமக்கு மட்டுமன்றி உலகின் பொதுவிதியும் கூட.

எனவே புலிகள் இயக்கமும் அதன் தலைமைத்துவமும் அனுபவங்கள் பட்டறிவுகள் மூலம் இன்றைய பிரதேச சுயாட்சிக்கான தீர்வு யோசனையை முன்வைத்திருக்கிறது. அப்பிரதேச சுயாட்சி அமைய வேண்டிய



அடிப்படைகளையும் ஒரு சட்டகத்தின் ஊடே தெளிவுறுத்திக் காட்டியும் உள்ளது.

இத்தகைய பிரதேச சுயாட்சியின் சாத்தியத்தையும் பிரிவினையின் சாத்தியமின்மையையும் ஏற்கனவே மார்க்சிச லெனினிசவாதிகளாகிய நாம் தெளிவாக வலியுறுத்திக் கூறிவந்துள்ளோம். வடக்கு கிழக்கு இணைக்கப்பட்ட தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தில் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் பூரண சுயாட்சியே தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பதை தொடர்ச்சியாக வற்புறுத்தி வந்துள்ளோம். இலங்கையின் அரசியல் பொருளாதார புவியியல் நிலைமைகளுடன் பிராந்திய-உலக மேலாதிக்க சக்திகளின் உள் நோக்கங்கள் போன்ற பல்வேறு அம்சங்களின் ஊடே யதார்த்த நிலைமைகளை வரலாற்று வளர்ச்சி ஊடாகப் படித்துப் பரிசீலித்தே நாம் பிரதேச சுயாட்சியை முன்மொழிந்து வந்தோம். அதனைப் பேரினவாத சக்திகளுடன் கூடிக்குலாவிப் பேசிப் பெறமுடியாது போராடிப்பெறவேண்டும் என்பதையும்

தொடர்ச்சி 16ம் பக்கம்.

# பாராளுமன்றத்தைக் கலைக்க தருணம் பார்க்கும் சந்திரிகா

திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கா இன்றும் இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகவே இருந்து வருகிறார். இருப்பினும் அவர் ஒரு மூலையில்தான் இருந்து வருகிறார். ஏனெனில் பாராளுமன்றத்தில் ஆட்சி புரியும் ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதியை அதிகம் கவனத்தில் கொள்ளவில்லை. ஏற்கனவே ஜனாதிபதியின் அதிகாரங் களைக் குறைக்க முற்பட்டு மூக்கு உடைபட்ட நிலையில் ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதிக்கு எதிரான அடுத்த நடவடிக்கையைப் பின் போட்டிருக்கிறார்.

அதேவேளை இம்மாதம் டிசம்பர் 5ம் திகதியுடன் ஜனாதிபதியின் கரங்கள் பலம் பெற்றுக் கொள்ளப் போகிறது. அதாவது அரசியல் யாப்பின் பிரகாரம் பொதுத் தேர்தல் இடம்பெற்று ஒரு வருடம் முடிந்த பின் பாராளுமன்றத்தை எந்த வேளையிலும் கலைத்து புதிய தேர்தல் நடாத்தும் அதிகாரம் ஜனாதிபதியிடமே இருக்கிறது.

எனவே அந்த அதி உயர் அந்தஸ்திற்கு ரணிலின் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தப்பிப் பிழைக்க முடியாது. ஆனால் ஜனாதிபதி சந்திரிகா அண்மையில் பொது நிகழ்வில் உரையாற்றும் போது தான் பாராளுமன்றத்தைக் கலைக்க மாட்டேன் என்று கூறியிருக்கிறார். பாராளுமன்ற சந்தர்ப்பவாத பிற்போக்கு அரசியலில் இத்தகைய வாக்குறுதிகளுக்கு பெறுமதி இருந்ததில்லை. தமக்கு சாதகமான காற்று வீசினால் வாக்குறுதியை அதே காற்றில் பறக்க விட்டு விட்டு அடுத்த முடிவை எடுக்க முடியும். எல்லாம் ஆளும் வர்க்கத்தினரின் தேவையைப் பொறுத்ததாகும்.

ஜனாதிபதி சந்திரிகா உடனடியாகப் பாராளுமன்றத்தைக் கலைத்து அதனால் பயன் பெற முடியாத நிலை அவரது பொதுசன முன்னணிக்குள் இருந்து வருகிறது. சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஒருமைப்பாடு கிடையாது. அனுரா பண்டாரநாயக்கா, மங்கள சமரவீர, சரத் அமுனுகம ஒரு புறமாக நின்று ஜே.வி.பி.யினரோடு கைகோர்த்து சல்லாபம் புரிகின்றனர். எதிர்க்கட்சித் தலைவர் ஒரு குழுவோடு வேறொரு பக்கத்தில் நிற்கிறார். முன்னாள் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுரத்த ரத்வத்தை கொலை, லஞ்ச வழக்குகளில் மாட்டுப்பட்டு நிற்கிறார். லக்ஷ்மன் கதிர்காமர் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்ல முடியாது திணறுகின்றார். ரிச்சர்ட் பத்திரான, பௌசி போன்றோர் ஏற்கனவே அரசாங்கப் பக்கம் மோப்பம் பிடித்து விட்டனர். பொதுசன முன்னணி இடதுசாரிகள் முகவரிகளைத் தானும் தக்க வைக்க முடியாது தத்தளிக் கின்றனர். அனைவரும் ஏழு வருடத்தில் செய்தவற்றை இன்று அனுபவிக்கின்றனர்.

யூஎன்.பி. மக்கள் விரோத, நாட்டு விரோத முடிவுகளான உலகமயமாதல், தாரளமயமாதல், தனியார் மயமாதல் என்பனவற்றுக்கு செங்கம்பளம் விரித்து வரவேற்கும் நாசகாரத் திட்டங்களை எதிர்க்க பொதுசன முன்னணியிடம் எதுவித வேலைத் திட்டமும் இல்லை. வாழ்க்கைச் செலவை நாளாந்தம் உயர்த்திவரும் அரசாங்கத்தின் போக்கை தடுத்து நிறுத்த ஜனாதிபதி யாலும் முடியாது. பொதுசன முன்னணியாலும் முடியாது. ஏனெனில் இவர்கள் செய்து வந்ததின் தொடர்ச்சி யைத்தான் ரணிலின் அரசாங்கமும் செய்கிறது.

எனவேதான் பாராளுமன்றத்தைக் கலைத்து அதனால் பயன்பெற முடியாது என்பதால் ஜனாதிபதி உடனடியாகக் கலைக்க முடியாத நிலையில் உள்ளார். மேலும் சமாதான முன்னெடுப்பு மற்றொரு தளத்தில் யூஎன்.பி. க்கு பலம் சேர்த்தும் நிற்கிறது. அதேவேளை பொதுசன முன்னணி ஜே.வி.பி.யோடு சேர்ந்து நாற்றமடிக்கும் சேற்றைப் பூசி நிற்கிறது. இதற்கு பொதுசன முன்னணிக்குள்ளேயே எதிர்ப்பும் உண்டு.

சமாதானத்தை எதிர்த்து குரல் வைத்து சிங்கள மக்களை உசுப்பி விட்டு வாக்கு வங்கியை விரிவுபடுத்தவும் முடியாது உள்ளது. அதேவேளை மேற்கு நாடுகளும் யப்பானும் ரணிலின் பக்கம் அணிசேர்ந்து நின்று

தொடர்ச்சி 16ம் பக்கம்...

# முஸ்லிம் காங்கிரஸ் பிளவின் பின்னால் இருக்கும் கரங்கள் யாருடையவை?

அரசியல் முகவரி அற்று இருந்து வந்த முஸ்லீம் சமூகத்திற்கு அதனை உருவாக்கி நிலை நிறுத்திக் கொடுத்த தே சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் என்றே முன்பு பெருமை பேசப்பட்டது. முஸ்லீம் மக்களும் தங்களுக்கான ஒரு உறுதியான அரசியல் தலைமைத்துவம் கிடைத்துள்ளதாகப் பூரிப்படைந்தனர். ஆனால் யாவும் குறிப்பிட்ட காலத்தினுள் பொய்யாய், கனவாய், பழங் கதையாகிக் கொண்டது. அந்தக் காங்கிரஸ் சாதாரண முஸ்லீம் மக்களது அபிலாஷை களையோ பிரச்சினைகளையோ கவனத்தில் கொள்ளவில்லை. சுயநலம், சொத்துச் சேர்ப்பு, பதவி பெறுதல் எனச் சென்று முஸ்லீம் உயர் வர்க்க சக்திகளின் விருப்பு வெறுப்புக்குச் செயல்படும் ஒன்றாகியது. பாராளுமன்றக் கட்சிகளின் செயற்பாடுகள் அரசாங்கங்களில் சேர்வதும் விலகுவதும் தவிர வேறு விதமாக இருக்க முடியாது தானே. முஸ்லீம் மக்களின் நலன்களின் அடிப்படையில் அன்றி பதவிகள், பணம் என்பவற்றின் வாயிலாகவே தான் கடந்த பொதுசன முன்னணி அரசாங்கம் பதவி பெறவும் பின், கவிழ்வதற்கும் இன்றைய அரசாங்கம் பதவிக்கு வரவும் முஸ்லீம் காங்கிரசின் தாவல்கள் காரணமாகின. அதனால் ஏற்கனவே மு.கா. உடைவுக்கும் உள்ளாகியது.

இப்போது மீண்டும் அதனுள் பிளவு ஏற்பட்டுள்ளது. பதவிகள் என்பதற்கும் அப்பால் வேறு சக்திகள் செயல்படுவதாகச் செய்திகள் கசிந்து வருகின்றன. சமாதானத்தைக் குழப்புவோர் இந்தப் பிளவின் பின்னால் இருப்பதாக நம்பப்படுகிறது. ஒரு பகுதியினர் பொதுசன முன்னணியின் உயர் மட்டத்தினர். மறு பகுதியினர் இந்தியக்

தொடர்ச்சி 16ம் பக்கம்.

# மலையக மக்களின் உரிமைகள் பற்றிப் பேச அரசியல் சமூகத் தலைமைகள் முன்வர வேண்டும்

மலையகத் தமிழ் மக்கள் திட்டவட்டமான ஒரு சமூகக் குழுமம். அவர்கள் ஒரு தேசிய இனமாக வளர்ச்சிபெற்று நிற்கின்றனர். தொடர்ச்சியான இன-வர்க்க ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகி வந்துள்ளனர். அதனால் வாழ்வுரிமை தொட்டு இன வர்க்க உரிமைகள் யாவும் மறுக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இதுவரையான தொழிற்சங்க அரசியல் தலைமைகள் தங்களது இருப்புக்கு ஏற்ற விதமாகவும் பாராளுமன்ற அரசியலில் பங்கு கொண்டு பதவிகள் பெறும் அளவிலேயே மலையக மக்களின் பிரச்சினைகளை மேலெழுந்த வாரியாகப் பேசிவந்தனர்.

அதனால் தேசிய இனப்பிரச்சினையின் ஒரு பகுதியாக விளங்கும் மலையகத் தமிழரின் அபிலாஷைகளை கோரிக்கைகளாக்கி இன்றைய சாதானப் பேச்சுவார்த்தை மேசைக்கு எடுத்துச் செல்ல யாருமே முன்வரவில்லை. ஆறுமுகம் தொண்டமான் நாமே நமக்குள் பேசித் தீர்ப்போம் என்று சுருங்கக் கூறி விலகிக் கொண்டார். சந்திரசேகரன் புலிகளிடம் கையளித்து விட்டேன் என்று கூறிப் புறம் தள்ளிக் கொண்டார். பொதுசன முன்னணியில் கதிரை கிடைத்த இருவரும் அதற்கு அளவாகப் பேசி வருகின்றனர். இத்தகையோரை நம்பிப் பயன் ஏற்படப் போவதில்லை.

எனவே மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளில் அக்கறையும், ஆர்வமும் கொண்ட நேர்மையான அரசியல் சமூக சக்திகள்

தொடர்ச்சி 16ம் பக்கம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நன்றி - நூலகத்திட்டம்

# யுத்த சூழலில் பணம் சேர்த்த வடக்கு கிழக்கு உயர் அதிகாரிகள்

கடந்த இருபது வருடங்களாக வடக்கு கிழக்கை கொடிய யுத்தம் சின்னாபின்னப்படுத்தி வந்துள்ளது. உயிர் இழப்புகள், உடமை அழிவுகள், இடப்பெயர்வுகள் இவற்றின் ஊடே விபரிக்க முடியாத துன்ப,துயரங்கள். சுருங்கக்கூறின் ஒவ்வொரு குடும்பத்தையும், ஒவ்வொரு மனிதர்களையும் யுத்தம் ஏதாவது ஒரு விதத்தில் பாதித்து வந்துள்ளது. இதில் அந்த மண்ணை விட்டகலாத சாதாரண உழைப்பாளர்களான மக்களே பெரும் பாதிப்புக்களைப் பெற்றனர்.

இத்தனைக்கும் மத்தியில் இந்த யுத்தத்தால் சம்பாதித்தவர்கள் சிலர் இருக்கிறார்கள். இவர்களில் அதிக குற்றம் சுமத்தல்களுக்கு உட்பட்டவர்கள் கொள்ளை லாபமீட்டி வந்த பெரு வர்த்தகர்கள், வியாபாரிகள் என்பது பகிரங்கம். ஆனால் உள்ளுரவும், மறைமுகமாகவும் பணம் சேர்த்துக் கொண்ட வெளியில் தெரியாத ஒரு பகுதியினர் இருக்கிறார்கள் என்பது பலருக்குத் தெரியாது. அவர்கள்தான் உயர் அரசாங்க நிர்வாகிகள், அதிகாரிகள், திணைக்களங்களின் முக்கிய புள்ளிகள் எனப் பல நிலைகளில் இருந்து வருகிறார்கள்.

இவர்களில் நெஞ்சுக்கு நேர்மையாக இருந்து கஷ்ட சூழலிலும் யுத்த அனர்த்தங்கள் மத்தியிலும் மக்களுக்கு சேவையாற்றியவர்கள் இருக்கிறார்கள் என்பது நிராகரிக்க முடியாத ஒன்றாகும். ஆனால் நாம் குற்றம் சுமத்துவது யுத்த சூழலின் மத்தியில் மக்களுக்குரியவற்றைப் பெயருக்கு கிள்ளிப் போட்டு விட்டு பெரும் பகுதியை தத்தமது பைகளில் அள்ளிப் போட்டுக் கொண்டவர்களையேயாகும். அந்த அள்ளல் என்பது உயர் நிலையான அமைச்சர்கள் மட்டத்திலிருந்து கீழே அடிமட்டம் வரை தாராளமாக நடைபெற்று வந்துள்ளதைக் காண முடியும். உதாரணமாக இன்று முன்னைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் லஞ்ச விசாரணைக்குழுவின் முன் தோன்ற வேண்டிய நிலைக்கு வந்துள்ளார். வங்கிப் பாதுகாப்புப் பெட்டகத்தில் வைப்புச் செய்யப்பட்ட நாலு கோடிப் பணப் பத்திரங்களுக்குப் பதில் சொல்ல வேண்டியவராக உள்ளார் என்ற செய்திகள் வந்து கொண்டே இருக்கிறது.

அவ்வாறெனில் வடக்கு கிழக்கின் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க அதிபர்கள், திணைக்களத் தலைவர்கள், அமைச்சின் செயலாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் என்போரின் சொத்து மதிப்பீடு மீளப் பரிசீலிக்கப் பட்டால் உண்மை நிலை மக்களின் முன் வெளிச்சத்திற்கு வந்து கொள்ளும்.

இவற்றுக்குரிய ஒரு பொது விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டால் ஊழல் மோசடி போன்றவற்றை வெளிக்கொணர முடியும். ஆனால் யார் இதனை இதய சுத்தியோடு செய்வது. அரசாங்கம் தனது அரசியல் இருப்புக்கு ஏற்ற அளவிலேயேசெய்து கொள்ளும். அதற்கு அப்பால் செய்ய முடியாது. காரணம் அத்தகையவர்கள் அரசாங்கப் பக்கத்திலும் இருக்கிறார்கள் என்பது அறியப்பட்ட ஒன்றேயாகும்.

திருகோணமலை மாகாண அமைச்சின் செயலாளராக இருந்தபோது ஒரு தர்மவான் தனது மகளுக்கு கொழும்பில் பெருத்த செலவில் தடபுடல் கல்யாணம் செய்து வைத்தார். அந்த திருமண மண்டப வாசலில் அமைச்சில் அடித்த பணத்தில் திருமணம் நடைபெறுகிறது என யாரோ எழுதி ஒட்டி விட்டார்கள். இதனை விசமத்தனம் என்று கூற முடியாது. இப்படிப் பல பேர் கொழும்பில் வீடு-வாசல், மாடி-மனை என்று வாங்கிக் கொண்டுள்ளனர். யாழ் செயலகத்தின் உயர் நிர்வாக அதிகாரிகளில் சிலரும் இவ்வாறுதான் என்று பேசப்படுகிறது. ஆனால் இத்தகைய பேர்வழிகள் எந்த அரசாங்கம் வந்தாலும் காக்கா பிடிக்கவும், தாஜா பண்ணவும் தெரிந்தவர்கள். அத்துடன் எதிலும் மாட்டிக் கொள்ளாது தப்பித்துக் கொள்ளவும் முடிந்தவர்கள்.

இந்த நிலைதான் தொடரும் என்றால் தற்போதைய சமாதான சூழலில் குறிப்பாக இடம்பெற இருப்பதாகக் கூறப்படும் புனரமைப்பு, புனர்வாழ்வு போன்றவற்றின் ஊடாகவும், மக்களுக்குரிய பணம் உயர் அதிகாரிகள், நிர்வாகிகள், அமைச்சர்கள், பா.உறுப்பினர்கள் போன்றவர்களின் கைளுக்கும் பைகளுக்கும் போகாதவாறு பார்த்துக் கொள்வது அவசியம். ஆனால் இன்றைய அமைப்பில் இதனைத் தடுப்பது முடியுமா? என்பதே கேள்வியாகும்.

# இரத்தினபுரியில்-வவுனியாவில் பாலியல் வல்லுறவுப் படுகொலைகள்!

கடந்த 22.11.2002ல் இரத்தினபுரி நகருக்கருகாமையில் 22 வயது இளம் பெண் ரி.ஜெயசுதா பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் ஜெயசுதா ஒரு தோட்டத் தொழிலாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர். மிகக் கொடூரமாக காமுக மிருகங்கள் அவரைக் குதறிக் கொலை செய்துள்ளன.

இலங்கையில் இன்று சர்வசாதாரணமாகி விட்ட பெண்கள் மீதான பாலியல் பலாத்காரம், வல்லுறவு, கொலை போன்ற வற்றை தடுத்து நிறுத்த அரசாங்கமோ பெண் ஜனாதிபதியோ மற்றும் எவருமே முன்வருவதாக இல்லை. பெண்கள் வீட்டிலும் வெளியிலும் பாதுகாப்பு அற்று பயப்பீதி கொண்ட சூழலிலேயே வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய கொடுமைகள் தனிநபர்கள் சம்மந்தப்பட்ட பிரச்சினைகள் அல்ல. பாரிய சமூகப் பிரச்சினை. பெண் ஒடுக்குமுறை என்பதற்குள் உள்ளடங்கியுள்ள பிரச்சினையாகும். இதற்கு எதிரான பரந்துபட்ட உறுதிமிக்க போராட்டங்கள் முன்னெடுக்கப்படல் வேண்டும். மலையகப் பிரதேசங்களில் இதுபோன்று ஏற்கனவே கொடுமையான சம்பவங்கள் இடம்பெற்று வந்துள்ளன. அவற்றை இனவாத நோக்கில் அணுகி உரிய குற்றவாளிகள் தப்பித்தும் கொண்டனர். ஆனால் ஜெயசுதாவின் கொலையைக் கண்டித்து முழுமையான விசாரணையைக் கோரி இரத்தினபுரியில் சிங்கள-தமிழ்-முஸ்லீம் மக்கள் ஆறாயிரத்திற்கு மேல் அணிதிரண்டு கண்டன ஊர் வலத்தை நடாத்தி இருக்கிறார்கள். மலையகத்தில் இது ஒரு முன்னுதாரண நடவடிக்கையுமாகும். அதேவேளை பெண்களுக்கு தொடர்ச்சியாக இழைக்கப்பட்டு வரும் கொடுமையான பாலியல் வல்லுறவுக்கும் படுகொலைகளுக்கும் தனியானதும் கடுமையானதுமான சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்பதை வற்புறுத்தும் பரந்த இயக்கம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

• • • • • • • •

கடந்த 22-10-2002 அன்று வவுனியா கல்நாட்டிய குளத்தில் செல்வி லூசியா நட்சத்திரம் (வயது 48) என்ற பெண் தனது கால்நடைகளைத் தேடி மாலை ஆறு மணியளவில் வயல் பகுதிக்குச் சென்றுள்ளார். ஆனால் அவர் வீடு திரும்பவில்லை. மறுநாள் காலையில் பிணமாகவே கிராம மக்களால் கண்டுபிடிக்கப்பட்டார். அதன் பின்னான பிரேத சோதனையில் லூசியா பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது. ஆனால் இதுவரையில் யாருமே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படவில்லை. அதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இக் கொடுமையைக் கண்டித்தும் உரிய சட்டநடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரியும் குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என வற்புறுத்தியும் பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள், மக்கள் பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தினர். பிரதமர் முதல் உயர் அதிகாரிகளுக்கு மகஜர்கள் கொடுத்தனர். யாவும் செலவிட்டுக் காதில் ஊதிய சங்காகவே உள்ளது.

மேற்படி பெண் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட பகுதி ராணுவ நடமாட்டம் உள்ள ஒரு பகுதி என்றும் சிங்கள மக்களது கிராமங்களை அண்டிய பகுதி என்றும் பொதுமக்கள் கூறுகிறார்கள். அப்படியென்றால் அவர்களுக்கு இவ்விடயம் எப்படியும் தெரிந்திருக்க நியாயம் உண்டு என்ற பலத்த சந்தேகம் வவுனியாவில் நிலவுகின்றது. யுத்த சூழலில் வடக்கு கிழக்கில் இது போன்ற பாலியல் வல்லுறவுப் படுகொலைகள் பல நடந்துள்ளன. அவற்றில் ஆயுதப்படையினரே சம்பந்தப்பட்டனர். இப்போது சமாதான சூழலிலும் இக் கொடூரம் நடைபெற வேண்டுமா? இதனைக் கண்டு பிடிப்பதற்குரிய விசாரணைகள் உரியவாறு இடம்பெறாது இருப்பது ஏன்? அதனை மூடி மறைப்பதற்கா? அல்லது மறைமுக அழுத்தங்கள் இருந்து வருகின்றதா? சாதாரண ஒரு தமிழ் விவசாயப் பெண்தானே என்ற அலட்சியமா? ஆனால் வவுனியா மக்கள் வேண்டுவது லூசியா என்ற பெண்ணுக்கு இழைக்கப்பட்ட கொடூரப் பாலியல் வல்லுறவுப் படுகொலைச் சம்பவத்திற்கு நீதி வேண்டும் என்பதே. சந்தேக நபர்கள் எவராக இருந்தாலும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். நிறுத்துவார்களா?

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரே ஒரு வெகுஜன அரசியல் பத்திரிகை

புதியபூமி ஒவ்வொரு மாதமும் 1ம் திகதி வெளிவருகிறது.

செய்திகள்-கட்டுரைகள் அனுப்புங்கள் உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்

வருட சந்தா - 200 ரூபா ஆறு மாதம் - 100 ரூபா

வெளிநாடுகளுக்கு US $ 20.00 (தபாற் செலவு உட்பட)

பணம் அனுப்பும் வங்கி விபரம் : சோ. தேவராஜா

கணக்கு இலக்கம் : 0672-21-2002634-6

Bank of Ceylon, Central Super Market, Colombo 11.

ஆசிரிய பீடம் / நிர்வாகம் : புதிய பூமி

S-47, 3வது தளம், கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.

(C.C.S.M. Complex) கொழும்பு - 11, இலங்கை.

Tel: 435117, 335844 Fax : 01-473757

# நாலு நடக்கும் நற்குணம் உலகிலே

## இந்த நாடகம் இன்னும் எத்தனை நாள்?

மட்டக்களப்பு ஆள்கடத்தல் சம்பவம் ஒரு இன மோதலாகாமல் போனது பலரதும் நிம்மதிக்குக் காரணமாயிற்று. ஆனால் சிலருக்கு அது நிம்மதியைக் குலைத்துள்ளது. சம்பவம் பற்றிய விவரங்கள் தெளிவாக வெளிவர முன்னமே விடுதலைப் புலிகள் மீது பழி சுமத்தக் கூசாத பேர்வழிகள் தடயங்கள் எந்தத் திசையில் போகின்றன என்று கண்ட பிறகு யார் இதைச் செய்தார்கள் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது என்று நழுவ முயல்வதைக் காண்கிறோம்.

இந்த நழுவல் போக்கு தற்செயலானதல்ல. தமிழ்-முஸ்லிம் மோதல் ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் பேச்சுவார்த்தைகளைக் குழப்ப விரும்புகிறவர்கள் இது பற்றி நழுவலாகப் பேசுவார்கள். புலிகள் பற்றிய சிறு சந்தேகம் இருந்தாலும் ஆணித்தரமாக அடித்துப் பேசிக் குற்றம் சாட்டுவார்கள்.

இவர்களுடைய அரசியல் நாடகங்கள் அண்மைக் காலமாக வெட்டவெளிச்சமாகி வருகின்றன. ஆனால் இவர்களால் வேஷம் மாற்றி வேறு கூத்துக்கள் ஆட முடியும் என்பதையும் நாம் மறக்கலாகாது.

## ஏழாந்திணைத் திருகுதாளம்

மின் தளத்தில் இன்று பல ஏடுகள் உருவாக்கியுள்ளன. முன்பு புலம்பெயர்ந்த தமிழர் நடுவே தகவற் பரிமாறலுக்காகத் தொடங்கப்பட்ட வெப் ஸைற் எனும் மின் தளங்களின் மூலம் வளர்ந்து இன்று சஞ்சிகைகளாக இன்ற்றர் நெற் சஞ்சிகைகள் என்ற அடையாளத்துடன் பலவாறான சஞ்சிகைகள் வருகின்றன. வாசிப்போர் தொகை பெரிதாக இல்லாவிட்டாலும் புலம்பெயர்ந்தோர் நடுவே கொஞ்சம் செல்வாக்குடன் இயங்குகிற இந்தத் தளங்களின் முக்கியத்துவம் பெரியதல்ல. என்றாலும் தகவல்களை உடனுக்குடன் அறிய விரும்புகிறவர்கட்கு இவை மிகவும் பயன்படுகின்றன.

தமிழீழப் பிரச்சினையை ஆதரிக்காத எவருக்கும் இங்கே இடமில்லை என்று ஆணையிட்டுப் பின்னர் தன்னுடைய விமர்சனங்களை ஏற்க ஆயத்தமாக இல்லாத காரணத்தால் விடுதலைப் புலிகளது எதிரியாகிப் பிறகு தேசியவாதத்தின் எதிரியாகிவிட்ட புலம்பெயர்ந்த உதிரிப் புத்திஜீவிக் கவிஞர் இப்போது முஸ்லிம்கள் பேச்சுவார்த்தைகளைத் தங்களுக்குச் சாதகமாக்கப் பார்க்கிறார்கள் என்றும் அதற்கு இடமளிக்கக் கூடாது என்றும் மின்தளத்தில் விட்ட எச்சரிக்கை அவரது சில அபிமானிகள் நடுவிலும் அதிருப்தியைக் கிளறி விட்டுள்ளது. அவர்களுக்கு என்ன தெரியும்! தேசியக் காற்றடிக்கிற திசை இவருக்கல்லவா தெரிகிறது.

## நிச்சயமின்மை

நோர்வே அமைச்சரைக் காணுவதற்கு சந்திரிகா அம்மையாருக்கு நேரமில்லாமல் போனது பற்றிப் பலரும் கருத்துரைத்துள்ளார்கள். ஆனால் சந்திரிகா அம்மையார் ஏன் மறுத்தார் என்பதற்கும் அவ்வாறு செய்தது மெத்தச்சரி என்று சொல்லவும் ஒரே ஒரு கட்சிக்குத்தான் முடிந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் கூடத் தரமுடியாத விரிவான விளக்கமொன்றை ஜே.வி.பி. தலைவர்களுள் ஒருவரான விமல் வீரவன்ஸ தந்துள்ளார். இதன் பிறகு எனக்கு எழுந்த சந்தேகம் என்னவென்றால் விமல் வீரவன்ஸ ஜே.வி.பி. யில் இருப்பதாகக் கற்பனை செய்யும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்காரரா அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருப்பதாகக் கற்பனை செய்யும் ஜே.வி.பி.க் காரரா?

## முஸ்லிம்களை விரட்டியது ஒருவேளை சரியோ?

பகிரங்கமாகப் பேசும்போது மேடைக்கு ஏற்றவிதமாகப் பேசுவதில் பேர் போன நழுவல் பேராசிரியர் என்று பேரெடுத்த அந்த மனிதர் அந்தரங்கமாகப் பேசும்போது திட்டவட்டமாகச் சில விஷயங்களைக் கூறுகிறாராம்.

யாழ்ப்பாணத்தில் நடந்த இலக்கிய விழாவொன்றுக்குப் பங்குபற்றப் போன இடத்தில், "நாங்கள் இவ்வளவு காலமும் முஸ்லிம்களுக்கு அனுதாபமாகப் பேசியது பிழை என்று நினைக்கிறேன் " என்றாராம். கேட்டவருக்குத் தூக்கிவாரிப் போட்டது. எனக்கென்றால் இதில் ஒரு அதிசயமும் இல்லை. பேராசிரியர் பிழைக்கத் தெரிந்த பேர்வழி என்பது நாடறிந்த விடயமாயிற்றே!

## காசு கொடுத்து வயிற்று வலியை வாங்குவது

பல்கலைக்கழகங்களைத் தனியார் மயமாக்குகிற திட்டத்தின் முன்னோடியாக அரசாங்கத்தின் பல்கலைக்கழக மானியத்தைக் குறைக்கிற வேலைக்கு அத்திவாரமாக உலக வங்கி சில காரியங்களைச் செய்கிறது. அதற்கு உடந்தையாக அரசாங்கச் செலவில் நூற்றுக்கு மேற்பட்ட உலக வங்கி "நிபுணர்கள்" இலங்கையில் தமது ஆலோசனைகள் பற்றிய கருத்துக் கணிப்பை நடத்த முற்பட்டுள்ளார்கள்.

உயர்கல்வியைப் பற்றி இவர்களை விட அதிகமாக உள்:ரில் உள்ள கீழ்மட்ட விரிவுரையாளர்களுக்கே விளங்கும். உலக வங்கி விரும்புகிற பரிந்துரை ஒன்றைப் பெறுவதற்காகக் கோடிக் கணக்கில் அரசாங்கம் மக்களது பணத்தை விரயமாக்க வேண்டுமா என்ற கேள்வியையே பல்கலைக்கழக ஆசிரியர்கள் பலரும் கேட்கிறார்கள்.

## பின்லாடனா அல்லது பின்லாடனை உருவாக்கியவர் தானா?

இந்தோனேசியாவின் பாலித் தீவில் ஒக்டோபர் மாதம் நடந்த வெடிகுண்டுச் சம்பவத்தைப் பாராட்டி ஒசாமா பின்லாடன் விடுத்த ஒலி நாடா அறிக்கை மத்திய கிழக்கின் அல் ஜஸீரா தொலைக்காட்சி நிறுவனத்தின் மூலம் நவம்பர் முற்பகுதியில் ஒலிபரப்பானது. செப்டெம்பர் 2001க்குப் பிறகு ஒவ்வொரு முக்கிய அமெரிக்க விரோத நிகழ்ச்சி பற்றியும் எப்படி இந்த பின்லாடனால் அறிக்கைகளை விட முடிகிறது. ஒதுங்க நிழலின்றி ஓடித் திரிகிற ஒருவருக்கு இது இயலுமா?

அல்லது ஒசாமா பின்லாடனை உருவாக்கிய அமெரிக்காவே இன்று அவரது நேர்காணல்களையும் அறிக்கைகளையும் உரைகளையும் உருவாக்கி வருகிறதா? இந்த அறிக்கைகள் மூலம் அமெரிக்கா பயங்கரவாதத்துக்கு எதிரான தனது போர் பற்றி மேலும் பேசவும் அமெரிக்க மக்களைப் பயமுறுத்தித் தனது போர் முயற்சிகளை நியாயப்படுத்தவும் முடியும் என்பது கவனிக்கத்தக்கது. மூச்சுக்காட்டாமலே விமானத் தாக்குதலை நடத்திய ஒருவர், இம்மாதிரியான அறிக்கைகளைத் தொடர்ந்தும் விடுத்துக் கொண்டு இருப்பதற்கான தேவை என்ன?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நன்றி - நூலகத்திட்டம்



# ஈ.பி.டி.பி.யும் மக்கள் போராட்டமும்

நெடுந்தீவில் ஈ.பி.டி.பி. கட்சிக்கு எதிராக ஒரு பகுதி மக்கள் தொடர்ந்து உண்ணாவிரதப் போராட்டம் நடாத்தி வருகிறார்கள். அவர்களது கோரிக்கை ஈ.பி.டி.பி. நெடுந்தீவை விட்டு வெளியேற வேண்டும் என்பதாகும். அதற்கு அவர்கள் கூறும் காரணங்கள் பல. கடந்த 1990ம் ஆண்டிலிருந்து தாங்கள் அந்தக் கட்சியின் ஆயுத அடக்குமுறையின் கீழ் கொடுமைப்படுத்தப்பட்டதாகவும் இனிமேலும் அவர்களை அனுமதித்தால் ஆயுதப்படையுடன் இணைந்து அதனையே செய்வார்கள் என்றும் மக்கள் தரப்பில் கூறப்படுகின்றது. அதேவேளை ஈ.பி.டி.பி.யினர் தாம் அரசியல் கட்சி என்றும் தாம் தொடர்ந்தும் அங்கு அரசியல் வேலை செய்யவேண்டி இருப்பதாகவும் பிரதேச சபை தமது கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் கூறகிறார்கள். அதேவேளை தமது உறுப்பினர்கள் கொலை, கொள்ளை தாக்குதல்கள், பாலியல் வல்லுறவுகளில் ஈடுபட்டதை ஈ.பி.டி.பி. முக்கியஸ்தர்கள் ஏற்றுக் கொண்டு அவற்றைச் செய்தவர்களைத் தாம் தண்டித்துவிட்டதாகவும் கூறுகிறார்கள்.

உண்மையில் நெடுந்தீவு மக்கள் போராட்டம் என்பதை ஆழ்ந்து நோக்கினால் அது ஈ.பி.டி.பி. க்கும் புலிகளுக்குமிடையிலான பகைமையின் விளைவானதாகும். இது தமிழ் இயக்கங்களிடையே கடந்த இருபது வருடங்களாக இருந்து வந்த பகைநிலை வழிவந்ததாகும். ஒட்டுமொத்தமாக கொலை, கொள்ளை ஏனைய மக்கள் விரோத செயற்பாடுகளில் எல்லாத் தமிழ் இயக்கங்களும் ஈடுபட்டு வந்தன என்பதை மக்கள் மறந்துவிட மாட்டார்கள். அதுமட்டுமன்றி புலிகள் தவிர்ந்த அனைத்து தமிழ் இயக்கங்களும் பேரினவாத அரசாங்கங்களுக்கு உதவி வந்தன என்பதும் அடியாட்களாக நடந்து கொண்டன என்பதும் மறைக்கக்கூடிய விடயங்களல்ல. இன்று கூட்டமைப்புக் கட்சிகளில் உள்ள மூன்று கட்சிகள் புலி எதிர்ப்பிலும் அரசாங்க ஆதரவில் நின்று வந்ததை மறந்துவிட முடியாது. எனவே கடந்த காலச் செயற்பாடுகளுக்காக மக்கள் தமிழ் இயக்கங்களை நிராகரிக்க முற்பட்டால் எல்லோரையும் தான் ஒட்டுமொத்தமாக நிராகரிக்க வேண்டும்.

ஆனால் இன்றைய சாமாதான சூழலில் அவற்றை எல்லாம் கடந்த காலத்திற்குரியனவையாகவே கொள்ளல் வேண்டும். ஏனெனில் கூட்டடைமைப்புக்கும் ஈ.பி.டி.பி. க்கும் மக்கள் வாக்களித்தனர். யாழ்ப்பாணத்தை சுட்டெரித்த யூஎன்.பி.க்கும் வாக்களித்தனர். ஈ.பி.டி.பி. க்கு மட்டும் கள்ள வாக்குகள் விழவில்லை. கூட்டடைமைப்பு, யூஎன்.பி.க்கு தாராள கள்ள வாக்குகள் கிடைத்தன.

எனவே நெடுந்தீவு மக்கள் போராட்டம் பேரினவாதிகளுக்கும் இந்தியாவிற்கும் உதவும் வகையில் அமைந்துவிடக் கூடாது. இவர்கள் சமாதானத்தைக் குழப்பவும் தமிழ் மக்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்தி அதன் ஊடே உட்புகுந்து கொள்ளவும் தருணம் பார்த்து நிற்கின்றனர். எனவே இவ்விடயத்தில் நிதானமாகவும் தூரநோக்குடனும் சம்மந்தப்பட்ட தரப்பினர் சகலரும் குறுகிய அரசியல் லாபங்களைப் பாராது பிரதான எதிரிகளைக் கவனத்திற் கொண்டு சுமுகத் தீர்வுக்கு வருவது அவசியமாகும்.

# கோவணத் துண்டும் பட்டுப் புடவையும்

அண்மையில் வரவு செலவுத் திட்ட பாராளுமன்ற விவாதத்தில் உரையாற்றிய பெரும் தோட்டத்துறை அமைச்சர் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தைக் கொண்டு வரப்போவதாகக் கூறியுள்ளார். இப்படி பலூன் ஊதிக் காட்டி தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றுவது இன்று நேற்றுத் தொடங்கிய விடயமல்ல. தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகளை வாங்கிச் சென்ற சொந்த தலைவர்களான அமைச்சர்களும் அப்படித்தான். ஆளும் பேரினவாத அகங்காரம் கொண்ட அமைச்சர்களும் அவ்வாறேதான். இலங்கையிலேயே ஆகக் குறைந்த நாட்சம்பளம் பெறும் (ரூபா.121/-) தொழிலாளர்களாகவே தோட்டத் தொழிலாளர்கள் இருந்து வருகிறார்கள். மூன்று மாதங்களுக்கு முன்பு சம்பள உயர்வுப் பிரச்சினை வந்த போது தோட்டங்களைப் பொறுப்பேற்று நடாத்தி வரும் தனியார் கம்பெனிகளுக்கு அழுத்தத்தைக் கொடுத்து சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுக்க அரசாங்கம், பிரதமர், அமைச்சர்களை எவருமே முன் வரவில்லை. கம்பெனிகளினதும் முதலாளிகளினதும் பக்கத்தில் நின்ற இவர்கள் இப்போது ஓய்வூதியம் பற்றிப் பகட்டாகப் பேசி தொழிலாளர்களை ஏமாற்ற நிற்கிறார்கள். சிலவேளை அடுத்து ஒரு தேர்தல் வந்தாலும் என்ற நினைப்பில் தான் அமைச்சர் அவ்வாறு கூறினாரோ என்றே தொழிலாளர்கள் பேசிக் கொள்கிறார்கள். கோவணத் துண்டு வாங்கிக் கொடுக்க வக்கற்றவன் பட்டுப்புடவை வாங்கித் தருவதாக வாக்குறுதி கொடுத்தது போன்றது தான் அமைச்சரது பேச்சு.

# கூட்டமைப்பினரும் ஜே.பி. பட்டங்களும்

தமிழர் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இப்போது ஒரு வேலையும் கிடையாது. பாராளுமன்றத்திலும் அதிகம் பேசுவதில்லை. பேசினாலும் யூஎன்.பி.யினரை மனம் நோக வைக்காத மாதிரி அப்பிடி இப்படி என்று மென்மை வார்த்தைகளால் சொல்வதோடு நிறுத்திக் கொள்கிறார்கள். அதேவேளை தங்களுக்கு மிக நெருக்கமாக உள்ளவர்களுக்கு வேலை நியமனங்கள், மாற்றங்கள், பதவி உயர்வுகள் போன்றவற்றை வழங்கி வருகிறார்கள். தேவையானவர்களைப் பழிவாங்கவும் பின் நிற்கவில்லை என்றும் பேசிக் கொள்ளப்படுகின்றது. அரசாங்கத்தோடும் அமைச்சர்களோடும் கூட்டமைப்பு எம்.பி.மார் அந்த மாதிரி அந்நியோன்யமாக இருப்பதை பயன்படுத்த வேண்டியவர்கள் எல்லோரும் நன்கு செய்து கொள்கிறார்கள். இதில் ஒன்று சமாதான நீதிபதி (ஜே.பி.) பட்டம் பெறுவதாகும். கூட்டணி–கூட்டமைப்புக்கு ஒவ்வொரு ஊரிலும் விசுவாசமாக வேலை செய்து வாக்கு வங்கிக்கு ஆள் சேர்த்த பலர் இப்போது ஜே.பி. ஆகி வருகிறார்கள். வரவேற்புகள், மாலை மரியாதைகள், பொன்னாடைகள் வீழ்ந்த வண்ணம் உள்ளன. அவற்றின் மத்தியில் இந்த எம்.பி.மார் தோன்றி தமிழைப் போற்றி பாதுகாக்கும் வசனங்களைப் பேசி வருகிறார்கள். இடம், காலம் அறிந்து அரசாங்கத்திற்கும் இரண்டொரு ஏச்சு ஏசிக் கொள்வார்கள். எல்லாம் விஷயத்தோடதான். தேர்தல் வந்தாலும் அதற்கு முன்பு செய்ய வேண்டியதைச் செய்து முன் தயாரிப்பாக இருப்பதுதான் அடிப்படையானது. கூட்டமைப்பினருக்கு பாராளுமன்றம் தேவை. அவர்களின் உள்:ர் பிரமுகர்களுக்குப் பட்டம். பதவிகள் தேவை. அத்துடன் சகலதும் சரியாகிக் கொள்கிறது.

# மதமாற்றத் தடுப்புச் சட்டம் மகேஸ்வரன் கொண்டு வருகிறார்!

அவ்வப்போது கலாதி கிளப்பும் பேச்சுப் பேசுவது யூ.என்.பி. அமைச்சர் மகேஸ்வரனுக்கு கை வந்த கலை. அமைச்சரவை அந்தஸ்து அற்ற வெறும் இந்து மத அமைச்சர் பதவியை மட்டும் பெற்ற அவர் பல்லக்குப் பேச்சுப் பேசுவதில் வல்லவர். அண்மையில் இந்து மதத்தைப் பாதுகாக்க மதமாற்றத்தைத் தடுத்து நிறுத்தும் சட்டம் ஒன்றைக் கொண்டு வரப் போவதாக கூறி இருக்கிறார். உண்மையாகவே இவ்விடயத்தை அலசி ஆராய்ந்து அமைச்சர் கூறியிருக்கிறாரா? அல்லது தமிழ் நாட்டுச் செய்தியைப் படித்த அருட்டுணர்வில் கூறியிருக்கிறாரா?

மதத்தைப் பின்பற்றுவது அல்லது விடுவது அன்றி வேறு ஒரு மதத்தை தழுவுவது ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட விருப்பாகும். அதனைச் சுதந்திரமாக எவரும் செய்து கொள்ளலாம். அது மட்டுமன்றி தற்போதைய சூழலில் வடக்கு–கிழக்கில் மதமாற்றம் என்பது ஒரு பிரச்சினையாக இருப்பதாகவும் தெரியவில்லை. சில கிறிஸ்தவப் பிரிவினர் பின்தங்கிய கிராமங்களில் சென்று பிரசாரங்கள் செய்து வருவதும் அதன் மூலம் சிலர் மதம் மாறுவதும் ஆங்காங்கே இடம்பெறுகின்றன. அங்கும் கூட மனமறிந்து, விடயம் புரிந்து, விசுவாசமாக மதம் மாறுவோர் அரிதிலும் அரிது. வறுமை, அறியாமை, கல்வி இன்மை போன்றவற்றுக்கு சலுகைகள் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பிலேயே சிலர் மதம் மாறுகின்றனர். இதனை பெரிதுபடுத்தி சட்டம் கொண்டு வந்து தடுக்க வேண்டும் எனக் கூறி இந்து மதத்தைப் பாதுகாக்கும் பாதுகாவலனாக அமைச்சர் மகேஸ்வரன் தன்னை காட்ட முற்பட்டுள்ளார்.

அதேவேளை இந்த இந்து கலாசார அமைச்சரிடம் இந்துக் கோவில்கள் பற்றிய ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகின்றோம். வடக்கு–கிழக்கில் குறிப்பாக குடாநாட்டிற்குள் எத்தனை இந்துக் கோவில்களுக்குள் தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ளே சென்று வழிபடுவதற்கு தடுக்கப்பட்டுள்ளனர். எத்தனை பெரிய, நடுத்தர, சிறிய கோவில்கள் அவ்வாறு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழி மறுக்கப்பட்டுள்ளன என்ற புள்ளி விபரத்தை உங்களது அமைச்சின் மூலம் அறியத்தர முடியுமா? அதன் அடிப்படையில் தடுத்து மறிக்கப்படும் கோவில்களுக்குள் தாழ்த்தப்பட்ட மக்கள் உட் சென்று வழிபட உங்கள் அமைச்சு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா? இந்து கலாசார அமைச்சரே இவ்விடயத்தில் எவ்வாறு நடந்து கொள்வீர்கள், மதமாற்றச் சட்டம் கொண்டு வருவதற்கு முன்பு மேற்கூறியவற்றுக்கு ஏதாவது பரிகாரம் உங்களால் காண முடியுமா? இவ்விடயத்தில் மௌனம் கலைப்பாரா மகேஸ்வரன் அமைச்சர்?

# வெளவால் ஆனந்தன் வந்து போனார்

தமிழர் கூட்டணி அன்று தமிழீழக் கோரிக்கையை வைத்த பின் அதற்கான பீரங்கிப் பிரசாரம் செய்தவர்களில் ஒருவர் வண்ணை ஆனந்தன் என்பவர். சில மாதங்கள் சிறையில் இருந்ததால் சிறை மீண்ட செம்மல்களில் ஒருவராகி மேடை தோறும் தமிழீழத்திற்கு உச்சக் குரல் வைத்தவர். அவரது பேச்சில் வரும் முக்கியமான கூற்று "பழம் பழுத்தால் வெளவால் தானே வரும்" என்பதாகும். அது மட்டுமன்றி "இஸ்ரேலைப் போல தமிழீழத்தைப் பெற வேண்டும்" என்பதும் அந்தப் பிரச்சாரப் பீரங்கியின் முழக்கமாகும். இவ் இரண்டு கூற்றுக்களையும் அன்று கடுமையாக எதிர்த்து அரசியல் விமர்சனத்தை முன்வைத்தவர்கள் மார்க்சிச–லெனினிச வாதிகளாகிய நம்மவராகும். ஏனெனில் இத்தகைய கூற்றுக்கள் அந்நிய ஆதிக்க சக்திகளை அரவணைத்து வரவழைத்து கொள்ளும் உள்நோக்கம் கொண்டது என்பதை மக்களுக்கு விளக்கிக் கூறினோம். இதனால் வரும் அழிவுகளையும் அடிமைத்தனங்களையும் அந்நியக் கரங்களின் அபாயத்தையும் எடுத்துக் கூறினோம்.

ஆனால் அத்தகையோரின் விருப்பப்படி இந்திய வெளவால் வந்து கொண்டது. தமிழ் மக்களும் விடுதலைப் புலிகளும் பாரிய விலை கொடுத்தே அவ்வெளவாலை அகற்ற முடிந்தது. இப்போது அமெரிக்க வெளவால் வருமா என்று தமிழ் மக்கள் அஞ்ச வேண்டியுள்ளது. அன்று கூட்டணியின் தமிழீழத்திற்கு கச்சை கட்டி பீரங்கிப் பேச்சுப் பேசிய வண்ணை ஆனந்தன் போன்றோர் வெளிநாடுகளில் இருந்து கொண்டார்கள். ஆனால் தமிழ் மக்கள் பட்ட வேதனைகளும் சோதனைகளும் சொல்லும் தரமன்று. அந்த வெளவால் கதை ஆனந்தன் அண்மையில் யாழ்ப்பாணம் வந்து போயிருக்கிறார். வெளவால் கதையாலும் இஸ்ரேல் பேச்சாலும் விளைந்த அழிவுகளை கண்டு கொண்டிருப்பார். மக்கள் எவருமே அவரை அக்கறைப்படுத்தவில்லை. இந்தச் சோணகிரிகளுக்கு இங்கு என்ன வேலை என்றே மக்கள் ஏசிக் கொண்டனர் என்றும் அறிய முடிகிறது.

# கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் கடிதம்

29.10.2002

ஆசிரியர்,
புதிய பூமி,

அன்புடையீர்,

தங்கள் ஒக்டோபர் மாதம் சுற்று 9 சுழற்சி 51ல் வெளியான புதிய பூமி இதழில் "சோக்கல்லோ சண்முகநாதனின் உலக சாதனை ஒரு ஏழைக் கலைஞனை வாழ்த்துகிறோம்" என்ற தலையங்கத்திலும் "கொழும்புத் தமிழ்ச்சங்கம் தனது முகத்தில் கரி பூசிக் கொண்டது" என்ற உப தலையங்கத்திலும் தனது சொந்தப் பெயரைக் குறிப்பிடக் கூட அச்சப்பட்டு "பூமிதாசன்" என்ற புனைப் பெயரில் எழுதிய கடிதம் சம்பந்தமாக இதை எழுதுகிறோம்.

அன்னார் தமிழ்ச்சங்கம் ஏன் இந்த முடிவை எடுத்தது என்பதை அறியாமல் இக்கடிதத்தை எழுதியுள்ளார்.

தமிழ்ச்சங்கத்தின் ஆட்சிக்குழு இவ்விடயத்தை நீண்ட நேரமாக ஆராய்ந்த பின்னரே ஏகமனதாக இம்முடிவு எடுக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் கௌரவமான மூன்று உறுப்பினர்களின் பெயர்கள் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. தவிர கொழும்புத் தமிழ்ச்சங்கம் 60 வருடங்களாக பணியாற்றி வைர விழாவையும் கண்டு 61வது ஆண்டில் வெற்றிகரமாக காலடி எடுத்துவைத்து சிறப்பாக செயலாற்றி வருகின்றது.

கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் நல்ல, சிறந்த புகழ் பெற்ற நடவடிக்கைகள் பற்றி ஒருவரிகூட எழுத திராணியற்றவர்கள், முதுகெலும்பில்லாதவர்கள், பெயரிடாமல் கடிதமெழுதி தமிழ்ச்சங்கம் தனது முகத்தில் கரி பூசிக் கொண்டது என்று எழுந்தமானமாக எழுதியமையை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இம்மடலை "பூமிதாசன்" எழுதிய கடிதம் போல முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். நன்றி.

இங்ஙனம்.
தங்கள் உண்மையுள்ள.
**ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன்**
பொதுச்செயலாளர்

* ஆசிரியர் குறிப்பு :

சோக்கல்லோ சண்முகநாதன் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் ஒரு ஆட்சிக் குழு உறுப்பினராக இருந்தும் அவரை கூட்டத்தில் இருந்து வெளியே அனுப்பிவிட்டு அவரது உலக சாதனைக்கான விண்ணப்பத்தை சங்கம் ஏன் நிராகரித்தது என்பதே பூமிதாசனின் கேள்வியாக புதிய பூமியில் எழுதப்பட்டது. அதற்கு மேற்படி கடிதத்தில் பதில் இல்லை. நிராகரிப்பதற்கு மூவர் மட்டும் காரணமல்ல. முழு ஆட்சிக் குழுவுமே ஏகமனதாக நிராகரித்தது என்றும் ஒப்புக் கொண்டுள்ளதை கடிதம் காட்டுகிறது. இதனையே தமிழ்ச்சங்கம் தனது முகத்தில் கரி பூசிக் கொண்டது எனக் குறிப்பிடப்பட்டது. மேற்படி பொதுச்செயலாளரின் கடிதத்தின் மூலமாகத் தானும் பூசப்பட்ட அக்கரி அழிந்ததாக இல்லை.

# தீக்கிரையாக்கப்பட்ட யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் கதி என்ன?

தமிழில் யாழ்ப்பாண ஐக்கிய வியாராச் சங்கம் என வழங்கப்பட்டு வந்த The Jaffna Co-operative Stores Limited 1918ம் ஆண்டில் இணைக்கப்பட்ட கம்பனிக் சட்ட விதிகளுக்கு அமைய பதிவு செய்யப்பட்டது. பல வழிகளிலும் யாழ்ப்பாண மக்களுக்கு நீண்ட காலமாகத் தனது சேவையினை வழங்கி வந்த இந்த வியாபார நிறுவனம் 1984ம் ஆண்டு ஏப்பிரல் 9ம் திகதி பட்டப் பகலிலே பேரினவாத ராணுவத்தால் தீயிட்டு கொழுத்தப்பட்டது. அதன் சொத்துக்கள் யாவும் அழிவுற்று அதில் பணியாற்றியவர்களும் வேலையிழந்து கொண்டனர்.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து ரூ.4.680.000/- (நாற்பத்தாறு லட்சத்து எண்பதினாயிரம்) நஷ்ட ஈடு கோரப்பட்டது. ஆனால் இந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. "அரசாங்கத்தைக் கவிழ்க்கும் கிளர்ச்சியில்" இந்த இழப்பு நேரிட்டதாக க் கூறி நஷ்ட ஈடு மறுக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் எந்தவொரு காப்புறுதிக் கோரிக்கையையும் ஏற்றுக் கொள்ளக் கூடாது. என முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்தலத் முதலி கா.கூட்டுத்தாபனத்திற்கு உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதுமட்டுமன்றி 1984ம் ஆண்டுக்குப் பின் அரைகுறையாக இயங்கி வந்த இந் நிறுவனத்தில் அவ்வப்போது பத்துக்கு மேற்பட்ட தடவைகள் பணமாகவும, சிகரெட்டுகளாகவும், வாகனங்களாகவும் கொள்ளையிடப்பட்டன. அவற்றை நடத்தியவர்கள் தமிழ் இயக்கங்கள் என்பது ஊர் அறிந்த இரகசியமாகும். மேற்படி கொள்ளைகளால் 1,560,792/- ரூபாய்களை இழக்க நேரிட்டது. தீயிடப்பட்டு எரிக்கப்பட்ட இந் நிறுவனம் இரண்டு வழக்குகளை யாழ் மாவட்ட நீதி மன்றத்தில் தொடுத்தும் அவை பயனற்றுப் போயின. இந் நிறுவனத்தோடு சம்மந்தப்பட்ட நிர்வாகிகள், ஏன் காப்புறுதி சம்மந்தமான வழக்கைத் திரும்ப எடுத்துக் கொள்ள ஆவண செய்யத் தயங்குகிறார்கள். இப்பொழுது எஞ்சியுள்ள அதன் நிலத்தை விற்பனை செய்வதற்கும் சிலர் முயற்சிப்பதாகவும் அறிய முடிகின்றது. பேரினவாத ஆட்சியும் அதன் ராணுவமும் அறுபத்தாறு வருடங்களாக இயங்கிவந்த இந் நிறுவனத்தை சுட்டெரித்துக் கொண்டது என்றால் இப்பொழுது சிலர் எரிந்த வீட்டில் விறகு பொறுக்குவது போன்று எஞ்சியுள்ள நிலத்தையும் விற்று முடிக்க நிற்பதுதான் வேதனையாகும். எனவே இன்றைய சமாதான–புனரமைப்பு–மீள் நிர்மாண சூழலில் இந் நிறுவனத்தை மக்களுக்கு சேவை வழங்கும் வகையில் மீண்டும் கட்டியெழுப்ப சம்மந்தப்பட்டவர்கள் முன் வருவார்களா?

**யாழ்ப்பாணம்**
**இ. சிவயோகநாதன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நன்றி - நூலகத்திட்டம்

# மலையக கல்வியின் உண்மை நிலை என்ன?

இலங்கையிலேயே கல்வி நிலை மோசமாகக் காணப்படும் பிரதேசம் மலையகம் என்பது உண்மை. ஆனால் அந்த மோச நிலை பற்றிய முழுமையான தகவல்கள் வெளிக் கொணரப்பட வில்லை. ஆங்காங்கே சில பேராசிரி யர்கள் ஓரிரு புள்ளிவிபரங்களைக் கூறிக் கொள்கின்றனர். இன்னும் சில புத்திஜீவிகள் கல்வியால் மலையகம் பெரும் மாற்றம் பெற்று விட்டதாகவும் இன்னும் மாற்றமடைய குறிப்பிட்ட வீதம் மட்டுமே உள்ளதாகவும் கூறி வருகின்றனர்.

ஆனால் உண்மை நிலை என்பது வெளிப்படையாகவும் ஆதாரபூர்வமாகவும் முன்வைக்கப்பட வேண்டும். நகரங்களில் அமைந்த பெரிய பாடசாலைகளையும் அவற்றில் கல்வி கற்கும் வசதி படைத் தோரின் பிள்ளைகளது கல்வியையும் அளவு கோலாகக் கொண்டு முழு மலையகக் கல்வி நிலையும் அளக்கப் படக் கூடாது. பெரும் எண்ணிக்கையி லான நடுத்தர, தோட்டப்புற, அதிலும் பின்தங்கிய தோட்டப் பாடசாலைகளின் உண்மையான நிலைகளை வைத்தே மலையகக் கல்வி நிலை கணிக்கப்படல் வேண்டும்.

இன்று கணனிக் கல்வி, தகவல் தொழில்நுட்பக் கல்வி மலையகத்திற்கு அவசியம் என்று பேசி வருகிறார்கள். இத்தகையோர் எந்தப் பாடசாலை களையும் எவரது பிள்ளைகளின் கல்வியையும் அக்கறைப்படுத்திப் பேசுகிறார்கள். தோட்டப் பாடசாலை களில் கூரை இன்றியும் சுவர் அற்றும் கரும்பலகை காணப்படாத பாடசாலை கள் பற்றியே இன்று பேச வேண்டி யுள்ளது. மாணவர்கள் வரவின்மை அதற்கான பெற்றோரின் அறிவின்மை அதற்குமப்பால் வறுமை பற்றி எத்தனை புத்திஜீவிகள் மலையகத்தில் பேசுகிறார் கள். தோட்டப் பாடசாலைகளில் வளங்கள் இல்லாமை, பற்றாக்குறை, கவனிப்பு இல்லாமை, இனப் புறக் கணிப்பு, தமிழ் அதிகாரிகளின் சுயநலம், அசமந்தம், அதிகார மிரட்டல் போன்று நூற்றுக் கணக்கில் பட்டியலிடலாம்.

இவையாவும் மலையகக் கல்வி நிலையின் உண்மை நிலைமைகளில் ஒரு சில மட்டுமேயாகும். இவற்றுக்கும் அப்பால் பல்வேறு அம்சங்கள் இருக்கின்றன. அவை கல்வியோடு மட்டுமன்றி கல்விக்கான சூழலோடு இணைந்த சமூக நிலைமைகளுமாகும். எனவே மலையகக் கல்வியின் பின்தங்கிய நிலைக்குரிய காரணங் களைப் பரந்த தளத்தில் வைத்து பரிசீலித்து மாற்றுத் திட்டங்கள் வகுக்கப்படுவது அவசியம். அதனை மலையகத்திலிருந்தே செய்தல் வேண்டும். கல்வி த் துறையிலும் சமூகத் தளத்திலும் உள்ள நேர்மையான மக்கள் மீது அக்கறை கொண்ட மலையகப் புத்திஜீவிகள் இப் பணிக்கு தங்களை அர்ப்பணிக்க முன்வரல் வேண்டும். ஏற்கனவே எதுவும் செய்யப்படவில்லை என்று கூறவது தவறு. ஆனால் இன்றைய சூழலில் விரிந்து பரந்தளவில் செய்யப்படல் வேண்டும் என்பதே கோரிக்கை. இன்று செய்யப்படட்டாலே நாளைய மலையகத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமையும்.

# ஹட்டன்–தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் காடையர்களால் தூக்கி வீசப்பட்டார்.

(மஸ்கெலியா மூர்த்தி)

ஹட்டன் தொண்டமான் தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் எம். மெய்ய நாதன் தமது காரியாலயத்தில் கடமை யில் இருந்தபோது அங்கு வந்த ஒரு அமைச்சரின் அடியாட்களால் பலவந்த மாக வெளியே தூக்கி வீசப்பட்டார். இ.தொ.காங்கிரஸின் ஆதரவாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்பதே இதன் பின்னணியிலுள்ள விடயமாகும். கடந்த பல வருடங்களாக திரு. மெய்ய நாதனுக்கு கல்வித் தகுதி இல்லை என்று கண்டறியாத காங்கிரஸ் இப்போதுதான் கண்டிருக்கிறது. ஒரு முக்கிய கல்லூரியின் அதிபர் தூக்கி வீசப்பட்ட போதும் மலையக கல்விமான் கள், மௌனம் சாதித்து நிற்கின்றனர். இந்நிகழ்வை மலையக மக்கள் முன்னணிக்கும், இலங்கை தொழி லாளர் காங்கிரஸிற்குமிடையிலான முரண்பாடாகக் கொள்ள முடியாது. மக்கள் நலன் சார்ந்த தளங்களில் இவ்வாறான காடைத் தனங்களை அனுமதிக்கக்கூடாது.

இதே கல்லூரியின் புதிய பண்பாட்டு அமைப்பின் 'மலையகக் கல்வி ஆய்வரங்கம்' 29-03-2002ல் நடந்தது. இவ்வாய்வரங்கில் மலையகம் மீது சிரத்தையுள்ள பலரும் கலந்து கொண்டனர். ஆய்வரங்கின் இறுதியில் மலையகக் கல்வி தொடர்பான பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன் அத்தீர்மானங்களை நிறைவேற்றும் பொருட்டு கல்வியறிஞர்கள் சார்ந்த குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது. மேற்படி ஆய்வரங்கில் அநாவசிய அரசியல் தலையீடுகள் பற்றி பலரும் சுட்டிக் காட்டியதுடன் கண்டித்து மிருந்தனர். இன்று அதே கல்லூரியின் அதிபர் தூக்கி வீசப்பட்டிருக்கிறார். மலையக மக்களின் இரத்தம் தோய்ந்த வரலாற்றில் அவர்களது உழைப்பால் உருவான தோட்டங்களும், வீடுகளும், பாதைகளும் அவர்களுக்கு சொந்த மில்லை. இம்மக்களின் வாக்குகளால் மந்திரியானவர்கள் ஏதோ தமக்கு ஒதுக்கப்பட்ட மக்கள் பணத்தால் கட்டப் பட்ட (கொள்ளையடித்ததுபோக) கட்டிடத் தொகுதியெல்லாம் தமது தாத்தா வீட்டு பரம்பரை சொத்துபோல சொந்தம் கொண்டாடி நிற்கின்றனர். ஆக சாதாரணப் பாடசாலைக்கான அதிபர் நியமனம் தொட்டு இடமாற்றம், பதவி உயர்வு ஈறாக அனைத்திலும் இவர்களின் அடாவடித்தனமும் ஆக்கிர மிப்பும் மலையகத்தில் தொடர்கிறது.

மிக அண்மையில் நடந்த யதன் சைட் ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் கட்டிடத் திறப்பு விழாவின்போதும் சந்திரசேகரனும், தொண்டமான் ஆறுமுகமும் அடிபிடிபட்டனர். சந்திர சேகரன் மேல் கொத்மலை நீர்த்தேக்கத் திட்டத்திற்கு ஆதரவு கொடுத்ததன் மூலம் தமது எட்டப்பத்தனத்தை தோலுரித்துக் காட்டிக் கொண்டார். காங்கிரசின் வரலாறு காலம் முழுதும் நாம் அறிந்தது. இருவரும் தேர்தல் காலங்களில் ஒன்றுகூடி, குலாவுவதும் பின் முட்டி மோதிக்கொள்வதும் தெருச் சண்டியர்கள் போல் நடந்து கொள்வதும் மூக்கில் சளி போல் தொடர்கிறது.

மலையக மக்கள் விழித்துப் பார்க்க வேண்டியவர்களாக உள்ளனர். இரண்டு எடுபிடிகளையும் நிராகரித்து உண்மையான மக்கள் தலைமையைக் கட்டியெழுப்ப வேண்டியவர்களா கின்றனர்.

தொழில்நுட்பக் கல்லூரி விடயம் மக்கள் பிரச்சினை சார்ந்தது. மலையகம் சார்ந்தது. தகுதி அடிப்படையில் நியமனம் வழங்காது தமது வாலை யார் இறுகப்பற்றியுள்ளார்கள் என்று நோக்கக்கூடாது. ஆய்வரங்குகளில் மலையகக் கல்வி வீழ்ச்சிப்பற்றி ஆய்வுரை செய்யும் சித்தர்கள் இந்த சிக்கல்களில் சிக்கிக் கொள்ளமாட்டார்கள். மக்களால் மட்டுமே மன்னனும் வீழ்வான்.

# மலையகத்திலிருந்து புதிய சஞ்சிகை



'புதிய மலையகம்' என்ற பன்முக காலாண்டு சஞ்சிகை நவம்பர் மாதத்தில் முதலாவது இதழாக வெளிவந்துள்ளது. இச்சஞ்சிகை இராகலையில் இருந்து வெளியிடப்படுகிறது. இதனை வெளியிடுபவர் வெ. மகேந்திரன் ஆவார்.

"பொதுமக்களின் அரசியல், பொருளா தாரம், பண்பாடு என்பவற்றை கொண்ட புதிய சமூகத்தை படைக்க பொதுவான திசைமார்க்கத்தை வழிவகுத்த பொது உடன்பாட்டுடன் மக்கள் ஐக்கியப்பட்ட நடவடிக்கை களிலும் போராட்டங் களிலும் ஈடுபட கருத்துக் களமாகவும் செயற்பாட்டிற்கு ஊக்கமாகவும் பங்களிக்க காலத்தின் தேவையாக இப்புதிய மலையகம் பிறந்திருப்பதாக" ஆசிரியர் பீடத்தின் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'ஒருவனுக்கு அவனது சொந்த வீட்டில் சுதந்திரமாக பேசுவதற்கு உரிமை இருக்குமாயின் அவன் நிச்சயமாக அடக்குமுறையாளன் சுல்தானின் கழுத்தை முறிப்பான்' என்ற குர்திஷ் பழமொழி உட்பட பலசுவையான துணுக்குகளுடன் வெளிவந்துள்ளது.

எங்கள் எல்லோருக்கும் 'பூ' என்றால் அழகானது- ரம்மியமானது எனத்தான் நினைவுவரும். ஆனால் எம். முனியாண்டிக்கு செந்தூரப்பூவை எப்படி ரசிப்பது எனத் தனக்கு புரியவில்லை என்ற எழுத்து அதிர்வை ஏற்படுத்தி யுள்ளது:

பல மொழிபெயர்ப்புக் கவிதைகளும் இடம் பெற்றுள்ளன. இரா .சட கோபனின் 'மலையக மக்களின் பிரச்சினைகளும் தீர்வு யோசனைகளும்' என்பது இடம் பெற்றுள்ளது. பல முக்கிய விடயங்களை இக்கட்டுரை ஆராய்ந் துள்ளது. எனினும் மலையக எழுத்து எனும்போது திரும்பத் திரும்ப இந்தியாவி லிருந்து வந்த வரலாற்றை எல்லோரும் ஒப்புவிப்பது போல் மீளச் சொல்வதைத் தவிர்த்திருக்கலாம் எனத் தோன்றுகிறது.

இராகலை பன்னீர் எழுதிய 'டீச்சர் சொல்கிறாள்' என்ற சிறுகதை உள்ளத்தைத் தொட்டு உருக்குவதாய் உள்ளது.

ஜெ. சற்குருநாதன் தந்துள்ள 'செம்மலர்கள்' குழுவின் மலையக வீதி நாடக முயற்சிகள் பற்றிய தகவல்கள் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளன.

'யாழ்ப்பாணத்துப் பெண்' பற்றிய அ. உமாமகேஸ்வரியின் சித்திரம் சில எண்ணச் சிதறல்களைப் பரிமாறி யுள்ளன.

'தொலைவும் ரசிப்பும்' என்ற சி. சிவசேகரத்தின் கவிதை கணனியில் மூழ்கியவன் தன் சூழலைப் புரிவானா என்பதை 'தன் தலைமேலிருந்த வானத்தைப் பார்த்திருப்பானா' என கேட்பது அர்த்தங்கள் ஆயிரம் சொல்கின்றன.

'வினாக்குறியா, வியப்புக்குறியா' என்ற பீ. மரியதாஸின் ஆய்வு இளம் சந்ததியினரை சிந்திக்க வைப்பதாய் உள்ளது.

'பாடைமாத்தியில் சில பதிவுகள்' மலையக இளஞ்சந்ததியினரின் போராட்டம் எதிர்காலத்தில் நம்பிக்கை கொள்ளச் செய்துள்ளது.

தொடங்குவது அல்ல! சஞ்சிகையைத் தொடர்வதும் பரவலாக்கி மக்கள் மத்தியில் வேரூன்றச் செய்வதிலுமே வெற்றி தங்கியுள்ளது. தொடர் வார்களா? புதிய மலையகத்தவர்கள்.

# கல்வி அதிகாரியால் அதிபர் தாக்கப்பட்டார்

அதிகாரத்திலுள்ளவர்கள் எல்லாம் தமக்கு கீழுள்ளோரை அடித்து அடி பணிய வைக்கும் நிகழ்ச்சிகள் மலையகத்தின் எல்லா இடங்களிலும் பரவி வருகின்றது. மிக அண்மையில் நுவரெலியா கல்விப் பணிமனை அதிகாரி ஒருவர் அதிபர் ஒருவரின் மர்ம உறுப்பில் தாக்கி மயக்கமடையச் செய்துள்ளார். தாக்குதலுக்குள்ளான அதிபர் பிறரின் உதவியுடன் நுவரெலியா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அதிபர் தமக்கு வரவேண்டிய பண நிலுவையினை (யுசசநயசள) பெறும் பொருட்டு காரியாலயத்திற்கு சென்று ள்ளார். வழமையாக கல்விப் பணி மனைக்கு நெருக்கமானவர்களுக்கு உடனடியாக வந்த காரியங்கள் நிறை வேறி விடுவதால் ஆசிரியர்கள் பலருக்கும் கல்வித் திணைக்கள அதிகாரிகள் மீதும், ஊழியர்கள்

தொடர்ச்சி 16ம் பக்கம்.

# பேராசிரியர் க. கைலாசபதியின் 20வது ஆண்டு நினைவு

## அவரது அரசியல் குறிப்புகள் பற்றி

பேராசிரியர் க. கைலாசபதியின் இருபதாவது ஆண்டு நினைவு தினம் 6-12-2002 ஆகும். கைலாசபதி தமிழ் இலக்கியப் பரப்பிலும் ஈழத்து இலக்கியத் தளத்திலும் ஆழமான முத்திரை பதித்துச் சென்றவர். அவர் அடிப்படையில் மார்க்சிச லெனினிச நிலைப்பாட்டைக் கொண்டிருந்தவர். அதன் காரண மாகவே அவரது ஆய்வுகளிலும் விமர்சனங்களிலும் தனித்துவமானதும் தெளிவானதுமான பார்வை இருந்து வந்தது. அதனால் அவர் பழமை வாதிகள், பிற்போக்கு நிலைப்பாட்டா ளர்கள், தூயகலை இலக்கியவாதிகள் மட்டுமன்றி தமிழ்த் தேசியவாதிகளாலும் கண்டனங்களுக்கும் தூற்றல்களுக்கும் ஆளானார். கைலாசபதி வெளிப்படை யாக அரசியல் அரங்கில் நிற்காவிடினும் அவ்வப்போது அரசியல் நோக்கையும் விமர்சனங்களையும் எழுதி வந்தார். தொழிலாளி, செம்பதாகை பத்திரிகை களில் புனைபெயரிலான அவரது எழுத்துக்கள் அவரது அரசியல் நிலைப் பாட்டைத் தெளிவுபடுத்தி வந்துள்ளன.

பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் புரட்சிகர வெகுஜன ஏடாக வெளிவந்த "செம்பதாகை" பத்திரிகையில் 1979 இதழ் முதல் 1982 நவம்பர் வரை "ஜனமகன்" என்ற புனைபெயரில் "கண்ணும் கருத்தும்" என்ற பத்தியில் தொடர்ந்து எழுதியுள்ளார்.

இக்கட்டுரைகளில் காணப்படும் அவரது குறிப்புகளிலிருந்தே தமிழ்த் தேசியம் தொடர்பான அவரது கண்ணோட்டம் எத்தகையதாக அமைந்தது என நோக்கலாம்.

தமிழ் மக்களின் தேசிய உணர்வுக ளுக்கு அரசியல் தலைமை கொடுத்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதிக்கம் பரவியிருந்த அக்காலத்தில் அத்தலைமையின் மீது கைலாஸ் எழுப்பிய வினாக்களும் தொடுத்த கணைகளும் தமிழ் மக்களின் விடுதலை க்கு புதிய ஒளி பாய்ச்சின எனலாம்.

இத்தகைய கேள்விகளையும் கணை களையும் நாம் மீளத் தொகுத்துப் பார்க்கும் போது தமிழ்த் தேசியத்தின் மீதான கைலாசின் கண்ணோட்டம் தெளிவாகும் என நாம் நம்பலாம்.

தனது முதலாவது பத்தியில் "தமிழர் கூட்டணியின் பயங்கர விளையாட்டு" என்ற தலைப்பில் எழுதியுள்ளார்.

இக் கட்டுரையில் கம்பூச்சியாவில் வியட்நாமின் பொம்மை ஆட்சியை அங்கீகரிக்குமாறு கோரும் கையெழுத் துப் பட்டியலில் அமிர்தலிங்கத்தின் பெயர் முதலில் போடப்பட்டிருந்தமையையும்



அவர் எந்தக் கூட்டுடன் இணைந் துள்ளார் என்பதையும் வெளிப்படுத்தி போலி இடதுசாரிகளை அம்பலப்படுத்திய துடன் எந்தவொரு நாட்டின் மீதும் இன்னொரு நாட்டினரால் ஏற்படுத்தப் படும் பொம்மை ஆட்சியையும் நிராகரிப்பதனைக் காணலாம்.

இப்பட்டியலில் ஒப்பமிட்ட ஏனையவர்கள் மக்களால் நிராகரிக்கப்பட்ட "இடது சாரியினர் என்பதுடன் மொஸ்கோ வுடன் நீண்ட காலத் தொடர்புகளைக் கொண்டிருப்பவர்களாகவும் மொஸ் கோவின் பணிப்புரைகளை அடிமைத் தனத்துடன் செயற்படுத்துவதில் கேடு கெட்டவர்கள் எனப் பெயர் பெற்றவர் களாவர். அத்துடன் தமது உயிர் வாழ்வுக்கு மொஸ்கோவையே தங்கி யிருப்பவர்கள் என்பதும் தெரிந்ததே" என்று கைலாஸ் குறிப்பிடுகின்றார்.

இடதுசாரிகள் என்ற நாமகரணத்துடன் தமது உயிர் வாழ்வுக்கு மொஸ் கோவையே தங்கியிருந்தார்கள் என்பதை சகித்துக் கொள்ளாத கைலாஸ் வெளியாரின் பணிப்புரைக ளுக்கு அடிபணிந்து அந்நியத் தலையீடு களுக்கு சாமரம் வீச முனையும் புதிய என்.ஜி.ஓ. கனவான்களின் ஏகாதிபத்திய ஊடுருவல்களை கைலாஸ் ஏற்பாரா, எதிர்ப்பாரா என்பதைப் பற்றி நாம் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

"அவர்தானே (அமிர்தலிங்கம்) இரட்டை நாக்குக்கு பெயர் பெற்றவராச்சே. சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு இரண்டு வேறு விடயங்களை அவரது இரண்டு நாக்குகளும் சொல்லும் வல்லமை யுடையன. அவர் வடக்கில் ஒன்றையும் சரஸ்வதி மண்டபத்தில் ஒன்றையும் இந்தியாவில் ஒன்றையும் வேறொன்றை நாடாளுமன்றத்திலும் கூறுவார். அப்பாவித்தனமோ, அறிவீனமோ இதற்குக் காரணமல்ல"...

"ஈழத்தை வெளியாரின் உதவியுடன் பெற்றுவிடலாமென்று தமிழ் மக்களை ஏமாற்றுவதே அவருடைய தந்திர மாகும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம் அவர் தெளிவுபடுத்த முனைவது என்னவெனில் தமிழர்கள்-சிங்களவர்கள்-வெளி அயல் நாட்டவர் கள் மத்தியிலும் ஒரே நாவினால் ஒன்றையே பேசக் கூடிய தலைமைத்து வத்தையே விரும்பினார் எனலாம். அத்துடன் வெளியாரின் உதவியுடன் ஈழம் எந்நாளும் வருவது சாத்தியமல்ல வெறும் பம்மாத்தே என்பது அவரது நிலைப்பாடாகும். மேலும் அவர் அப்பத்தி யில் "இரட்சகர்கள் என்ற போர்வையில் அங்கோலா, எதியோப்பியா, தென்யெ மன், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுக ளுக்குச் சென்ற ரஷ்யர்கள் அங்கு தங்கி சுரண்டலில் ஆதிக்கம் செலுத்து வதிலும் ஈடுபட்டிருப்பதை அந்த மக்கள் சொல்லுவார்கள். தேசங்களைக் காட்டிக் கொடுப்பவர்களை மக்கள் மன்னிக்கமாட்டார்கள் என்பது அமிர் கூட்டத்தினருக்கு தெரிந்திருக்க வேண்டும். பங்களா தேசத்தை உருவாக்க ரஷ்யா, இந்திய உதவியைப் பெற்ற முஜிபுர் ரகுமான் விரைவிலேயே ஒரு தகுந்த பாடத்தை கற்றுக் கொண்டதை அமிருக்கு நினைவூட்ட விரும்புகிறோம்" என்று கைலாஸ்

தொடர்ச்சி 16ம் பக்கம்..

நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி
புதிய பூமி REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA PUTHIYA POOMI
சுற்று 09 டிசம்பர் 2002 பக்கம் 16 விலை 10/- சுழற்சி 53

எஸ்.47, 3ம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி. கொழும்பு 11. இலங்கை. தொ.பே.: 435117, 335844 பாக்ஸ்: 01-473757

# சமாதானத்தின் விரோதிகள்

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்கப்படுகின்றது. அதனால் வடக்கு-கிழக்கில் துப்பாக்கி வேட்டுகளும் குண்டுச் சத்தங்களும் ஓய்ந்து விட்டன. அங்கு மட்டுமன்றி தெற்கிலும் நிம்மதி காணப்படுகின்றது. அனைத்து மக்களும் சமாதானத்தின் அவசியத்தை நடைமுறையில் உணர்ந்து நிற்கின்றனர். உலக நாடுகளும் தத்தமது தேவை கருதியாகினும் தற்போதைய சமாதான முன்னெடுப்புகளுக்கு கை கொடுக்கின்றன. இந்தியா மட்டும் அதிலிருந்து விலகி நிற்கின்றது.

சமாதானத்தின் பங்காளியாகி நிற்கும் ஒவ்வொரு தரப்பிற்கும் வெவ்வேறு உள்நோக்கங்களும் நிலைப்பாடுகளும் இருக்கலாம். அதனை மிக உன்னிப்பாகக் கொண்டு முன்னெச்சரிக்கையாகவும் விவேகத்துடனும் சமாதான முன்னெடுப்புகளை முன்னெடுக்க வேண்டியதே உரிய வழி முறையாகும். ஏனெனில் சமாதானம் என்பது இரண்டு தசாப்த கால யுத்த அழிவுகளுக்குள்ளான வடக்கு-கிழக்கு மக்களுக்கும் பொருளாதார ராணுவ அழிவுகளையும் யுத்த பீதியுடன் இருந்து வந்த தென்னிலங்கை மக்களுக்கும் அவசியமான ஒன்றாகி நிற்கின்றது. சமாதானத்தை முன்னெடுப்பதில் பிரதான பங்காளியாகி நிற்கும் அரசாங்கம் புலிகள் இயக்கம் பற்றிய நிலைப்பாட்டில் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும். அவற்றோடு ஒத்துப் போக முடியாத நிலைப்பாட்டை ஏனைய கட்சிகள், அமைப்புகள் கொண்டிருக்கின்றன என்பதும் உண்மை.

ஆனால் அவ் இரு தரப்பினரும்தான் இன்றைய இலங்கையின் அரசியல் அரங்கில் மக்கள் அபிலாஷையாக இருக்கும் சமாதானத்தை முன்னெடுப்பதில் பிரதான பாத்திரத்தை வகித்து நிற்கின்றனர் என்ற யதார்த்தத்தை நிராகரிக்க முடியாது. அவர்களது புரிந்துணர்வு ஒப்பந்த இணக்கத்தாலும் யுத்த நிறுத்தத்தாலும்தான் முடிவடையும் இந்த வருடம் முழுவதும் சமாதான சூழலை மக்கள் அனுபவிக்க முடிந்துள்ளது என்பதை மறுக்க முடியாது.

எனவே சமாதான முன்னெடுப்புகள் தவிர்ந்த ஏனைய கொள்கை நடைமுறை விடயங்களில் அரசாங்கம், புலிகள் ஆகிய இரு தரப்புடனும் முரண்பாடு உள்ளவர்களும் கூட சமாதான முன்னெடுப்புகளை ஆதரித்து நிற்பதே இன்றைய தேவையாகும். இவ்விடயத்தில் ஒவ்வொரு கட்சியும் ஒடுக்கப்படும் தமிழ் மக்கள், நாடு, அனைத்து மக்கள் உள்ளிட்ட வகையில் சமாதான இயல்பு வாழ்வு இனப்பிரச்சினைக்கான தீர்வு என்னும் விடயங்களைக் கவனத்தில் கொண்டு அவற்றின் பக்கமே நின்று கொள்ளல் வேண்டும். அதற்கு அப்பால் சுயநல சந்தர்ப்பவாத அரசியல் இருப்பு, அதிகார மோகம், அந்நிய சக்திகளுக்கு உதவுதல் என்ற நிலைப்பாட்டில் எவர் இருப்பினும் அவை மக்கள் விரோதமானவையேயாகும்.

சமாதானத்திற்கு உதவாதுவிட்டாலும் ஆதரவு தராது போனாலும் எதிர்த்து அதனை முறியடிக்காது சூழ்ச்சி செய்யாது, சதிகாரத்தனமாக மாற்றாருக்கு உதவாது இருந்தாலே மிகப்பெரிய உதவியாகும். ஆனால் ஏற்றத்தாழ்வும் சுயநலமும் மக்கள் மீது சவாரி செய்து அரசியல் லாபமும் பெற்று வந்த கரங்களும் கால்களும் சும்மா இருக்க மாட்டாது.

அதனையே ஜே.வி.பி.யும், பொதுசன முன்னணியில் உள்ள பிரதான கட்சிகளும் சமாதான விரோத செயற்பாடாகச் செய்தும் வருகின்றன. அவர்கள் தங்களை சிங்கள பௌத்த மக்களின் பாதுகாவலர்களாகக் காட்டிக் கொண்டே அதிகாரத்தை அடைந்து கொள்ள மக்களை பலிக்கடாக்களாக்க நிற்கின்றனர். சமாதானம் வேண்டாம் புலிகளை அழிக்க வேண்டும் என்றால் அதன் அர்த்தம்தான் என்ன? யுத்தம் தொடர வேண்டும் என்பதேயாகும்.

யுத்தத்திற்கு அழைப்புவிடும் ஜே.வி.பி. இதுவரை தனது இயக்கத்திலிருந்து தனி ஒரு உறுப்பினரைத் தானும் அல்லது தலைமைத்துவத்திலிருந்து ஒருவரைத்தானும் இந்த யுத்தத்திற்காக ராணுவத்தில் சேர்த்துக்கொண்டதா? அல்லது சிறிலங்கா சுதந்திரக்கட்சியோ தினேஷ் குணவர்த்தனாவின் கட்சியோ ஏன் சிஹல உறுமயவின் தலைவர்களது பிள்ளைகளோ ராணுவத்தில் சேர்ந்து போரிட்டார்களா? இவர்களது நாட்டுப் பற்று பௌத்தமதப் பாதுகாப்பு வெறும் போலித்தன முழக்கங்கள் மட்டுமேயாகும்.

அண்மையில் 'நாட்டைப்பிரிப்பதற்கு எதிரான தேசிய இயக்கம்' என்ற பெயரில் ஒரு கூட்டத்தை கொழும்பில் சமாதானத்திற்கு எதிராக நடாத்தினார்கள். ஜே.வி.பி.யின் விமல் வீரவன்சா, சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் அனுரா, மங்கள சமரவீர, மக்கள் ஐக்கிய முன்னணியின் தினேஷ் குணவர்த்தனா ஆகியோர் உரையாற்றினர். ஆனால் மக்கள் பெருமளவில் அக்கூட்டத்தில் திரளவில்லை.

ஜனாதிபதி சமாதானத்தை ஆதரிக்கவும் முடியாமல் எதிர்க்கவும் இயலாமலும் நேரம் ஒரு கதைபேசி மழுப்பல் நியாயங்கள் கூறி வருகின்றார். இன்று மேற்குலக நாடுகள் சமாதானத்தின் பக்கம் நின்று வருவதைக் கண்டு இவர்கள் திகைத்து நிற்கின்றனர். அதேவேளை அமெரிக்காவிற்கு எதிராக வாய் திறக்கவும் அஞ்சுகின்றனர்.

சமாதானத்திற்கு மறைமுகமாக எதிர்ப்புத் தெரிவித்துவரும் இந்தியாவின் பக்கம் இவர்களின் கவனம் திரும்பி நிற்கிறது. ஏற்கனவே ஜே.வி.பி, சிஹல உறுமய என்பவற்றுடன் இந்தியா கைகோர்த்து நின்று சமாதான விரோதத்திற்கு முழுப் பக்கபலமாக இருந்து வருகின்றது. ஒஸ்லோ உதவி வழங்கும் மாநாட்டில் முழுமையாகப் பங்குகொள்ளவில்லை. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து அனுரா, மங்கள சமரவீர, சரத் அமுனுகம ஆகியோர் டில்லிக்குப் பறந்து சமாதான விரோத நிலையைப் பயன்படுத்த முன்நிற்கின்றனர்.

இந்தியாவிற்கு பிராந்திய மேலாதிக்கம் தேவை. பொதுசன முன்னணிக்கு அதிகாரம் மீளப்பெற வேண்டும். ஜே.வி.பிக்கு இன்னும் பத்துப் பாராளுமன்ற ஆசனம் அவசியம். ஏனைய மதவாதிகள் இனவாதிகள் யுத்த வெறியர்களுக்கு தத்தமது சுயதேவைகள் பூர்த்தியாக வேண்டும். எனவே இச் சமாதான விரோதிகள் அனைவரும் ஒன்று திரள்கின்றனர். இவர்களுடன் நேரடியாக இல்லாதுவிடினும் மறைமுகமாக தமிழ் இயக்கங்களில் ஒன்று இரண்டு இச் சமாதான விரோத சக்திகளுடன் இரட்டை முகம் காட்டியும் நிற்கின்றன. இச்சமாதான விரோத சக்திகள் அனைத்தும் தங்களை மக்களுக்கு எதிராக நிறுத்தி நிற்கின்றன என்பதே உண்மையானதாகும்.

- ஆசிரியர் குழு-

# அமெரிக்க மேலாதிக்க திமிரும்

## ஆர்மிரேஜ்–ஆஸ்லி வில்ஸ் உரைகளும்

"வன்முறையை, பயங்கரவாதத்தை கைவிடுவது அவற்றை வெளிப்படையாக அறிவிப்பது, ஈழத் கோரிக்கையைக் கைவிடுவது, ஐக்கிய இலங்கையை ஏற்றுக் கொள்வது எனவே எமது அளவுகோல்கள், ஜனநாயகம் பன்மைத் துவம் நாடு முழுவதும் இருப்பதை உறுதிப்படுத்துவதுடன் நாட்டின் ஒரு பகுதி ஒரு இனக்குழுவிற்கு சொந்தமாக இருக்க முடியாது என்பதே அமெரிக்காவின் நிலைப்பாடு" இவ்வாறு 20.11.2002 அன்று அமெரிக்க தூதரகத்தில் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றி தூதுவர் ஆஸ்லி வில்ஸ் தெரிவித்தார்.

"நியாயபூர்வமான அபிலாஷைகளை பயங்கரவாத தந்திரோபாயங்களால் ஒரு போதும் வென்றெடுக்க முடியாது



என்பதில் எமது நாடு உறுதியான நிலைப்பாட்டில் இருக்கிறது. ஆதலால் அரசியல் தீர்வில் விடுதலைப் புலிகள் ஈடுபாடு காட்டுவதையிட்டு அமெரிக்கா மிகவும் உற்சாகமடைந்துள்ளது. இந்நிலையில் விடுதலைப் புலிகள் மேலும் ஒரு படி முன்னே சென்று பயங்கர வாதத்தையும் வன்செயல்களையும் கைவிடுவதற்கான தமது ஈடுபாட்டை பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டும். இலங்கையின் இறமையை ஏற்றுக் கொள்ள வேண்டும். மனித உரிமை உட்பட பேச்சுச் சுதந்திரம் ஆட்சியில் பங்களிப்பு, சுதந்திர ஒன்றுகூடல், சட்ட விதியைப் பாதுகாத்தல் என்பனவற்றையும் ஏற்று செயற்படல் வேண்டும். இப்படி" ஒஸ்லோ உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் அமெரிக்க உதவி வெளிவிவகார அமைச்சர் ரிச்சேட் ஆர்மிரேஜ் பேசியிருக்கிறார்.

இவ் இருவரது உரைகளும் இலங்கையின் இனப்பிரச்சினை சம்மந்தமான அமெரிக்காவின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி நிற்கின்றன. இவர்களது ஆணையிடும் தொனியில் அமைந்த ஆலோசனை வடிவிலான கருத்துக்கள் விடுதலைப் புலிகளுக்கு மட்டும் கூறுவதாகவே அமைந்துள்ளன. பேரினவாத ஒடுக்குமுறையைத் தமிழ் மக்கள் மீது ஏவி யுத்தத்தை விரிவுபடுத்தி வந்த இலங்கையின் ஆளும் வர்க்க பேரினவாத சக்திகளுக்கு எந்த வித ஆணையையும் அல்லது ஆலோசனையையும் அமெரிக்கா வழங்கவில்லை என்பது தெளிவாகிறது. அப்படியாயின் அமெரிக்கா தன்னை எந்தப் பக்கத்தில் நிறுத்தியுள்ளது என்பதை எவரும் இலகுவில் புரிந்துகொள்ளலாம்.

உலகில் தமது உரிமைகளுக்காகவும் விடுதலைக்காகவும் போராடும் எந்தவொரு விடுதலை இயக்கத்தையும் பயங்கரவாத அமைப்பு எனக் கூறி அதன் ஆயுதங்களைக் கைவிட வேண்டும் என ஆணையிடும் அதிகாரத்தை அமெரிக்கா இன்று தனது கையில் வைத்திருப்பது போன்றே பேசி வருகின்றது. ஆனால் பயங்கர வாதம் என்பதற்கு அமெரிக்கா கொண்டிருக்கும் அளவுகோள்தான் என்ன, என்பதே பிரதான கேள்வி யாகும். தனது உலக மேலாதிக்கத் திற்கும் முதலாளித்துவ ஏகாதிபத்திய நலன்களுக்கும் எவை எவை தடையாக இருக்கின்றனவோ அவை எல்லாம் பயங்கரவாதம் என்றே அமெரிக்கா விரல் சுட்டுகிறது.

உலகின் பல நாடுகளில் தனது தேவைக்கும் நலன்களுக்கும் அமெரிக்கா பணம், ஆயுதம், ஆலோசனை வழங்கி வளர்த்த சில இயக்கங்களை விடுதலைப் போராட்ட இயக்கங்களாகச் சித்தரித்துக் கொண்டது. உதாரணத்திற்கு முன்னைய சோவியத் யூனியனை உடைத்து துண்டு துண்டு நாடுகளாக்குவதற்கும், யூகோஸ்லாவியாவை உடைத்து நான்கு நாடுகளாக்குவதற்கும், அண்மைய ஆண்டுகளில் கோசோவாவில் இறங்கிக் கொள்வதற்கும் அமெரிக்க இன்றைய தனது பயங்கரவாத அளவுகோலை மறைத்து வைத்துக் கொண்டே செயற்பட்டது. இன்றும் கூட சீனாவைத துண்டாட நிற்கும் தீபேத்திய வாதிகளுக்கும் முஸ்லீம் பிரிவினைவாதிகளுக்கும் உதவுவதில் அமெரிக்கா மும்மரம் காட்டி விடுதலை யின் பக்கம் நிற்பதாகக் காட்டிக் கொள்கிறது. துருக்கியின் ராணுவ ஆக்கிரமிப்புப் பிடியில் இருந்துவரும் குர்திஷ் மக்களது போராட்டத்தை ஒடுக்க முன் நின்றுவரும் அமெரிக்கா ஈராக்கின் எல்லையோரம் இயங்கிவரும் ஒரு குர்திஷ் இயக்கமொன்றை விடுதலை இயக்கம் என அறிவித்து ஆயுதங்கள், பணம் வழங்கி ஆதரவு தெரிவத்து வருகிறது.

இத்தகைய அமெரிக்கா இலங்கையின் விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றி பயங்கரவாத இயக்கம் என்ற அடையாளம் காட்டி அதன் போராட்ட நிலையைக் கைவிடுமாறு ஆதிக்க ஆணை பிறப்பிக்கின்றது. ஒரு போராடி வரும் இயக்கத்தைப் பற்றிய பார்வையில் மார்க்சிச-லெனினிச வாதிகளுக்கும். ஏகாதிபத்திய வாதிகளுக்கும் பலத்த வேறுபாடு உண்டு. இலங்கையில் விடுதலைப் புலிகள் இயக்கமும் அவர்களது போராட்டமும் வரலாற்று நியதிக்கும் கட்டாயத்திற்கும் உட்பட்டதேயாகும். பேரினவாத ஆளும் வர்க்க ஒடுக்குமுறையும் அதற்கு

**வெகுஜனன்**

காரணமான இன முரண்பாடுமே தேசிய இனப்பிரச்சினையை போராட்ட மாகவும் யுத்தமாகவும் வளர்த்துக் கொண்டது. வரலாற்று வளர்ச்சியானது ஒடுக்குமுறைச் சூழலில் ஒரு போராட்டத்தை வேண்டி நின்றது. அந்த இடத்தைப் புலிகள் இயக்கம் நிரப்பிக் கொண்டது. ஒடுக்குமுறைக்கெதிரான மக்களின் அபிலாஷைகளை பிரபாகரனும் புலிகளும் பிரதிபலித்தனர். இத்தகைய வரலாற்று ரீதியான பார்வையுடன் புலிகள் இயக்கம் இழைந்த தவறுகள் என்று கூறப்பட்டுள்ளவற்றைப் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது.

ஏகாதிபத்தியம், பேரினவாத ஆளும் வர்க்கம், பிராந்திய மேலாதிக்கம் என்பவற்றால் விடுதலைப் புலிகள் இயக்கம் தாக்கப்படும் போது நாம் விடுதலைப் புலிகள் பக்கத்தில் உறுதியாக இருத்தல் வேண்டும். அதேவேளை மக்களின் அன்றாட வாழ்வில் ஜனநாயகம், மனித உரிமை, சுதந்திரம் என்பவற்றை புலிகள் இயக்கம் மீறிக் கொள்ளும் சந்தர்ப்பங்களில் நாம் மக்களின் பக்கம் நின்று குரல் கொடுக்க வேண்டும். இதுவே நேர்மை யான மார்க்சிச-லெனினிச நிலைப் பாடாகும்.

இத்தகைய நிலைப்பாட்டில் நின்றே அமெரிக்க மேலாதிக்கத் திமிருடன் பேசிவரும் ஆமிரேஜ்-ஆஸ்லி வில்ஸ் ஆகியோரின் பேச்சுக்களை எதிர்க்கின்றோம்.

விடுதலைப் புலிகள் இயக்கமும் அதன் தலைவர் பிரபாகரனும் கடந்த இருபது வருடங்களில் பல்வேறுபட்ட நெருக்கடிகள், பாரிய இழப்புக்கள், வெற்றிகள், தோல்விகள், முன்னேற்றம், பின்வாங்கல் என்பவற்றை யுத்த முனைகளின் ஊடே பெற்று வந்துள்ளனர். அதேவேளை அரசியல் கொள்கை நிலைப்பாட்டிலும் நிறைய அனுபவங்களையும் பட்டறிவுகளையும் பெற்று வந்துள்ளனர். அதன் மூலமாக சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான பிரதேச சுயாட்சி என்னும் அரசியல்



தீர்வைப் பரிசீலிக்கவும் தயாராக வந்துள்ளனர். இலங்கையின் யதார்த்த நிலைமை களிலும் அந்திய தலையீடு களை நிராகரிப்பதிலிருந்தும் எழுந்த தூரநோக்குடைய கொள்கையாக அமைவதே சரியானதாகும். அமெரிக்கா வின் புற நிர்ப்பதத்தால் ஏற்படுவதாக அமையக் கூடாது. அவ்வாறு இருக்குமானால் அவை அபாயம் மிக்கவை மட்டுமன்றி தமிழ் மக்களினதும் விடுதலை வேண்டி நிற்கும் அனைவரினதும் அபிலாஷைகளுக்கு மாறான ஒன்றுமாகும். சுருங்கக் கூறின் தமிழ் மக்களினும் ஏனைய ஒடுக்கப்படும் முஸ்லீம், மலையகத் தமிழ் மக்களும் அந்நிய ஆதிக்க சக்திகளால் வழிநடத்தப்படக் கூடாது. அதே போல பேரினவாத ஆளும் வர்க்கத்தின் ஒரு பிரிவினருக்கு வளைந்து கொடுக்கவும் கூடாது. இந்திய பிராந்திய மேலாதிக்கத்தை துணிவுடன் எதிர்த்து நின்ற விடுதலைப் புலிகள் அமெரிக்க உலக மேலாதிக்க ஆணையிடும் போக்கிற்கு அடிபணிந்து விடக்கூடாது. ஏனெனில் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் என்பது ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்திலிருந்து பிரிக்கப் படமுடியாத ஒன்றேயாகும் என்பது முழுமையாக உணரப்படல் வேண்டும். அது மட்டுமன்றி தமிழ் மக்களின் ஜனநாயக, சுதந்திரம், மனித உரிமை, கருத்துச் சுதந்தரம் என்பனவற்றை அங்கீகரித்து பரந்துபட்ட ஐக்கியத்தைத் தோற்றுவிப்பது அடிப்படையானதாகும். அல்லாதுவிடின் ஏகாதிபத்தியமும் பிராந்திய மேலாதிக்க சக்திகளும் பேரினவாதிகளும் தமிழ் மக்கள் மத்தியில் நிலை கொள்வதற்கு வாய்ப்பாகிவிடும் அபாயம் உருவாகிக் கொள்ளவே செய்யும்.

•••

# பாட்னா மாநாட்டில் தோழர் தம்பையா

இந்தியாவின் பீகார் மாநிலத் தலைநகரான பாட்னாவில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாக்ஸிஸ்ட்-லெனினிஸ்ட் (விடுதலை) நவம்பர் 25 முதல் 30 வரை தனது ஏழாவது தேசிய மாநாட்டை நடாத்தியது. அம் மாநாட்டில் சகோதரக் கட்சியாக புதிய ஜனநாயகக் கட்சியை கலந்து கொள்ளும்படி அழைப்பு விடுத்திருந்தது. மேற்படி அழைப்பை ஏற்றுக் கொண்ட கட்சி தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி இ.தம்பையாவை அம் மாநாட்டில் கலந்து கொள்ள அனுப்பி வைத் துள்ளது. மேற்படி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய தோழர் தம்பையா உலகின் பல நாடுகளில் இருந்தும் அம் மாநாட்டிற்கு வருகை தந்த மாக்ஸிஸ-லெனினிஸ்ட் கட்சிகளின் பிரதிநிதிகளுடனும் இந்தியாவின் பிற மாக்ஸிஸ-லெனினிஸ்ட் கட்சிகளின் பிரதிநிதிக ளுடனும் பேச்சுவார்த்தை, கலந்துரை யாடல்களில் கலந்து கொண்டார். மாநாட்டில் அவர் ஆற்றிய உரையும் ஏனைய விபரங்களும் அடுத்த இதழில் வெளிவருகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நன்றி - நூலகத்திட்டம்



# ஒஸ்லோ மாநாடும் மாவீரர் தின உரையும்

நாய்கள் குரைத்துக் கொண்டே இருக்கின்றன. வண்டியும் சென்று கொண்டேயிருக்கின்றது. வண்டி எத்திசை நோக்கிச் செல்கின்றது. எதனை எடுத்துச் செல்கிறது. இறுதியாகச் சென்றடைய வேண்டிய இடத்தை அது சென்றடையுமா?

ஒஸ்லோ வரைக்கும் சென்றுள்ள அரசாங்கம் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை. பேரினவாதிகளின் கூக்குரல், தீர்வின் எதிர்காலம் என்பன பற்றி மேற்கண்டவாறுதான் சிந்திக்க வைக்கிறது.

அதேவேளை கடந்த 27ந் திகதி வன்னியில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் ஆற்றிய மாவீரர் தின உரை சமாதான சூழலுக்கும் பேச்சுவார்த்தைக் களத்திற்கும் வலுச் சேர்த்து நிற்பதையும் காண முடிகின்றது. அதேவேளை அவ்வுரையில் குறிப்பிடப்பட்டுள்ள சில விடயங்கள் சிலரை ஆழ்ந்து சிந்திக்குமாறும் சுட்டிக் காட்டியுள்ளது.

ஒஸ்லோவின் உதவி வழங்கும் நாடுகள் நடாத்திய மாநாடு வரலாற்று முக்கியத்துவம் கொண்ட ஒன்று என்று ஊடகங்கள் உரத்துக் கூறிக் கொண்டன. அதற்கு ஆதாரமாக அமெரிக்கா. பிரிட்டன். கனடா. ஐரோப்பிய யூனியன். யப்பான் உட்பட நாற்பது நாடுகள் கலந்து கொண்டதையும் சுட்டிக் காட்டின. அவற்றுக்கும் மேலாக பத்தொன்பது வருடங்களாகப் போர்க் களத்திலே ஒருவரை ஒருவர் கொன்றொழிக்கும் எதிரிகளாக இருந்து வந்த அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஒரே மேசையில் இருந்து கொண்டு ஒரே கோரிக்கையை உதவி வழங்கும் நாடுகளின் முன்பாக முன்வைத்த நிலைமையையும் முக்கியமான அம்சமாகக் கொள்கின்றனர்.

ஒஸ்லோவில் கூடிய நாடுகளில் யப்பான் தவிர்ந்த அனைத்து நாடுகளுமே முக்கியமாக மேற்குலக நாடுகள் என்பது கவனத்திற்குரியதாகும். அவை அம்மாநாட்டில் அரசாங்கம், புலிகள் ஆகிய இரு தரப்பினரிடமிருந்தும் குறிப்பாக விடுதலைப் போராட்டத்தில் மும்முரம் காட்டி நின்ற புலிகள் இயக்கத்திடமிருந்து இனிமேல் போராடப் போவதில்லை என்ற வாக்குறுதியை ஒரு விதத்தில் பெறுவதையே நோக்கமாகக் கொண்டிருந்தது. புலிகளுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளதாக நமது தமிழ் ஊடகப் பரப்புரையாளர்கள் எழுதிக் கொண்ட அதே வேளை புலிகளை கண்களுக்குத் தெரியாத ஒரு வகைக் கூட்டுக்குள் கொண்டுவர ஒஸ்லோ மாநாடு உதவியுள்ளதாக ஆளும் தரப்பிலே உள்ளூர மகிழ்ச்சி தெரிவிக்கப்படுகின்றது. இதில் மேற்குலக நாடுகள் ஆளும் தரப்பிற்கு மற்றொரு தளத்திலே உதவியுள்ளன. இந்த உதவி அவை வழங்கப்போகும் நிதி உதவியை விட பல மடங்கு பெறுமதியானதாகும் என்று கூறப்படுகின்றது.

இன்று சமாதானத்திற்காக குரல் கொடுத்து வாக்குறுதி வாங்கி நிற்கும் இதே மேற்குலக நாடுகள்தான் பத்தொன்பது வருடகால கொடிய யுத்தத்திற்கு ஆளும் பேரினவாத உயர் வர்க்க சக்திகளுக்கு ஆயுதங்களும், ஆலோசகர்களும், பணமும் கொடுத்து வந்தவர்கள். அதற்கும் மேலாக இனப் பிரச்சினைக்கான மூல விதையை இலங்கையில் ஊன்றிச் சென்றவர்களும் இவர்களில் உள்ளடங்கும்.

இரு இனங்களிடையிலான நட்பு வகை சார்ந்த முரண்பாட்டை பகை முரண்பாடாக்கி போர்க் களத்தை வளர்த்து தமிழ், சிங்கள மக்களின் இரத்த ஆற்றை ஓடவைத்து லட்சத்திற்கு மேற்பட்டவர்களின் உயிர் அழிவுக்குக் காரணமானவர்கள். கோடிக் கணக்கான சொத்தழிவிற்கும் லட்சக் கணக்கில் மக்கள் இடம்பெயரவும் உதவி ஒத்தாசை புரிந்தவர்கள் இதே மேற்குலகத்தவர் என்பது மறக்கப்படலாகாது.

பத்தொன்பது வருடகால யுத்தம் இதே மேற்குலக நாடுகளுக்குத் தேவைப்பட்ட ஒன்றாகும். ஆயுதங்களை விற்றுப் பிழைக்கவும், அகதிகளாக நம்மவர்களை வரவழைத்து அவர்களது உழைப்பைச் சுரண்டவும், நமது தேசிய பொருளாதாரத்தை இருந்த இடம் இல்லாமல் அழித்தொழிக்கவும் இவ் யுத்தத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டனர். இவற்றோடு எண்பதுகளில் இருந்து தாராளமயம், தனியார் மயத்தை யுத்தத்தின் மறைவில் நின்று நடைமுறைப்படுத்திக் கொண்டனர். பல்தேசியக் கம்பெனிகளின் தங்கு தடையற்ற வரவிற்கும் வழி வகுக்கப்பட்டது. இவற்றுடன் தென்னாசியப் பிராந்தியத்தின் ராணுவ யுத்த தந்திர வியூகங்களுக்கான அடிப்படைகளும் உள்ளூர உறுதிப்படுத்தப்பட்டன.

சுருங்கக் கூறின் மேற்குலக நாடுகளின் வெவ்வேறு தேவைகளும் அமெரிக்காவின் குறிப்பான நலன்களுக்கான செயற்பாடுகளும் இவ் யுத்தத்தின் மூலம் ஈடேற்றிக் கொள்ளப்பட்டு விட்டன. ஆதலால் இரண்டு விடயங்களுக்கு ஊடாக இலங்கையில் நிலைத்த சமாதானம் அமெரிக்காவிற்கும் மேற்குலக நாடுகளுக்கு அவசியம் தேவைப்படுகின்றது. ஒன்று, ஏகாதிபத்திய உலகமயமாக்கலுக்கு இலங்கையிலும் தென்னாசியப் பிராந்தியத்திலும் சமாதான சூழல் அவசியமாகின்றது. இரண்டாவது, 2001 செப்டம்பர்11ன் அமெரிக்காவின் மீதான தாக்குதலுக்குப் பின் விடுதலைப் புலிகள் இயக்கம் போன்ற வல்லமை மிக்க போராட்ட இயக்கங்களை நிராயுத பாணிகளாக்க வேண்டும் என்பதாகும்.

அ. பூபதி

இத்தகைய விடயங்களின் பிரதிபலிப்பே ஒஸ்லோ மாநாட்டின் உள்ளார்ந்த நோக்கங்கள் கொண்டிருந்தன. மூன்றாம் உலக நாடுகளையும் போராடும் விடுதலை இயக்கங்களையும் தத்தமது கைகளில் போட்டுக் கொள்வதற்கு மேற்குலகம் கையாளும் முதல்தர தந்திரோபாயம் பணக் கட்டுக்களை மேசையில் வைத்துப் பேரம் பேசுவதேயாகும். அதுவும் ஒரேயடியாக வாக்குறுதியளிக்காது ஒன்றன் பின் ஒன்றான சோதனைகளுக்கு ஊடாக சம்மந்தப்பட்ட தரப்புகளை இழுத்தெடுத்துக் கொள்வதாகும். அதனாலேயே ஒஸ்லோ மாநாடு நிதி உதவி வழங்கும் மாநாடு அல்ல என்றும் அதற்கான நாடி பிடித்துப் பார்த்து வாக்குறுதியைப் பெற்றுக் கொள்ளும் மாநாடு என்று கூறப்பட்டுள்ளது. அதில் திருப்தி ஏற்பட்ட பின்பே அடுத்த வருடத்தில் யப்பானில் நடைபெற உள்ள மாநாட்டில்தான் எவ்வளவு தொகை ஒதுக்குவது என்பதைத் தீர்மானிக்கப் போகிறார் களாம்.

மேற்படி மாநாட்டில் அரசாங்கமும் புலிகள் இயக்கமும் யுத்தம் செய்வதில்லை என்ற வாக்குறுதியை வழங்கியதுடன் புனரமைப்பு, மறுசீரமைப்பு, புனர்வாழ்வு என்பவற்றுக்கான கூட்டுக் கோரிக்கையை இந்த மேற்குலகத்தவர்கள் மகிழ்ச்சி கொள்ளும் அளவுக்கு முன்வைத்துள்ளார்கள். இருந்தபோதிலும் அமெரிக்கா, விடுதலைப் புலிகளிடம் மேலதிக வாக்குறுதியைப் பெற்றுக் கொள்ளும் இரண்டு அம்சங்களை வலியுறுத்தியுள்ளதையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும். ஆயுதங்களைக் கைவிட வேண்டும், தனிநாட்டக் கோரிக்கையை துறக்க வேண்டும் என்பனவே அவையாகும்.

ஒஸ்லோ மாநாடு சாராம்சத்தில் அமெரிக்க மேற்குலக நலன்களை உள்ளடக்கிய ஒன்று மட்டுமன்றி ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் இருப்பிற்கும் எதிர்காலத்திற்கும் தேவையானவற்றை வழங்கியுள்ளது. மறுபுறத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஒரு வகைக் கட்டாயத்தையும் நிர்ப்பந்த சூழலையும் உருவாக்கி அந்த வட்டத்திற்குள் நிற்குமாறு வலியுறுத்தியுள்ளது.தமிழ் மக்கள் இத்தகைய சமாதான சூழலை நிராகரிக்க முடியாத ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். விபரிக்க முடியாத இழப்புகளையும் அழிந்து காணப்படும் வடக்கு கிழக்கை மீட்டு நிலை நிறுத்துவதற்கு இதைவிட வேறு வழி நாட முடியாத நிலையே காண முடிகின்றது.

இந்தியா இம் மாநாட்டில் கலந்து கொள்ள மறுத்துவிட்டது. அவ்வாறு மறுத்தமைக்கு காரணம் புலிகள் இயக்கத்தோடு இந்தியா கொண்டிருக்கும் வன்மம் மட்டுமன்றி பிராந்தியத்தின் மேலாதிக்கம் அமெரிக்க மேற்குலக சக்திகளின் கைகளுக்குச் சென்றடைய வழிவகை ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் காரணமேயாகும். ஆதலால் ஆரம்பம் முதலே இந்தியா இப்பேச்சுவார்த்தையைக் குழப்பும் பேரினவாதிகளுக்கு பின்புல ஆதரவும் அனுசரணையும் வழங்கி வந்துள்ளது. இனிமேலும் இந்தியா குழப்பும் தரப்பிலேயே இருந்து. கொள்ளும் என்பது புலனாகிறது. இவற்றிலிருந்து தற்போதைய இலங்கை இனப்பிரச்சினையின் நிலைப்பாட்டின் பின்னால் இலங்கை மீது அமெரிக்காவா அல்லது இந்தியாவா மேலாதிக்கப் பிடியை வைத்திருப்பது என்ற போட்டி வலுவடைந்து நிற்பதைக் காண முடிகின்றது.

ஒஸ்லோ மாநாட்டிற்கு இரண்டு நாட்கள் கழித்து மாவீரர் தின உரையை புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரன் வன்னியில் இருந்து ராணுவ உடையில் நின்று நிகழ்த்தியிருக்கிறார். அவ் உரையில் சமாதான சூழலுக்கு இசைவான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அத்துடன் உள்ளான சுயநிர்ணய உரிமை என்ற அர்த்தத்தில் பிரதேச சுயாட்சியைத் தாங்கள் சாதகமாகப் பரிசீலிக்கத் தயார் என்றும் கூறி உள்ளார். இதனை சிங்கள மக்கள் இனவாதிகளை ஒதுக்கி விட்டு ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார். அதுமட்டுமன்றி தமிழ் மக்களுக்கு அவ்வாறு பிரதேச சுயாட்சி சுயநிர்ணய உரிமை அடிப்படையில் வழங்கப்படுவது மறுக்கப்பட்டால் பிரிந்து செல்வதற்கான போராட்டம் தொடரும் என்பதையும் பிரபாகரன் வலியுறுத்தத் தவறவில்லை. இதனை சிங்கள மக்களும் பேரினவாதிகளும் கவனத்தில் எடுப்பது அவசியமாகும்.

புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரை நிரந்தர சமாதானத்திற்கான திசையைக் காட்டி நிற்கின்றது. புலி விரோத வக்கிர நிலைப்பாட்டில் நின்று பார்ப்பவர்களைத் தவிர சமாதானத்தின் மீது அக்கறையும் அரசியல் தீர்வில் நம்பிக்கை கொண்ட அனைவரும் மாவீரர் தின உரையின் சாதகமான அம்சங்கள் அனைத்தையும் ஏற்றுக் கொள்ளவே செய்வார்கள். பிரதேச சுயாட்சி என்பது யதார்த்த சூழலை விளங்கி ஏற்றுக் கொண்ட ஒரு நிலைப்பாடாகும். இதற்கும் பேரினவாதிகள் இணங்கிக் கொள்ளாது விட்டால் எதிர்காலம் மிகப் பயங்கரமானதாகவே அமைந்து கொள்ளும் என்பதில் ஐயமிருக்க முடியாது. ஏனெனில் புலிகளின் படைத்திறனும். போரிடும் ஆற்றலும் தமக்கென கட்டுப்பாட்டுப் பிரதேசமும் இருந்து வருவது கவனத்திற்கு கொள்ளல் வேண்டும். எனவே ஆளும் பேரினவாத சக்திகள் எவையாக இருந்தாலும் மிகுந்த கவனத்துடன் தமது முடிவுகளை மேற்கொள்ளல் வேண்டும் என்பதையே மாவீரர் தின உரை உணர்த்தி நிற்கின்றது.


இவ்வேளை அரசாங்கம். புலிகள் ஆகிய இரு தரப்பினருக்கு மட்டுமன்றி சகல அரசியல் சக்திகளுக்கும் பொது அமைப்புகளுக்கும் மக்களுக்கும் பாரிய வரலாற்றுக் கடமை ஒன்று உண்டு. அதாவது உள்ளார்ந்த நோக்கங்கள் படிந்திருந்த போதிலும் இன்றைய சமாதான முன்னெடுப்புகளை நமது நாட்டிற்கும் மக்களுக்கும் குறிப்பாக வடக்கு-கிழக்கு மக்களுக்கும் ஏனைய தேசிய இனங்களுக்கும் சாதகமானதாகப் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும் என்பதேயாகும். அதே வேளை விழிப்புடனும் முன்னெச்சரிக்கையுடனும் விடுதலைப் புலிகள் இயக்கம் இருந்து தூரநோக்கில் சகல சக்திகளையும் ஐக்கியப்படுத்தி முன்செல்வது பற்றி ஆழ்ந்து சிந்தித்துச் செயல்பட வேண்டிய தருணமும் இதுவேயாகும்.

எனவே ஒஸ்லோ மாநாட்டைத் தொடர்ந்து வரும் அடுத்தடுத்த கட்டங்களை அனைத்து சக்திகளும் கூர்ந்து நோக்குவதும் இதுவரை அடையப்பட்ட முன்னேற்றங்களைப் பாதுகாத்து முன்னெடுத்து நியாயமான அரசியல் தீர்வை நோக்கிச் சென்று நிரந்தர சமாதானத்திற்கு செயல்பட வேண்டும் என்பதே அடிப்படையான தாகும்.

---

# லக்ஷ்மன் கதிர்காமர்

## இன்றைய அரசாங்கத்தால் பராமரிக்கப்படுவது ஏன்?



ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐ.தே.மு. பதவியேற்று ஒரு வருடமாகப் போகின்றது. ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கம் முன்னாள் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் பாதுகாப்புச் செலவுக்கென 2002ம் ஆண்டிற்கு ஒரு கோடி ரூபாவை ஏற்கனவே ஒதுக்கியிருந்தது. கதிர்காமரின் பாவனையில் இன்னமும் இரண்டு குண்டு துளைக்காத பென்ஸ் கார்கள், மூன்று சாதாரண பென்ஸ் கார்கள், இரண்டு நிசான் பிறீமேறா கார்கள், இரண்டு மிற்சுபிசி பஜோரோ ஜீப்கள், ஒரு நிசான் சனி கார், ஒரு டபள் கப் வாகனம், ஒரு முச்சக்கர வண்டி, இரண்டு மோட்டார் சயிக்கிள்கள் இருந்து வருகின்றன.

இத்துடன் இரண்டு கையடக்க தொலைபேசிகள், நான்கு IBM கம்யூட்டர், ஒரு டெல் கொம்யூட்டர், நான்கு லேசர் பிறின்ரர்கள், ஒரு எப்சன் வர்ண பிறின்டர், ஒரு ஸ்கானர்.

இவற்றுடன் இத்துடன் 41 அங்குல சொனி ரீ.வி. ஒரு ஸ்ரீறியோ செற்- ஆறு ஸ்பீக்கர்களுடையது. ஒரு தொம்சன் செற், ஒரு சற்றலைட் ரிசீவர், ஒரு சொனி வீடியோ டெக், ஒரு பயனியர் வீடியோ செற், ஒரு பயனியர் ஓடியோ, வீடியோ மல்றி சனல் ரிசீவர், ஒரு கெஸ்ட்றனர் போட்டோ கொப்பி இயந்திரம், ஒரு கனன் போட்டோ கொப்பி இயந்திரம்.

இத்தனை மட்டுமல்ல காரியாலய மேசைகள். கதிரைகள். மாநாட்டு மேசைகள், மின் விசிறிகள், அலுமாரிகள், றாக்கைகள் காரியாலயத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. இதைவிட வீட்டிற்கும் தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

முன்னாள் வெளிநாட்டமைச்சரின் பாதுகாப்புக்கென இருபதுக்கு மேற்பட்ட படையினரை இலங்கை இராணுவம் வழங்கியுள்ளது. ஒரு படைவீரருக்கு மாதந் தோறும் ரூபா.12,000/- வழங்கப்படுகிறது.

கதிர்காமர் வெளியே செல்லும்போது அவரது வாகனத்திற்கு முன்னால் ஒரு பாதுகாப்பு வாகனமும் பாதுகாப்பாகச் செல்லும். கொழும்பு-07, விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள வாசஸ்தலத்தில் காவலில் உள்ளவர்களை விட இந்தப் பாதுகாப்பு மேலதிகமானது. குறித்த அரசாங்க வாசஸ்தலத்திலேயே இன்றும் கதிர்காமர் அரச செலவிலேயே வாழ்ந்து வருகிறார்.

கதிர்காமர் தனது மனைவியின் பெயரில் ஒரு வீட்டை 4 கோடி 85 இலட்ச ரூபாவிற்கு வாங்கியுள்ளார். அந்த வீட்டை 4 கோடி ரூபாவிற்கே வாங்கப்பட்டதாக உறுதி எழுதும்படி கதிர்காமர் கேட்டதாக கதிர்காமரின் முன்னைய நெருங்கிய நண்பர் மகிந்த எல்லாப்பொல கூறுகிறார். ஹவ்லக் வீதியில் இருந்த தனது வீட்டையும் மனைவியின் வேறு சொத்தையும் விற்று போதாததற்கு பாரிய வங்கிக் கடனும் பெற்றதாகக் கதிர்காமர் தெரிவிக்கிறார்.

சொந்த வீடு வாங்கிய பின்னும் அரச வீட்டிலிருந்து கதிர்காமர் ஏன் இன்னமும் வெளியேறவில்லை. 2003ம் ஆண்டிற்கான செலவு ஒதுக்கீட்டில் கதிர்காமருக்கென ரூபா.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வருட முற்பகுதியில் கதிர்காமரை உத்தியோகபூர்வமான வாசஸ்தலமான விஜேராம மாவத்தையில் பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கூன் சந்தித்தபோது கதிர்காமர் வெளிநாட்டமைச்சராக இருந்தபோது வாங்கிய சில விலை உயர்ந்த பொருள்களை அங்கேயே விட்டு வைப்பதற்கு சம்மதம் தெரிவித்திருந்தார்.

முன்னைய ஆட்சியின் வெளியுறவு அமைச்சரிடமிருந்து வாகனங்கள். உத்தியோகபூர்வ வீடு என்பன புதிய அரசாங்கத்தால் பதினொரு மாதங்களாகியும் மீளப் பெறப்படாத நிலையில் தற்போதைய வெளி நாட்டமைச்சரின் வாகனங்களுக்காக அரசாங்கம் 2-1.ჿ 2 கோடி ரூபா செலவிட நேரிட்டது. புதிய வெளிநாட்டமைச்சரின் வாசஸ்தலத்தை ஏற்பாடு செய்ய மேலதிகச் செலவும் ஏற்பட்டுள்ளது.

ஆதாரம் Sunday Leader
24-11-2002

இத்தனைக்கும் லக்ஷ்மன் கதிர்காமர் பொதுசன முன்னணியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் மட்டுமன்றி ஜனாதிபதியின் ஆலோசகராகவும் இருந்து வருகின்றார். அவ்வாறெனில் லக்ஷ்மன் கதிர்காமருக்கும் பிரதமர் ரணிலுக்கும் என்ன உறவு இருந்து வருகின்றது. கதிர்காமரின் தேவை இன்னும் இந்த அரசாங்கத்திற்கு அவசியமாக உள்ளதா? ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய விடயமேயாகும். ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தோர் எவராக இருந்தால் என்ன? எந்தப் பக்கத்தில் இருந்தால் என்ன? எல்லாம் ஒன்றுதான். கடந்த பொதுத்தேர்தலக்குப் பின் பாரளுமன்றத்திற்கு மறைந்த கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் மு.சிவசிதம்பரம் சக்கர நாற்காலியில் வந்திருந்தபோது கதிர்காமர் அவருக்கு வாழ்த்துக் கூறினார். அதனை ஏற்றுக் கொண்ட சிவசிதம்பரம் கதிர்காமருக்கு உள்ள ஆபத்தைச் சுட்டிக்காட்டி மிக அவதானமாக இருக்கும்படி அறிவுரை கூறியதாகவும் எழுதப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நன்றி - நூலகத்திட்டம்



# புதிய-ஜனநாயக கட்சியின் 4வது தேசிய மாநாடு நவம்பர் 8ம் 9ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் வெற்றிகரமாக நடந்தேறியது.

## சிறப்பு மேலதிக இணைப்பு

புதிய ஜனநாயகக் கட்சியின் 4வது தேசிய மாநாடு கடந்த 8ம், 9ம் நவம்பர் 2002 திகதிகளில் யாழ்ப்பாணத்தில் வெற்றிகரமாக நடைபெற்றது. 8ம் திகதி காலையில் யாழ் நகரத்தின் "சிற்றி ஹோல்" மண்டபத்தில் இம்மாநாடு ஆரம்பமாகியது. நாட்டின் வடக்கு-கிழக்கு, மலையகம், கொழும்பு பிரதேசங்களில் இருந்து மாநாட்டுப் பிரதிநிதிகள் ஒன்று கூடினர்.

தோழர் சி.கா.செந்திவேல் இந் நான்காவது தேசிய மாநாட்டிற்கான அறிவிப்பை பிரதிநிதிகள் முன்பாக முன்வைத்து நிகழ்ச்சி நிரலையும் சமர்ப்பித்தார். அதனை ஏற்றுக்கொண்ட பிரதிநிதிகள் மாநாட்டிற்கான தலைமை குழுவைத் தெரிவு செய்தனர்.




*கட்சியின் நான்காவது தேசிய மாநாட்டை பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் தொடக்கி வைத்து நிகழ்ச்சி நிரலைச் சமர்ப்பித்து உரையாற்றுகிறார். தலைமை குழுவில் தோழர்கள் இ.கா.சூடாமணி, இ.தம்பையா, க.தணிகாசலம், எஸ்.பன்னீர்செல்வம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம்.*

தோழர்கள் சி.கா.செந்திவேல், இ.தம்பையா, க.தணிகாசலம், எஸ்.பன்னீர் செல்வம், இ.கா.சூடாமணி ஆகியோர் அடங்கிய தலைமைக் குழு மாநாட்டிற்குத் தலைமை தாங்கியது. மறைந்த கட்சித் தோழர்களுக்கான இரண்டு நிமிட புரட்சிகர நினைவு மௌன அஞ்சலியுடன் மாநாடு ஆரம்பித்தது. தோழர் இ.தம்பையா ஆரம்ப உரையை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் இந் நான்காவது தேசிய மாநாடு நடைபெறும் தேசிய சர்வதேசிய நிலைமைகளின் சூழலை மிக உன்னிப்பாக அவதானித்து மாநாட்டு விவாதங்களும் முடிவுகளும் மேற்கொள்ளப்படும் அவசியத்தைச் சுட்டிக் காட்டினார். முன்னைய மூன்று தேசிய மாநாடுகள் அவ்வக் கால கட்டங்களில் எடுத்து வந்த தூரநோக்குடைய முடிவுகள் தீர்மானங்களையும் தொட்டுக் காட்டி அடுத்த நான்கு வருடங்களுக்கான கட்சியின் கொள்கை, வேலைத்திட்டங்கள், கட்சி அமைப்பை விரிவாக்குதல் போன்றவற்றில் இம் மாநாடு அதிக கவனத்தைச் செலுத்த வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டினார்.

அதனையடுத்து தோழர் சி.கா.செந்திவேல் மாநாட்டிற்கான தேசிய நிலைமை பற்றிய அரசியல் அறிக்கையைச் சமர்ப்பித்து உரையாற்றினார். அறிக்கையின் முக்கிய சாராம்சங்களை விளக்கிக் கூறிய அவர் நீண்ட அவ் அறிக்கையினை மாநாட்டுப் பிரதிநிதிகள் குழுநிலை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

**அவ் அரசியல் அறிக்கையின் ஆரம்பத்தில் இலங்கையின் சமூக அமைப்பின் தன்மை பற்றியும் அதன் முரண்பாட்டுக் கூறுகள் பற்றியும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

நமது இலங்கை நாடு பின்தங்கிய மூன்றாம் உலக நாடுகளில் ஒன்றாகவே இருந்து வருகின்றது. கிராமங்களையும், விவசாயத்தையும், சிறு கைத்தொழில்களையும் அடிப்படையாகக் கொண்டு பல் இனங்கள் வாழ்ந்து வரும் இந்நாடு நிலவுடமை முதலாளித்துவ வர்க்கங்களின் ஆதிக்கப்பிடியின் கீழேயே இருந்து வருகின்றது. பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டுத் தளங்கள் அனைத்திலும் இவ் நிலவுடமை முதலாளித்துவ கட்டமைப்பு இறுக்கமும் கருத்தியல் ஆதிக்கமுமே காணப்படுகின்றது. இவற்றுடன் ஏகாதிபத்திய சக்திகள் அன்று முதல் இன்று வரை இணைந்து ஒன்றையொன்று அரவணைத்தபடி செயலாற்றி நிற்கின்றன.

இதன் மூலம் 1948ல் பெறப்பட்டதாகக் கூறப்படும் சுதந்திரம் என்பது ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்களுக்கும் தேசிய இனங்களுக்கும் அர்த்தமற்றதொன்றாகவே இருந்து வருகின்றது. பல மூன்றாம் உலக நாடுகளில் காணப்படுவது போன்று நமது நாடும் நவ கொலனித்துவ அமைப்பு முறைக்குள் இறுக்கப்பட்டு இன்றைய ஏகாதிபத்திய உலகமயமாதலினால் கபளீகரம் செய்யப்பட்டு வரும் நிலையிலேயே உள்ளது. முன்னைய கொலனித்துவம் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தால் வழி நடாத்தப்பட்டது. இன்றைய நவ கொலனித்துவ உலகமயமாதல் அமெரிக்காவின் தலைமையின் கீழ் முன்னெடுக்கப்படுகின்றது.

இத்தகைய சமூக கட்டமைப்பின் கீழ் ஏகப் பெரும்பான்மை மக்களான தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள் சிறு தொழில் புரிவோர், அரசாங்க-தனியார் துறை ஊழியர்கள் மற்றும் உழைக்கும் மக்கள் என்போர் வர்க்க அடிப்படையில் பொருளாதார சுரண்டலுக்கும் அரசியல் அடக்குமுறைகளுக்கும் ஆளாக்கப்பட்ட நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். நிலவுடமை-முதலாளித்துவ ஏகாதிபத்திய சார்பு சக்திகள் ஆளும் வர்க்கத் தரப்பாகவும் தொழிலாளர்கள், விவசாயிகள் உள்ளிட்ட பரந்துபட்ட உழைக்கும் மக்கள் அனைவரும் ஆளப்படும் வர்க்கமாகவும் இருந்து வருகின்றனர். உள்ளார்ந்த ரீதியில் வர்க்கப் போராட்டக் கண்ணோட்டத்தில் கூர்ந்து நோக்கும் போது மேற்கூறிய இரு வர்க்கத் தரப்பினருக்கும் இடையிலான முரண்பாடு என்பது நேர் எதிரான பகை நிலை கொண்டதாகவும் அடிப்படையானதாகவும் நீடித்து வருகின்றது.

நமது நாடு பல்லினங்களைக் கொண்டதும், நான்கு மதங்களைப் பின்பற்றும், இரு மொழிகளைப் பேசும் மக்களையுடையதுமான நாடு என்பதைத் தெளிவுபடுத்தியது. சிங்கள, தமிழ், முஸ்லீம், மலையகத் தமிழ்த் தேசிய இனங்கள் நான்கும் அவற்றுடன் பறங்கியர், மலேய், வேடர் ஆகிய சிறுபான்மைச் சமூகங்களும் வாழுகின்ற நாடு இலங்கை என்ற யதார்த்தத்தை எடுத்துக் காட்டியது. எனவே ஒவ்வொரு தேசிய இனத்தினதும் சுயநிர்ணய உரிமை பரஸ்பரம் மதிக்கப்படல் வேண்டும் என்பதை வலியுறுத்திக் கொண்டது. சுயநிர்ணய உரிமையானது அதன் மார்க்சிச-லெனினிச அர்த்தத்தில் பிரிந்து போவதுடனான சுயநிர்ணய உரிமையே என வகுத்தளித்த தோழர் லெனின் அதனை நடைமுறைப்படுத்தும் வர்க்க சக்திகள் பற்றியும் எடுத்துரைத்துள்ளார். அவருக்குப் பின்னான காலப்பகுதியில் சுயநிர்ணய உரிமை பற்றிய கோட்பாடு மேலும் தோழர்கள் ஸ்டாலின், மாஓசேதுங் உட்பட ஏனைய மார்க்சிசத் தலைவர்களாலும் மார்க்சிச-லெனினிசக் கட்சிகளாலும் புதிய சூழலில் வளர்த்தெடுக்கப்பட்டது. ஒன்றுபட்ட நாட்டிற்குள் சுயநிர்ணய உரிமையைப் பிரிந்து போகாத வழிமுறைகளின் ஊடாகவும் பிரயோகித்து தேசிய இனங்கள் மத்தியில் ஐக்கியத்தையும், சமத்துவத்தையும் நிலை நிறுத்த முடியும் என்பதையும் சோஷலிச நாடுகளின் அனுபவங்கள் எடுத்துக் காட்டின. அவை குறிப்பிட்ட நாடுகளிலே சாத்தியமாக்கப்பட்டமை நமக்கு முன்னுதாரணமாக அமைந்ததையும் நமது கட்சி சுட்டிக்காட்டி வந்துள்ளது. அவற்றின் முன் அனுபவங்களைக் கொண்டு நமது நாட்டிற்குரிய தீர்வைத் தேடிக் கொள்ள முடியும் என்பதை எடுத்துக் காட்டியது.

இவ்வாறு அடிப்படை முரண்பாட்டையும் பிரதான முரண்பாட்டையும் அவை சார்ந்த ஒடுக்குமுறைகளையும் அடையாளம் கண்டு வகைப்படுத்தி நிற்கும் எமது கட்சி ஏனைய முரண்பாடுகளையும் ஒடுக்குமுறைகளையும் தெளிவுடன் காண்கின்றது. அவற்றில் ஒன்று, சாதிய முரண்பாடும் ஒடுக்குமுறையும் ஆகும். சாதிய ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டங்கள் ஏற்கனவே அறுபதுகளில் வர்க்கப் போராட்ட அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டன. அவற்றை முன்னெடுத்து தலைமை தாங்கி நின்றது மார்க்சிச-லெனினிசப் பொதுவுடமைக் கட்சியேயாகும்.

## ஆளும்வர்க்க பேரினவாதத்திற்கும் தேசிய இனங்களுக்குமிடையிலான பிரதான முரண்பாடு நீடிக்கின்றது.

## நிலவுடமை முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகளுக்கும் மக்களுக்குமிடையில் அடிப்படை முரண்பாடு கூர்மையடைகின்றது

பாராளுமன்ற சீர்திருத்தவாதக் கண்ணோட்டத்தை நிராகரித்து விட்டு புரட்சிகர வெகுஜனப் போராட்டங்கள் மூலம் சாதியத்திற்கும் தீண்டாமைக்கும் எதிராக மக்கள் பெரும் திரளினர் போராடினர். வரலாற்றுத் திருப்புமுனை கொண்ட அப் போராட்டங்களின் மூலம் தாழ்த்தப்பட்ட மக்கள் என அழைக்கப்படும் மக்கள் தமக்கு மறுக்கப்பட்ட ஜனநாயக மனித உரிமைகளையும், சமத்துவத்தையும் நிலைநிறுத்திக் கொண்டனர். எல்லைக்குட்பட்ட வகையிலான ஆயுதப் போராட்டத்தையும் ஏனைய போராட்டங்களையும் முன்னெடுத்தே மக்கள் அவ் ஜனநாயக உரிமைகளை வென்றெடுத்து நிலை நிறுத்தினர். நிலவுடமை ஆதிக்க வழிவந்த வடபுலத்து பழமைவாதச் சூழலை அப்புரட்சிகர வெகுஜனப் போராட்டங்கள் உடைத்தெறிந்து முன் சென்றது. அதனூடாக தமிழ்த் தேசியத்தை முன் நிறுத்தி தமது போராட்டங்களுக்கான ஆயுதப் போராட்ட முனைகளைத் திறப்பதற்கும் தமிழ் இளைஞர்களுக்கும் சாதிய தீண்டாமைக்கு எதிரான புரட்சிப் போராட்டங்களே வழிகாட்டி நின்றன என்பது வரலாற்றுப் பதிவாகும்.

அவ்வாறான சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்களின் பின்பும் முற்று முழுதாக சாதிய முரண்பாடும் ஒடுக்குமுறையும் நமது சமூகச் சூழலில் ஒழிந்து விடவில்லை. அது ஏனைய ஒடுக்குமுறைகளுடன் சம்மந்தம் உடையதாகவும் இணைந்ததாகவுமே காணப்படுகின்றது. எனவே சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் என்பது இலங்கையில் குறிப்பாக தமிழர்கள் மத்தியில் மார்க்சிச-லெனினிச பொதுவுடமைக் கட்சியால் முன்னெடுக்கப்பட்டு வெற்றிகள் பெறப்பட்ட செழிப்பான அனுபவங்கள் உண்டு. அதன் பட்டறிவுகள் ஒவ்வொன்றும், வெறும் சாதிவாத நிலை நின்று வர்க்கப் போராட்டத்திற்கு விரோதமாக முன் தள்ளிக்கொள்ள முயற்சிக்கப்படும் தலித்தியப் போக்கை நிராகரிக்கின்றன. தூய தலித்தியம் என்பது சாராம்சத்தில் மார்க்சிசத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் எதிரான ஒன்றேயாகும். தலித்தியக் கருத்தியல் என்பது எதிர்மறை நிலைப்பாட்டில் சாதிய அமைப்பை நிலைநிறுத்திக் கொள்ளும் ஒன்றேயாகும்.



*மாநாட்டுப் பிரதிநிதிகளில் ஒரு பகுதியினரை இங்கே காணலாம்.*

அடுத்து நமது கவனத்தைப் பெறுவது பெண்ணடிமை தோற்றுவிக்கும் முரண்பாடும் ஒடுக்குமுறையுமாகும். வெளித் தோற்றத்தில் ஆண், பெண் இரு பாலாரும் இணைந்தே சமூக வாழ்வில் ஈடுபட்டிருப்பதாகவே தோன்றும். ஆனால் பெண்ணடிமையும் அவை சார்ந்த ஒடுக்கு முறையும் சமூக வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் காணப்படுகின்றது. இப் பெண் ஒடுக்கு முறையானது வரலாற்றின் ஆரம்ப காலகட்டத்தின் ஆண்-பெண் வேலைப் பிரிவினையிலிருந்து வளர்ச்சி பெற்று வந்துள்ளமையை மார்க்சிசமே தெளிவுறுத்திக் காட்டியது. ஆணாதிக்கமானது நிலவுடமைக் காலகட்டத்தின் ஊடாக மேலும் உறுதி பெற்றுக் கொண்டது. பொருளாதார, அரசியல், சமூக, பண்பாட்டுத் தளங்கள் அனைத்திலும் பெண்கள் மீதான அடிமைத்தனம் நிலைக்கச் செய்யப்பட்டது. மதமும் பண்பாடும் பெண்களை ஒடுக்கி இரண்டாம் தரம் ஆக்குவதற்குரிய கருவிகளாக்கப் பட்டன. அவை அன்றாட வாழ்வில் மீறமுடியாத விதிகளாக்கப்பட்டன. மூன்றாம் உலக நாடுகளில் அவற்றுக்குரிய அடித்தளங்கள் இன்றும் அசைக்கப்படவில்லை. நமது சூழலில் கண்களுக்குத் தெரியாத இறுக்கமான இளைகளால் பெண் ஒடுக்குமுறை பின்னப்பட்டிருக்கின்றன. ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகி நிற்கும் பெண்களால் மத பண்பாட்டு நடைமுறைகளின் ஊடே நடைமுறைப்படுத்தப்படும் பெண்ணடிமைக் கூறுகளை அடையாளம் காண முடியாதவாறு வர்க்க சமூக அமைப்பும் ஆணாதிக்க கருத்தியலும் கெட்டியாகி நிற்கின்றன. அவற்றை மிக நுணுகிப் பார்ப்பதனால் மட்டுமே அதன் அடிமைத்தன அம்சங்களைக் கண்டுகொள்ள இயலும்.

இத்தகைய முதலாளித்துவ பாராளுமன்ற ஆட்சி அமைப்பு முறை காலத்திற்குக் காலம் அரசமைப்பு மாற்றங்கள், திருத்தங்கள் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டு நீடிக்கப்படும் சூழலில் அதே பாராளுமன்ற அமைப்பினூடாகத் தொழிலாள வர்க்கமும் உழைக்கும் மக்களும் தமது அரசியல் நிலைக்கு ஊடாக ஆட்சி அதிகாரத்திற்கு வர முடியும் என யாராவது நம்பினால் அத்தகையோர் அரசியல் அறிவீலிகள் அல்லது மக்களை ஏமாற்றும் அரசியல் பிழைப்பு வாதிகளாக மட்டுமே இருக்க முடியும். இப் பாராளுமன்றத்தை ஒரு பிரச்சார இடமாகவும் ஆளும் வர்க்கத்தை அம்பலப்படுத்துவதற்குரிய தளமாகவும் கால சூழலுக்கு ஏற்ப பயன்படுத்த முடியும் என்பதற்கு அப்பால் அதன் மூலம் சமூக விடுதலையை, சமூக மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்பது ஒருபோதும் நடந்தேற முடியாத வரலாற்று அனுபவமாகும். எனவே அரசும் ஆளும் வர்க்கமும் முழுமையாகத் தூக்கி வீசப்படுவதன் வாயிலாக மட்டுமே உண்மையான மக்கள் ஜனநாயகத்தை புதிய ஜனநாயகப் புரட்சியின் ஊடாக வென்றெடுத்து நிலைநாட்டி சோசலிஷத்தை நோக்கிச் சென்று அதனைக் கட்டமைக்க முடியும்.

**மேலும் அறிக்கையில் இரண்டு பிரதான ஆளும் வர்க்க கட்சிகள் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது:**

இலங்கையின் பாராளுமன்ற ஆட்சி அமைப்பு அரங்கிலே இரண்டு பிரதான கட்சிகளின் தலைமையிலேயே அரசாங்கங்கள் செயலாற்றி வந்துள்ளன. ஒன்று ஐக்கிய தேசியக் கட்சி மற்றையது சிறிலங்கா சுதந்திரக் கட்சி. ஏனைய கட்சிகள் தத்தமது வர்க்க, இன நிலைகளுக்கு ஏற்ப இவ் இரு பிரதான கட்சிகளுடன் இணைந்தும் ஆதரவு வழங்கியும் வந்துள்ளன. இவ் இரு பிரதான கட்சிகளும்

(மறுபக்கம் பார்க்க...)

நன்றி - நூலகத்திட்டம்



# சுய நிர்ணய உரிமை அடிப்படையில் வடக்கு கிழக்கு இணைக்கப்பட்ட பூரண சுயாட்சி வழங்கப்படல் வேண்டும்.

நிலவுடமை முதலாளித்துவ வர்க்கங்களையே பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளாகும். அத்துடன் அந்த வர்க்கங்களின் உயர் சாதிய மேட்டுக்குடிக் குடும்பங்களால் தான் இன்றுவரை தலைமை தாங்கப் பட்டும் வருகின்றன. சேனநாயக்கா-ஜெயவர்த்தனா-விஜயவர்த்தனா குடும்பங்களால் ஐக்கிய தேசியக் கட்சியும் பண்டாரநாயக்க-ரத்வத்தை குடும்பங்களால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தலைமை தாங்கப்படுவது இலங்கையில் எழுதா விதியாக்கப்பட்




டுள்ளது. ஒரு சில ஆண்டுகள் ஆர்.பிரேமதாசா ஐக்கிய தேசியக் கட்சிக்கும் நாட்டிற்கும் தலைமை தாங்கியமை ஜனநாயக எழுச்சியின் காரணமாக அல்ல. அன்றைய அரசியல் நெருக்கடி மிக்க சூழலின் காரணமாகவேதான். அதனை ஒரு அரசியல் விபத்தாகவும் மிகக் குறுகியகால விதி விலக்காகவுமே கொள்ள முடியும்.

1977ல் இருந்து 1994ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி மிகக் கொடுமையான, இருண்ட ஆட்சியை நடாத்தியது. அக் காலப்பகுதியில் வர்க்க ஒடுக்குமுறை

## முஸ்லீம்களுக்கும் மலையகத் தமிழர்களுக்கும் சுயாட்சி அமைப்புகள் வாயிலாகத் தீர்வுகள் காணப்பட வேண்டும்

யின் கீழ் சிங்கள மக்கள் பல்லாயிரக் கணக்கில் கொல்லப்பட்டனர். அதே போன்று இன ஒடுக்குமுறைக் களத்தில் யுத்தத்தை ஆரம்பித்து பல்லாயிரம் தமிழ் மக்களையும் பழிவாங்கிக் கொன்றழித்து நின்றது. அத்துடன் இலங்கையை ஏகாதிபத்திய திறந்த பொருளாதாரச் சுரண்டலுக்கும் ஆதிக்க உட்புகுதலுக்கும் வழிவகை செய்து கொடுத்தது. மக்கள் பொருளாதாரச் சுமைகளாலும் அரசியல் அடக்குமுறைகளாலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டு ஆற்றா நிலைக்குத் தள்ளப்பட்டனர். அதன் விளைவாகவே 1994ல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் பொதுசன ஐக்கிய முன்னணியும் அதன் தலைவியான திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவும் பதவிக்கு வந்து கொண்டனர்.

அன்று பொதுசன முன்னணி அரசாங்கத்தின் வரவை மக்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் வரவேற்றனர். பதினேழு வருட இருண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்குப் பதிலாக மாற்று ஆட்சியாக பொதுசன ஐக்கிய முன்னணி விளங்கும் என்ற நம்பிக்கையை மக்கள் கொண்டிருந்தனர். யூஎன்.பி. விரோத சக்திகள் கூட வேறு வழியற்ற நிர்ப்பந்த சூழலில் பொதுசன முன்னணி பதவிக்கு வருவதை விரும்பினர். ஆனால் பொதுசன ஐக்கிய முன்னணி தனது வர்க்க நிலைக்கு அப்பால் ஐக்கிய தேசியக் கட்சியின் தொடர்ச்சியாகத் தன்னை நிலை நிறுத்திக் கொண்டது. யுத்தத்தை வேகப்படுத்தியதுடன் திறந்த பொருளாதாரத்தையும் தனியார் மயத்தையும் தொடர்ந்து வரவேற்று நின்றது. அந்த அரசாங்கத்தில் இணைந்திருந்த இடதுசாரிகள் செயலற்று சீரழிந்த இறுதி நிலைக்கு தம்மை இட்டுச் சென்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சி எப்பொழுதும் தரகு முதலாளித்துவத்தையும் அதன் தற்போதைய வளர்ச்சியான பெருமுதலாளித்துவத்தையும் பிரதிநிதித்துவம் செய்து அதன் வர்க்க நலன்களுக்காக நின்று வரும் கட்சியாகும். பேரினவாதம் அக் கட்சியின் இரத்தத்தில் ஊறிக் கொண்ட ஒன்றுமாகும். அதேவேளை ஏகாதிபத்தியத்தின் நம்பிக்கை விசுவாசத்தையும் பெற்ற கட்சி ஐக்கிய தேசியக் கட்சியாகும். அந்தக் கட்சியின் தலைமைத்துவத்தில் இருப்பவர்களுக்கு தேசிய பொருளாதாரம் மற்றும் தேசிய நலன்கள் மீது துளியளவும் அக்கறை கிடையாது. அவர்கள் உள்நாட்டில் தரகு பெறும் முதலாளிகளாகவும் பெரு வர்த்தகத்தைக் கொண்ட பெருமுதலாளிகளாகவுமே உள்ளனர். மேலும் இப்போதைய நிலையை விட மேலும் வேகமாகச் சென்று உலகமயமாதலின் சகல நிகழ்ச்சி நிரல் அம்சங்களையும் நாட்டிற்குள் கொண்டு வர முயற்சிக்கின்றனர். அமைச்சர்கள் மிலிந்த மொரகொட, ஜி.எல்.பீரிஸ் போன்றோர் தாராள ஜனநாயகம் என்ற போர்வையில் அமெரிக்காவை உள் இழுத்துக் கொள்ளும் போக்கின் பிரதிநிதிகளாச் செயற்பட்டும் வருகின்றனர். பல்தேசியக் கம்பெனிகளை அழைத்து வந்து மூலதன முதலீட்டுக்கு அடிப்படையை வழங்குவதில் இவ்விரு அமைச்சர்களும் அதிக அக்கறை காட்டி வருகின்றனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தேசிய முதலாளித்துவத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் நிலையில் இன்று இல்லை. தேசிய முதலாளித்துவத்தின் ஒரு பகுதி தரகு முதலாளித்துவமாக மாற்றமடைந்து விட்டது. அதன் நலன்களே சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் மேலோங்கி நிற்கிறது. தேசிய முதலாளித்துவத்தின் பெரும் பகுதி திறந்த பொருளாதாரக் கொள்கையாலும் பல்தேசியக் கம்பெனிகளின் வருகையாலும் நலிவடைந்து விட்டது. தேசிய நலன்களையோ, தேசிய பொருளாதாரத்தையோ பிரதிநிதித்துவம் செய்யும் நிலையில் அக் கட்சி இன்று இல்லை. அது மட்டுமன்றி அக் கட்சியை ஆதரித்து நின்ற விவசாயிகள், சிறுகைத்தொழில்களில் ஈடுபடுவோர், கிராமப்புற மக்கள் என்போரைப் பிரதிநிதித்துவம் செய்யும் நிலையிலும் இல்லை. தனியார் மயத்தின் மூலமும் பல்தேசிய நிறுவனங்களின் நலன் காக்கும் அடிப்படையில் தொழிலாளர் சாசனத்தை நிறைவேற்ற மறுத்துவிட்டதன் மூலம் தொழிலாளி வர்க்கத்தின் நம்பிக்கையை இழந்து கொண்டது. யுத்தத்தை மூர்க்கத்தனமாக முன்னெடுத்ததன் வாயிலாக தேசிய இனங்களின் வெறுப்பையும் எதிர்ப்பையும் சம்பாதித்து நின்றது.




பொதுசன முன்னணி தனது பாராளுமன்ற இடதுசாரிகளின் வாய்களை பொத்தச் செய்தவிட்டு ஏகாதிபத்தியத்திற்கு முற்றிலும் வளைந்து கொடுத்தது. அதன் பொருளாதார நலன்களுக்கு அடி பணிந்து கொண்டது. அதனையே ஏகாதிபத்தியம் தனக்குச் சாதகமாக்கி கொண்டதுடன் பொதுசன முன்னணியை மக்கள் மத்தியில் செல்வாக்கிழக்கச் செய்து கொண்ட உள்ளார்ந்த திட்டத்தையும் நடைமுறைப்படுத்தியது. ஏனெனில் ஏகாதிபத்தியத்தின் மிகுந்த நம்பிக்கைக்குரிய கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சியே இருந்து வந்தது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி மீது ஏகாதிபத்திய சக்திகள் ஆரம்பம் முதலே சந்தேகமும் எதிர்ப்பும் கொண்டிருந்தன. அதற்கு காரணம் முன்பு அக் கட்சி பின்பற்றிய தேசிய பொருளாதார, அரசியல், சமூக, பண்பாட்டுக் கொள்கையும் பாராளுமன்ற இடதுசாரிகளுடனான ஐக்கியமுமாகும். ஆனால் இவை அனைத்தும் கடந்த காலத்திற்குரியவையாகி விட்டன. இவற்றினடிப்படையில் நோக்கும் போது சிறிலங்கா சுதந்திரக் கட்சி தேசிய முதலாளித்துவ நலன்களையே இப்பொழுதும் கொண்டிருக்கிறது எனக் கூறுவது எவ்வகையிலும் பொருத்தமற்ற தொன்றாகும். அது பலவீனமடைந்த நிலையில் தன்னை மீள அதிகாரத்திற்கு இட்டுச் செல்வதற்கு மட்டும் சில கொள்கைகளை மேலெழுந்த வாரியாக முன்வைக்கலாம். அதனால் நேர்மையான இடதுசாரிகள் ஏமாந்து தம்மை இழந்து கொண்டால் பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்தினுள் வீழ்ந்து சீரழியவே நேரிடும். அதேவேளை மாற்று இடதுசாரி தேசிய ஜனநாயக சக்திகளின் வேலைத் திட்டம் ஒன்று உருவாக்கப்படும் அவசியமும் திசை திருப்பப்பட்டு விடும்.

ஏகாதிபத்திய உலகமயமாக்கல் நிகழ்ச்சி நிரலுக்கு எதிரான தேசிய நலன்கள் சார்ந்த குறிப்பான பிரச்சினைகளில் ஒன்றுபட்டு நின்று எதிர்ப்புப் போராட்டங்கள் இடம்பெறும் வேளைகளில் சேர்ந்து நின்று மக்களின் வலிமையைப் பிரதிநிதித்துவப்படுத்துவது சரியான நிலைப்பாடாகும். அதற்கு அப்பால் யூஎன்.பி. விரோத முற்போக்கு ஆட்சியை அமைக்கப் போகிறது என நம்பி பொதுசன முன்னணிக்குப் பின்னால் இழுபட்டுச் செல்வதில் அர்த்தம் எதுவும் இல்லை. இவ்விடயத்தில் கட்சி தெளிவுடன் இருப்பது அவசியம். இவ்விடயத்தில் எமது கட்சிக்கு முன் அனுபவமும் தூர நோக்கும் இருந்து வருகின்றது.

பெருமுதலாளித்துவ பேரினவாத நிலை நின்று ஏகாதிபத்திய அரவணைப்புடன் பதினேழு வருடகால இருண்ட ஆட்சி நடாத்திய ஐக்கிய தேசியக் கட்சி ஏழு ஆண்டுகளுக்குப் பின்பு மீண்டும் பாராளுமன்றத்தில் ஆட்சிக்கு வந்துள்ளது. இம்முறை தமிழ், முஸ்லீம் கட்சிகள் சிலவற்றின் துணையுடனேயே ஐக்கிய தேசிய முன்னணி என்னும் பெயரில் அரசாங்கம் அமைத்துள்ளது. இவ்வாறு 2001 டிசம்பர் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறுவதற்கு நான்கு காரணங்கள் துணை புரிந்தன. ஒன்று பொதுசன ஐக்கிய முன்னணியின் யுத்தத்தை முன்னெடுத்த, பொருளாதாரச் சுமைகளை மக்கள் மீது சுமத்தி, மக்கள் விரோத நடவடிக்கைகளை மேற்கொண்ட ஆட்சியின் மீது மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பு. இரண்டாவது யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தி சமாதானத்தைக் கொண்டு வருவதாகக் கூறப்பட்ட உறுதிமொழி. மூன்றாவதாக இலங்கையின் பெரு முதலாளித்துவ சக்திகளும் பல்தேசிய நிறுவனங்களும் ஐக்கிய தேசியக் கட்சியை மீள அதிகாரத்திற்கு கொண்டு வருவதில் ஆர்வமும் அக்கறையும் கொண்டிருந்தமை. நான்காவது, அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய சக்திகள் தமது நம்பிக்கைக்கும் விசுவாசத்திற்கும் உரிய ஐக்கிய தேசியக் கட்சியைப் பதவிக்கு கொண்டு வர முழு முயற்சி செய்து கொண்டமை.

**அரசியல் அறிக்கை தேசிய இனப்பிரச்சினையின் வர்க்க இன அடிப்படைகளையும் முஸ்லீம், மலையக மக்களின் இனப் பிரச்சினைகளுக்கான தீர்வையும் வற்புறுத்திக் காட்டியது.**

இவ்வாறு பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிரான தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்தவர்களில் ஏகப்பெரும்பான்மையான இளைஞர்-யுவதிகள் தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், தாழ்த்தப்பட்ட உழைக்கும் வர்க்க குடும்பங்களில் இருந்து சென்றவர்கள் என்ற வர்க்க அடிப்படை உண்மையைத் தெரிந்து கொள்ளல் வேண்டும். வசதியும் வாய்ப்பும் கொண்ட மேட்டுக் குடியினரும், உயர் மத்தியதர வர்க்கத்தினரும் தத்தமது பிள்ளைகளை வெளிநாடு




## நான்காவது தேசிய மாநாடு மறைந்த தோழர்களை நினைவு கூர்ந்து கொண்டது

1964ல் இருந்து மார்க்சிசம் -லெனினிசம் -மாஓசேதுங் சிந்தனையை ஏற்று மார்க்சிச லெனினிசப் பொதுவுடமைக் கட்சியைத் தோற்றுவிப்பதிலும் கட்டியெழுப்புவதிலும் புரட்சிகர வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுப்பதிலும் மக்கள் கலை இலக்கியத்தை வளர்த்தெடுப்பதிலும் பல தோழர்கள் அர்ப்பணிப்புடன் தியாக வாழ்வு வாழ்ந்து மறைந்துள்ளனர். அவர்களின் புரட்சிகர வாழ்வும் பணியும் பங்களிப்பும் பெறுமதி மிக்கவையும் போற்றுதலுக்குரியவையாகும். அவ்வப்போது ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளால் தோழர்கள் வெவ்வேறு நிலைகளில் இருந்து வந்த போதிலும் மார்க்சிசம் -லெனினிசம் -மாஓசேதுங் சிந்தனையை ஏற்று இறுதிவரை தத்தமது சக்திக்கும் ஆற்றல்களுக்கும் ஏற்ப செயலாற்றி வந்துள்ளமையை இம்மாநாடு கவனத்திற் கொண்டு அத் தோழர்களுக்குரிய புரட்சிகர கௌரவத்தை வழங்குகின்றது. அத்தகைய மறைந்த தோழர்களில் சிலர் தமது பிற்கால வாழ்வில் தமிழ்த் தேசியவாத அலைகளுக்குள் சென்று கொண்டனர். தேசியவாத நிலைப்பாட்டை மார்க்சிச -லெனினிசத்தால் வெற்றி கொள்ளலாம் என நம்பிச் சென்று ஏமாந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இருப்பினும் அவர்களது முன்னைய பங்களிப்பிற்காக அத் தோழர்களையும் நினைவு கூர்ந்து கொள்கின்றது.

### கட்சி அரங்கில் பணியாற்றி மறைந்தவர்கள்

தோழர்கள் : நா. சண்முகதாசன் (கொழும்பு), மு.கார்த்திகேசன் (யாழ்ப்பாணம்), கே.ஏ.சுப்பிரமணியம் (சுழிபுரம்), டாக்டர்.சு.வே.சீனிவாசகம் (காங்கேசன்துறை), சமல் த சில்வா (களுத்துறை), கே.குலவீரசிங்கம் (கொழும்பு), வாட்சன் பெர்ணாண்டோ (கொழும்பு), எஸ்.சத்தியசீலன் (சண்டிலிப்பாய்), கே.டானியல் (யாழ்ப்பாணம்), வெ.கதிர்காமு (அச்சுவேலி), ஹிக்கொட தர்மசேன (கேகாலை), வி.கிருஷ்ணகுட்டி (மட்டக்களப்பு), எஸ்சுந்தரம் (மலையகம்), வி.சின்னத்தம்பி (வட்டுக்கோட்டை), எஸ். மாணிக்கம் (முல்லைத்தீவு), எஸ். குணரட்ணம் (கொட்டடி), கங்காதரன் (அல்வாய்), க. குணரட்ணம் (சிப்பித்தறை-யாழ்ப்பாணம்), ஜெயபாலன் (அல்வாய்), கே. இராமநாதன் (கொழும்பு), கு. சிவராசா (நெல்லியடி), க. சிவஞானம் (நெல்லியடி), வீ.ஏ. கந்தசாமி (சுதுமலை), கதிரவேல் (யாழ்ப்பாணம்), எஸ். தியாகராசா (கந்தர் மடம்), கரவைக் கந்தசாமி (கரவெட்டி), இராமலிங்கம் (ராகலை), எம்.பீ.செல்வரட்ணம்(உடுப்பிட்டி)

### தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தில் பணியாற்றி மறைந்த தோழர்கள்

எஸ்.ரி. என்.நாகரட்ணம் (சுன்னாகம்), எம். முத்தையா (யாழ்ப்பாணம்), சி. கணேசன் (அல்வாய்), ந. சிவபாதம் (கன்பொல்லை), கந்தையா மகேஸ்வரி (காங்கேசன் துறை), பூ சின்னராசா (காங்கேசன் துறை), தில்லையம்பலம் (கரவெட்டி).

### வெகுஜனப் போராட்டத்தில் தியாகியான தோழர்கள்

சின்னர் கார்த்திகேசு (சங்கானை), இரத்தினம் (மந்துவில்), வன்னியன் குமரேசு (சங்கானை), கி. வேலும் மயிலும் (கன்பொல்லை), மா. சீவரட்ணம் (கன்பொல்லை), க. செல்வராசா (கன்பொல்லை), க. நல்லப்பு (சங்கானை), வைத்தி (சண்டிலிப்பாய்), மு.கந்தவனம் (கரவெட்டி), அண்ணாசாமி (புன்னாலைக் கட்டுவன்-எழுதுமட்டுவாள்).

### மக்கள் கலை இலக்கியத் தளத்தில் பணியாற்றி மறைந்த தோழர்கள்

பேராசிரியர் க. கைலாசபதி (யாழ்ப்பாணம்), கவிஞர் பசுபதி (பருத்தித்துறை), அ.ந.கந்தசாமி (அளவெட்டி), செ. கதிர்காமநாதன் கரவெட்டி), சுபைர் இளங்கீரன் (யாழ்ப்பாணம்), சி.வி.வேலுப்பிள்ளை (மலையகம்), சில்லையூர் செல்வராசன் (சில்லாலை), சுபத்திரன் (மட்டக்களப்பு), சி. பற்குணம் (மந்துவில்), எச்.எம்.பி.முகைதீன் (கொழும்பு), செல்வ பத்மநாதன் (யாழ்ப்பாணம்), குறிஞ்சித் தென்னவன் (மலையகம்), இ.செ.கந்தசாமி (கொழும்புத்துறை), பெனடிக்ற் பாலன் (யாழ்ப்பாணம்), ஆனந்தன் (மட்டக்களப்பு), டானியல் அன்ரனி (யாழ்ப்பாணம்), எஸ். ஜெயக்குமார் (அளவெட்டி), வீ. எம். குகராசா (வசாவிளான்), முருகு கந்தராசா (மட்டுவில்), எஸ். கனகரட்ணம் (ஆனைக்கோட்டை), துரை சுப்பிரமணியம் (யாழ்ப்பாணம்), பொன் பொன்ராசா

### மலையக தொழிற்சங்க இயக்கத்தில் அவ்வப்போது இடம்பெற்ற போராட்டங்களில் தியாகியானவர்கள்

முல்லோயாக் கோவிந்தன், ஆபிரகாம் சிங்கோ, ஐயாவு பிரான்சிஸ் சேவியர் கும்பாடி, பொன்னையா, காமாட்சி அம்மாள், அழகர்சாமி இராமையா, பழனிவேல் சிவனு லட்சுமணன்.

## மாநாடு சிறப்புற வாழ்த்துக்கள்

உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 16 மார்க்சிச லெனினிசக் கட்சிகளினதும் அமைப்புகளினதும் வாழ்த்துச் செய்திகள் நான்காவது தேசிய மாநாட்டிற்கு கிடைத்தன. அக்கட்சிகள் பற்றிய விபரங்களும் வாழ்த்துக்களும் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டன.

நன்றி - நூலகத்திட்டம்



களுக்கு அனுப்பிக் கொண்டனர் என்ற விபரத்தையும் நாம் கவனத்தில் கொள்ளல் வேண்டும். அவ்வாறே ஒடுக்குமுறைகளுக்கு முகம் கொடுத்து அரச பயங்கரவாதத்தால் பல்வேறு இழப்புகளைப் பெற்றவர்களில் பெரும் பகுதியினர் சாதாரண உழைக்கும் மக்கள்தான் என்பதையும் காணுதல் வேண்டும். தமிழ்த் தேசிய வாதப் போராட்டமாக இடம்பெற்ற போதிலும் அதில் வர்க்க நிலைப்பட்ட மக்களின் பங்கும் பணியும் பற்றி கவனித்தல் அவசியமாகும். ஆதலினாலேயே பத்தொன்பது வருட நீடித்த யுத்தம் தனியே புலிகள் இயக்கத்தின் போராட்டம் மட்டுமன்றி மக்கள் சம்பந்தப் பட்ட மக்களை ஒடுக்கிய யுத்தம் என்பதை எமது கட்சி கணித்து செயல் பட்டு வந்துள்ளது.

# உலக மயமாக்கலுக்கு எதிராக முன்செல்வோம் அமெரிக்க ஏகாதிபத்திய ஊடுருவலை எதிர்ப்போம் இந்திய மேலாதிக்கத்தை நிராகரிப்போம்.

இவ்விடத்திலே சுயநிர்ணய உரிமைக் கான போராட்டமானது அதன் முழு அர்த்தத்தில் ஒடுக்கும் பேரின வாதத்திற்கு மட்டுமன்றி ஏகாதிபத்தி யத்திற்கு எதிரானதாகும். எனவே தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் விட்டுக்கொடுக்காத ஏகாதிபத்திய எதிர்ப்பும் உள்ளடங்கி இருத்தல் வேண்டும். அதேவேளை எந்த மக்களின் சுயநிர்ணயத்திற்காகப் போராட்டம் இடம்பெறுகின்றதோ அந்த மக்களின் ஜனநாயகம், சுதந்திரம், மனித உரிமை என்பனவும் சுயநிர்ணய உரிமை என்பதனுள் உள்ளடங்கியுள்ள மையை கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

எனவே பேச்சுவார்த்தையும் காணப்படும் தீர்வும் நியாயமானவையாகவும் மக்களால் ஏற்றுக் கொள்ளத் தக்கவை யாகவும் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படாத வாறான நிரந்தர சமாதானத்தை நோக்கியதாகவும் அமைய வேண்டும். விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழீழ கோரிக்கைக்கு மாற்றாக பிரதேச சுயாட்சியை சுயநிர்ணய உரிமை அடிப்படையில் ஏற்கும் நிலையைக் கோடிட்டுக் காட்டி நிற்கிறது. ஆனால் பேரினவாத நிலைப்பாட்டில் இருந்து வந்த ஆளும் வர்க்க சக்திகள் எந்தளவுக்கு இறங்கி வந்து அத்தகைய சுயாட்சியை வழங்கப் போகின்றன என்பது இன்னும் கேள்வி நிலையிலேயே இருந்து வருகின்றது.

இவ்வேளை தேசிய இனப்பிரச்சினையில் உள்ளடங்கி நிற்கும் வடக்கு-கிழக்கின் முஸ்லீம் மக்களினதும் மலையகத் தமிழ் மக்களினதும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படுவது அவசியமானது என்பதை எமது கட்சி வற்புறுத்து கின்றது. நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டி வந்தது போன்று தமிழ், முஸ்லீம் தேசிய இனங்களை அவர்களது சொந்தப் பிரதேசத்தில் மோத வைப்பதன் ஊடாகப் பயனடைந்து வந்த பேரினவாத சக்திகளுக்கு இடமளிக்காத வகையில் முஸ்லீம் மக்களின் பிரச்சினைகள் அணுகித் தீர்வு காணப்படல் வேண்டும். வடக்கு-கிழக்கு முஸ்லீம்களினதும் பாரம்பரிய தாயகப் பிரதேசம் என்பதும் அவர்களது மத, கலாச்சார தனித்து வங்கள் மதித்து பேணப்பட வேண்டும் என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். எச் சந்தர்ப்பத்திலும் பழமைவாத தமிழ் ஆதிக்கப் போக்கு முனைப்புப் பெற்று முஸ்லீம் மக்களது உரிமைகளை உதாசீனம் செய்யாத வாறு பார்த்துக் கொள்வது அவசியம்.

அவ்வாறே முஸ்லீம் தலைமைகள் வர்க்க நலன் காக்கும் தமது குறுகிய மத நிலைப்பாட்டிற்குள்ளும் மத அடிப்படை வாதச் சிந்தனைக்குள்ளும் மக்களை இட்டுச் செல்லாத வகையில் தீர்வு பற்றிய பரந்த சிந்தனைக்கு உள்ளாகு வது தேவையானதாகும். முஸ்லீம் மக்களுக்குரிய சுயாட்சி அமைப்புப் பற்றிய வரையறுப்பில் நியாயமான தீர்வு காணப்படுவதை எமது கட்சி வற்புறுத்துகிறது.

இலங்கையில் வாழ்ந்து வரும் மலையகத் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாக வளர்ச்சியடைந்துள்ளனர். அவர்கள் இனிமேலும் வெறும் உழைக்கும் இந்திய வம்சாவழிச் சமூகமாக மட்டும் இருக்கும் நிலைக்கு அப்பால் தனியான தேசிய இன அடையாளத்தைப் பெற்றுள்ளனர். அவர்கள் இந் நாட்டின் ஆளும் பேரினவாத சக்திகளால் வர்க்க-இன ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்கப் பட்டே வந்துள்ளனர். அவர்களது பிரசாவுரிமை-வாக்குரிமை பறிக்கப் பட்டது முதல் அன்றாட வாழ்வுக்கான நிலம், வீடு, கல்வி, சுகாதாரம், வேலை வாய்ப்பு, பண்பாட்டு அம்சங்கள் போன்றன மறுக்கப்பட்டும், நிராகரிக்கப் பட்டும் வந்த வரலாறு இன்றும் தொடர் கின்றது. பிரசாவுரிமை-வாக்குரிமை போராட்டங்கள் மூலம் பெறப்பட்ட போதிலும் தீர்க்கப்படாத நிலையில் அதன் ஒரு பகுதி இருந்து வரவே செய்கின்றது. அதேவேளை நிலம், வீடு, கல்வி, வேலைவாய்ப்பு அடிப்படைப் பிரச்சினைகளாகத் தொடர்கின்றன. இவை பேரினவாத நோக்கிலேயே ஆளும் வர்க்க சக்திகளால் கையாளப் படுகின்றன. மலையகத் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் சம்பளப் பிரச்சினையும் அதனோடு இணைந்த தொழில் சம்மந்தப்பட்ட நாளாந்தப் பிரச்சினை களும் பாரியனவாக இருந்து வருகின்றன.

எனவே இன்று தேசிய இனப் பிரச்சினைக்கான பேச்சுவார்த்தை இடம்பெறும்போது மலையகத் தமிழ்த் தேசிய இனத்தினது இனத்துவப் பிரச்சினைக்கு சுயாட்சி அடிப்படை யிலான தீர்வு காணப்பட வேண்டியது அவசியம் என்பதை கட்சி வற்புறுத்து கின்றது. நாம் ஏற்கனவே சுட்டிக் காட்டி வந்தது போன்று மலையகத் தேசிய இனத்தின் வாழ்விடப் பிரதேசம் அமைந்துள்ள சூழலையும் அவர்கள் சிங்கள மக்கள் மத்தியில் வாழ்ந்து வரும் யதார்த்தத்தையும் கவனத்தில் கொண்டே அவர்களுக்கான தீர்வு பெறப்படல் வேண்டும். மலையக மக்கள் செறிவாகவும், பரந்தும் வாழும் பிரதேசங் களில் இனத்துவ உரிமைகளைச் சுதந்திரமாக அனுபவிக்கவும் தமது மொழி, பண்பாட்டு அம்சங்களைப் பேணிப் பாதுகாத்து வளர்க்கவுமான அதிகார நிர்வாக அமைப்புகள் அவசியமானதாகும். அதனையே சுயாட்சி அமைப்புகள் என முன்பிருந்து வற்புறுத்தி வருகின்றோம்.

ஒரு பலமான சுயாட்சி அமைப்பானது மத்திய, ஊவா, சப்பிரகமுவ மாகாணங் களில் மலையகத் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளை இணைத்ததாக அமைவது அவசியம். ஏனெனில் இப் பிரதேசங்களி லேயே மலையகத் தமிழ் மக்கள் செறிவாக வாழ்ந்து வருகின்றனர். மற்றும் பரந்து வாழும் பிரதேசங்களில் மலையகத்திற்கு உள்ளேயும் வெளி யேயும் உரிய சுயாட்சி உள்ளமைப்புகள் மூலம் தீர்வுகள் தேடப்படல் வேண்டும்.

தேசிய இனப்பிரச்சினைக்கான தற்போதைய பேச்சுவார்த்தையில் மலையக மக்களது பிரச்சினைகள் பற்றிப் பேசப்படுவதை மலையகத்திலும், வடக்கு-கிழக்கிலும் உள்ள தமிழர் தலைமைத்துவங்கள் சில எதிர்க் கின்றமை அர்த்தமற்றவையாகும். தேசிய இனப்பிரச்சினையில் முன்பிருந்தே மலையகத் தமிழ் மக்களது பிரச்சினையும் ஒரு பகுதி என ஏற்றுக் கொள்ளப்பட்டே வந்துள்ளது. ஆதிக்க நோக்கிலும் தமது அரசியல் அந்தஸ்தை இழக்க விரும்பாத சக்திகளும் பேரினவாத ஆளும் வர்க்கத்துடன் சமரசம் செய்வோருமே அவ்வாறு பேசக் கூடாது என்பதை வலியுறுத்து கின்றனர். ஆனால் தற்போதைய சூழலில் தேசிய இனப்பிரச்சினையின் முழுமைக்கும் பேசப்படல் வேண்டும் என்பதையே எமது கட்சி வற்புறுத்தி நிற்கின்றது.

**ஐக்கிய தேசியக் கட்சியும் உலகமயமாதல் பற்றி**

ஐக்கிய தேசியக் கட்சியின் மீள் வரவு ஏகாதிபத்திய உலக மயமாக்கலுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். அதனை செவ்வனே முன்னெடுப்பதற்கு ஏற்ற வாறே பேச்சுவார்த்தையும் சமாதான சூழலும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் உலக மயமாதல், தாராள மயம், தனியார் மயம் என்பவற்றின் விரிவாக்கத்திற்கும் உறுதியாக்கத்திற்கு மான சமாதான சூழலானது பத் தொன்பது வருட கால யுத்தத்தின் கீழ் அவல வாழ்வு வாழ்ந்து வரும் மக்களுக்கு ஒரு பெரும் ஆறுதல் வழங்கும் ஒன்றாகவும் காண முடி கின்றது. ஆனால் ஏகாதிபத்தியம் இதன் ஊடாக வடக்கு-கிழக்கில் கால் பதிப்பதுடன் சுயநிர்ணய உரிமைக்கான நீண்டகாலப் போராட்டத்திற்கு ஒரு அபாயமாக அமையப் போகின்றது என்ற தூர நோக்குடைய உண்மையையும் கண்டு கொள்வது அவசியம். குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியம் இன்றைய சூழலைப் பயன்படுத்தி முழுமையாக உள் நுழைந்து கொள்ள நிற்கிறது. அதற்குரிய திட்டங்களை ஒன்றன் பின் ஒன்றாக நடைமுறைக்கும் கொண்டு வருகின்றது. இதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கி வருகின்றது. பொருளாதார ராணுவ ஒத்துழைப்பு என்ற பெயரில் அமெரிக்காவிற்கு நாட்டை முற்று முழுதாகத் தாரை வார்ப்பதில் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான அரசாங்கம் மிக மும்மரமாகி அதற்கான பல்வேறு ஒப்பந்தங்களையும் செய்து வருகின்றது.

இத்தகைய நிலை இப்பிராந்தியத்தில் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்த முற்பட்டு வரும் பிராந்திய வல்லரசான இந்தியாவிற்கு ஒரு சங்கடமான நிலையைத் தோற்றுவித்துள்ளது. தனது நாட்டையே அமெரிக்காவின் உலக மயமாக்கலுக்கு இரையாக்கி வரும் இந்தியா மறுபுறத்தில் தென்னாசியப் பிராந்தியத்தின் ஆதிக்கம் தனது கைகளுக்கு கிடைக்காதவாறு அமெரிக்காவிடம் செல்வதையிட்டு பொருமி வெடித்த வண்ணம் உள்ளது. அமெரிக்காவை நேரடியாக எதிர்க்கவும் முடியாது அதேவேளை அதன் தென்னாசிய ஆதிக்க பிரசன்யத்தை உள் வாங்கவும் முடியாது திக்கு முக்காடித் திணறுவதைக் காண முடிகிறது. அதனால் இலங்கையின் பேச்சுவார்த்தை சமாதானச் சூழலைக் குழப்பி அதன் ஊடாகத் தனது ஆதிக்க நலனுக்கு ஏதாவது இரை தேடலாமா என எண்ணுகின்றது.

**ஜே.வி.பி. பற்றி**

இன்று ஜே.வி.பி. ஒரு தேசிய முதலாளித்துவ தலைமைத்துவத்தைக் கொண்ட கட்சியாக மாற்றமடைந்து நிற்கின்றது. ஏற்கனவே அந்த நிலையில் இருந்து வந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி தேசிய நலன்களைக் கைகழுவிக் கொண்டதாலும் தேசிய முதலாளித்துவ சக்திகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் தகமையை இழந்ததாலும் அந்த இடத்தை தான் எடுத்துக் கொள்ளலாம் என்பதே ஜே.வி.பி.யின் இன்றைய கொள்கைப் போக்காகும். அவர்களது வேலைத்திட்டத்தில் இனவாதமும் பிரிவினை எதிர்ப்புக் கொள்கையும் முதலிடத்தில் இருக்கின்றன. அதன் அடிப்படையில் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கம் எனவும் அதனுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடக் கூடாது என்றும் வற்புறுத்து கின்றது. சமாதான சூழல் வேண்டாம் யுத்தத்தைத் தொடர்ந்து நடாத்தி புலிகளை அழித்து நாட்டைப் பிரிவினை யில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து சிங்கள மக்கள் மத்தியில் எதிர்ப்பு இயக்கங் களைத் தூண்டி வருகின்றது. இதற்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயல்படவும் தயாராக உள்ளது.

இத்தகைய ஜே.வி.பி. யை இந்தியா தனது பிராந்திய மேலாதிக்க நோக்கத் திற்குப் பயன்படுத்தி வருவதுதான் வேடிக்கை தரும்

தொடர்ச்சி 10ம் பக்கம்

## ஐரோப்பியக் கிளையின் வாழ்த்துச் செய்தி

தலைமைக் குழுத் தோழர்களே!
நாட்டின் பல பாகங்களிலும் இருந்து வந்து மாநாட்டில் கலந்து கொண்டுள்ள தோழர்களே! உங்கள் எல்லோருக்கும் எமது புரட்சிகர வணக்கங்கள். 21ம் நூற்றாண்டிற்குள் உலகம் பிரவேசித்துள்ளது. தேசிய, சர்வதேசிய ரீதியில் பாரிய மாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வேளையில் எமது புதிய-ஜனநாயகக் கட்சியின் நான்காவது தேசிய மாநாடு நடைபெறுகின்றது.

இரண்டு தசாப்தங்களுக்கு மேல் சிங்களப் பேரினவாதத்தின் கொடிய யுத்தம், தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களை அழித்து சின்னாபின்னப் டுத்தியுள்ளது. இவ் யுத்தம் முதியோர், இளைஞர், பெண்கள், மழலைகள், குழந்தைகள் என்ற பேதமின்றி பல்லாயிரக்கணக்கானோரை பலி கொண்டுள்ளது. இடப்பெயர்வு, பஞ்சம், பட்டினி இன்னும் பிற அவலங்களுக்குள் மக்களை ஆழ்த்தி வந்துள்ளது. இத்தனை துன்ப, துயரங்களுக்கு மத்தியில் மக்களோடு மக்களாய் இருந்து சகலதையும் உள்வாங்கி, அனுபவித்த உறுதியுடன் இருந்து வந்த கட்சியும் அதன் தோழர்களும் யாழ்ப்பாணத்தில் நடாத்தும் நான்காவது தேசிய மாநாடு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததேயாகும்.

இலங்கையில் இன்று அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் அபிலாஷைகளை பிரதிபலிக்கும் உண்மையான மாக்ஸிஸ லெனினிசக் கட்சியாக நாம் உள்ளோம் என்றால் அது மிகைப்படுத்தப்பட்ட கூற்றல்ல. கடந்த காலங்களில் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை கையிலெடுத்து ஸ்தல நிலைமைக்கேற்ப நடைமுறையில் மார்க்ஸித்தைப் பிரயோகித்து, வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுத்து வெற்றி கண்ட தோழர்களும், அவர்களை உள்ளடக்கிய கட்சி ஸ்தாபனத்தையும் நாம் கொண்டுள்ளோம் என்பது பெருமைக்குரிய விடயமேயாகும். இப் போராட்டங்களை முன்னெடுத்த பல தோழர்கள் இன்று நம் மத்தியில் இல்லை. அவர்களை நாம் இந்நேரத்தில் நினைவு கூர்வோம். எமது கட்சி இந்நிலையை அடைவதற்கு வித்திட்ட தோழர்களில், தோழர் ஏ. சுப்பிரமணியம் அவர்கள் என்றும் எம் நெஞ்சங்களில் நிறைந்திருப்பார்.

தோழர்களே!
இன்று இலங்கையில் நீண்ட யுத்ததிற்குப் பின் சமாதான ஒளிக்கீற்றுக்கள் தெரிகின்றன. நாட்டு மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர். இந்நிலைக்கு எமது கட்சி கடந்த காலங்களில் முன்னெடுத்து வந்த சிறிய-பெரிய வெகுஜனப் போராட்ட நடவடிக்கைகளும் உறுதியான கொள்கை நிலைப்பாடும் குறிப்பாக சிங்கள மக்கள் மத்தியில் தாக்கங்களை ஏற்படுத்தி வந்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது. தேசிய இனப்பிரச்சினையில் எமது கட்சியின் 2வது, 3வது காங்கிரஸின் கணிப்பீடுகள் மிகவும் சரியானதே. இன்றைய சமாதான பேச்சுவார்த்தைக் காலகட்டத்தில், மலையக-முஸ்லீம் மக்கள் சார்பாக எடுக்கப்படும் "தனி அலகு" என்பது நாம் முன்பு வகுத்த பிரதேச சுயாட்சி அமைப்பிற்குள், சுயாட்சி உள் அமைப்பு என்பதையே பிரதிபலிக்கின்றது.

எல்லாவற்றிற்கும் மேலாக எங்களிடம் சமகால-நீண்ட கால வேலைத்திட்டங்களும், கொள்கைப் பலமும் உண்டு. இக் கொள்கைப் பலத்திற்கு அத்திவாரமாக நாம் மார்க்ஸிஸ-லெனினிஸத்தை மா ஓசேதுங் சிந்தனையை பற்றிக் கொண்டுள்ளோம்.

தோழர்களே!
இன்று சர்வதேச ரீதியில் மார்க்ஸிஸம் பற்றிய வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. சோவியத் யூனியனின் உடைவும், சீனாவின் திசை மாறிய போக்காலும் மார்க்ஸிஸம் காலாவதியாகி விட்டது என்ற உரத்த குரல்களையும் நாம் கேட்க மார்க்ஸிஸ தத்துவத்தை புரட்சிக்குப் பிந்திய சமுதாயங்களில், சரிவரப் பிரயோகிக்க தவறியதன் விளைவே தவிர, அது மார்க்ஸிஸயத்தின் தவறல்ல என்பதே உண்மை. மனிதகுல ஈடேற்றத்திற்கென உலகில் பல தத்துவங்கள் தோன்றியுள்ளன. அவற்றில் உலகில் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவிற்காக-அவர்களின் அரசைத் தோற்றுவிப்பதற்கான தத்துவமாக மார்க்ஸிஸ தத்துவமே இன்றும் உயிரோட்டம் உள்ளதாகவே இருந்து வருகின்றது.

இன்று சர்வதேச ரீதியாக கம்யூனிஸ்ட் இயக்கம் பின்னடைவைக் கண்டுள்ளது என்பது உண்மைதான். ஆனால் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள நேர்மையான மார்க்ஸிஸ-லெனினிஸ வாதிகளும், கட்சிகளும் சமூக விஞ்ஞானிகளும், மார்க்ஸிஸத்தை சமகாலத்திற்கேற்ப வளப்படுத்துகின்றார்கள். இது சீனா, ரஷ்யா போன்ற புரட்சி நடந்த நாடுகளிலும் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றது. எனவே நாமும் இன்றைய தேசிய, சர்வதேசிய நிலைமைகளைக் கணக்கில் கொண்டு, எமது கட்சியை மேலும் செழுமையும் பலமும் மிக்கம ார்க்ஸிஸ-லெனினிஸக் கட்சியாக கட்டியெழுப்ப இம் மாநாட்டில் திடசங்கற்பம் பூணுவோம்.

தோழர்களே!
மேலும் கட்சியின் பொதுச் செயலாளரின் ஐரோப்பிய பயணம் மிகவும் பயன் உள்ளதாகவே அடைந்தது. பாரிஸில் நடைபெற்ற டானியல் நினைவுச் சொற்பொழிவு அரசியல் ரீதியில் மிகவும் காத்திரமானதே. இப்படி ஓர் நிகழ்வு ஐரோப்பாவில் நடைபெறவில்லையென்பது பலரது அபிப்பிராயம். அத்துடன் ஏனைய நாடுகளில் (டென்மார்க், நெதர்லான்ட், ஜேர்மனி) நடைபெற்ற கருத்தரங்குகளும் கலந்துரையாடல்கள் மூலம் கட்சியின் வேலைகளை ஐரோப்பாவிலும் விரிவுபடுத்தக் கூடியதாக அமைந்தது. ஐரோப்பாவில் இருந்து வரும் முற்போக்கு வெளியீடுகள் சஞ்சிகைகள் உட்பட, அரசியல் கலை இலக்கிய நண்பர்கள் எங்களுடனான தொடர்புகள்-உறவுகளை பலப்படுத்தி வருகின்றனர். அதன் மூலம் ஐரோப்பாவில் நமது அரசியல் கலை இலக்கிய வேலைகள் விரிவடைந்து வருகின்றன.

அத்தோடு புதிய பூமி பத்திரிகையும் தனக்கென வாசகர்களை கொண்டுள்ளது. பத்திரகைத் தரம், செய்திகள் தத்துவார்த்தக் கட்டுரைகள் மாற்றுக் கருத்து கொண்டவர்களையும் சிந்திக்க வைக்கின்றது. இன்றைய உலகமயமாதல் ஏகாதிபத்திய எதிர்ப்புச் சூழலில் ஐரோப்பாவில் எமது கட்சியின் வளர்ச்சிக்கு எம்மாலான ஆகக் கூடிய முயற்சிகளுக்காக எமது ஆற்றல்கள் அனைத்தையும் பயன்படுத்துவோம். எமக்கு ஒளிமயமான எதிர்காலம் உண்டு. மார்க்ஸிஸம்-லெனினிசம்-மா ஓ சேதுங் சிந்தனை நம்மிடம் உள்ளவரை எம்மை யாராலும் எங்கும் தோற்கடிக்க முடியாது. இம் மாநாட்டின் ஊடாக வீறு நடை போடுவோம்.

புரட்சிகர வணக்கங்கள்.

தோழமையுடன் - ஐரோப்பிய கிளை சார்பில்

பாரிஸ் ~ 06.11.2002 வை. வன்னியகுலசிங்கம்.

## புதிய ஜனநாயக கட்சியில் தலைமைத்துவம் தெரிவுசெய்யப்பட்டது

| | |
|---|---|
| மத்திய குழு | 16 பேர் |
| அரசியல் குழு | 7 பேர் |
| செயலகம் | 4 பேர் |

பொதுச் செயலாளர்
**சி.கா.செந்திவேல்**


தேசிய அமைப்பாளர்
**இ.தம்பையா**

பொருளாளர்
**க.ஞானகரன்**

நன்றி - நூலகத்திட்டம்

# புதிய ஜனநாயகக் கட்சியின் யாழ்ப்பாணப் பொதுக் கூட்டத்தில் ஆற்றப்பட்ட உரைகள்

ஐக்கிய தேசியக் கட்சி ஆண்டு அனுபவித்த ஆளும் வர்க்கங்களின் கட்சியாகும். அது உள்நாட்டுப் பெருமுதலாளிகளினதும் நிலவுடமை மேட்டுக்குடியினரதும் கட்சி மட்டுமன்றி அந்நிய ஏகாதிபத்திய சக்திகளினதும் நம்பிக்கைக்கு உரிய கட்சியுமாகும். அதன் காரணமாகவே அக்கட்சியின் தலைமையில் கடந்த தேர்தலின் பின் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் அமைக்கப்பட்டது. அந்த அரசாங்கம் அமைவதில் சகல சிங்கள. தமிழ் . முஸ்லீம், மலையகப் பிற்போக்கு அரசியல் சக்திகளும் கைகோர்த்து நின்றன. ஐக்கிய தேசியக் கட்சி கொடுத்த வாக்குறுதிகளில் யுத்த நிறுத்தம், சமாதானம், பேச்சுவார்த்தை, அரசியல் தீர்வு என்பன மக்களின் கவனத்தை ஈர்த்து நின்றன. இத்தகைய வாக்குறுதி முன்பு 1994ல் சந்திரிகா அம்மையாரால் கொடுக்கப்பட்டதுதான். ஆனால் அவர் அதனை நிறைவேற்றத் தவறி யுத்தத்தையே முன்னெடுத்தார்.



ராணுவ அமைச்சர் ரத்வத்தையின் ராணுவ வியூக மூளையை நம்பியும் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரது ராஜதந்திர ஆலோசனையைக் கேட்டும் சந்திரிகா அம்மையார் "சமாதானத்திற்கான யுத்தத்தை" நடாத்தி தோல்வி கண்டார். நாட்டின் பொருளாதாரம் நாசமடைந்து மக்கள் பெரும் வாழ்க்கைச் சுமைகளைத் தாங்க வேண்டியதாயிற்று.

இந் நிலையிலேயே ரணில் விக்கிரமசிங்கா சமாதானக் கொடியைக் கையில் எடுத்துக் கொண்டு பேச்சுவார்த்தை அரங்கில் இறங்கி நிற்கிறார். கடந்த பதினொரு மாதங்களில் அரசாங்கமும் பிரதமர் ரணிலும் எடுத்த சமாதான நடவடிக்கைகளால் யுத்தநிறுத்தமும் சமாதான சூழலும் நிலவுகின்றது உண்மையேயாகும். ஆனால் அடுத்தடுத்த கட்டங்களே மிக உன்னிப்பாகவும் அவதானத்துடனும் நோக்க வேண்டியவைகளாகும். ஏனெனில் அமெரிக்கா தன்து ஆதிக்கத்திற்காக உள் நுழைந்து தனது முழுமையான பிடிக்குள் இலங்கையைக் கொண்டு வர நிற்கின்றது. அதேவேளை இந்தியா தனது பிராந்திய ஆதிக்கம் இல்லாது போய்விடும் என்பதால் பேச்சுவார்த்தையைக் குழப்பிக் கொள்ள முயல்கிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா சமாதான நடவடிக்கைகளைப் பெரிதாகக் காட்டிக் கொண்டு நாட்டு மக்கள் அனைவரும் எதிர்நோக்கி நிற்கும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு வழிவகை காட்ட முடியாத கையறு நிலையிலேயே இருந்து வருகிறார். சகல அத்தியாவசியப் பொருட்களினதும் விலைகள் பல மடங்குகளாக உயர்ந்து விட்டன. போக்குவரத்து. தொலைபேசி. மின்சாரக் கட்டணங்கள். அதிகரித்து விட்டன. சம்பள உயர்வு மறுக்கப்பட்டுள்ளது. வரிகள் உயர்த்தப்பட்டுள்ளன. அதேவேளை கம்பனிகளுக்கு வரிச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிலைமயில் உழைக்கும் மக்கள் அனைவரும் தலைநிமிர்த்த முடியாத வாழ்க்கைச் சுமைகளால் அமுக்கப்பட்டு வருகின்றனர். அதேவேளை தனியார் மயப்படுத்தும் போக்கு துரிதப்பட்டு வருகின்றன. உலக வங்கி. சர்வதேச நாணய நிதியம் என்பனதான் அரசாங்கத்தின் சிறப்பு ஆலோசகர்களாகவும் வழிகாட்டிகளாகவும் இருந்து வருகின்றனர். இந் நிலையில் நாடு உருப்படியான திசையில் பயணிக்க முடியுமா? இந்த அவலநிலைக்கு எதிராக எதிர்க்கட்சியான பொதுசன முன்னணியால் எதுவும் செய்ய முடியாத பலவீன நிலையிலேயே இருந்து வருகின்றனர். காரணம் முன்னைய ஆட்சியில் இவர்கள் அதிகாரத்தை சுகித்தவர்களே அன்றி நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மைகள் செய்தவர்கள் அல்லர். அவர்களது ஒரே இலக்கு அதிகாரத்திற்கு மீளவும் வந்து கொள்வதேயாகும். அதற்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவியைப் பயன்படுத்திக் கொள்ள நிற்பதாகவே உள்ளது.

எனவே பாராளுமன்ற அதிகாரப் போட்டிக்கும் அதன் தேவைக்கும் பயன்படுத்தப்படும் பாராளுமன்ற அரசியலுக்கு அப்பால் தொழிலாளர்கள், விவசாயிகள். உழைக்கும் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டிய காலகட்டம் உருவாகியுள்ளதை எமது புதிய-ஜனநாயகக் கட்சி சுட்டிக் காட்டி போராட்டப் பாதையில் அணி திரளுமாறு அறைகூவி அழைக்கின்றது. இவ்வாறு கட்சியின் மாநாட்டையொட்டி கடந்த 9ம் திகதி யாழ் நகரில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றும் போது கட்சியின் பொதுச் செயலாளர் தோழர். சி.கா.செந்திவேல் கூறினார்.



அடுத்து உரையாற்றிய கட்சியின் தேசிய அமைப்பாளர் தோழர். இ.தம்பையா தமது உரையில். இன்று தேசிய இனப் பிரச்சினை சமாதானப் பேச்சுவார்த்தைச் சூழலில் முன்னெடுக்கப்படுகின்றது. நோர்வேயின் மூன்றாம் தரப்பு அனுசரணையுடன் முன்னெடுக்கப்படும் இப் பேச்சுவார்த்தையானது தேசிய இனப்பிரச்சினையின் முழுமையையும் உள்ளடக்கி நிற்றல் வேண்டும். அதாவது வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினை என்பதுடன் முஸ்லீம் மக்களினதும் மலையகத் தமிழ் மக்களினதும் இன உரிமைகளுக்குப் பரிகாரம் தேடப்படக் கூடியதாகவும் அமைந்து கொள்ளல் வேண்டும்.

அதேவேளை சமாதான முன்னெடுப்புகளை குழப்பும் கைங்கரியங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதில் பௌத்த பேரினவாதிகளும் ஜே.வி.பி.யினரும் கைகோர்த்து நிற்கிறார்கள். இவர்களுக்கு அயலகத்துக் கரங்கள் அரவணைப்புக் கொடுக்கின்றன. இது பற்றி மிக எச்சரிக்கையாக இருக்கும் அதேவேளை அமெரிக்காவின் விருப்பு வெறுப்புக்கு ஏற்றவாறு சுயநிர்ணய உரிமைப் போராட்டம் தாரைவார்க்கப் படக் கூடாது. அமெரிக்கா கூறுவது தான் சுயநிர்ணய உரிமை என நம்பி அடிபணிந்து சென்றால் இருபது வருடப் போராட்டமும் இழப்புகளும் அர்த்தமற்றவையாகி விடும் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரனுக்கு 200 வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட தீர்ப்பானது சமாதான சூழலில் பாதகமானதாகவே அமையக் கூடியதாகும். அதேவேளை சட்ட நுணுக்க நிலை நின்று பார்த்தால் அந்த வழக்கை தீர்ப்புக்கு முன்னதாகவே வாபஸ் பெற்றுக்கொள்ள சட்ட மா அதிபருக்கு இடம் இருந்துள்ளது. அப்படி இருந்தும் அரசாங்கம், தமிழர் கூட்டமைப்பு மற்றும் அக்கறை மிக்க சட்ட அறிஞர்கள் ஏன் அவ்வாறு வாபஸ் பெற வைக்கும் முயற்சியில் இறங்கவில்லை. அப்படியாயின் இவர்களுக்கு உள் நோக்கங்கள் இருந்துள்ளனவென்றே கருத வேண்டியுள்ளது என்றும் கூறினார்.



மேலும் அவர் தனது உரையில் உலகம் பூராவும் ஏகாதிபத்திய உலகமயமாக்கலுக்கு எதிராக மக்களின் போராட்ட எழுச்சிகள் எழுந்து வருகின்றன. மாக்சிச-லெனினிசக் கட்சிகள் மீண்டும் போராட்ட முனைகளைத் திறந்தும் வருகின்றன. எனவே ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்களையும் போராட்டங்களையும் முன்னெடுப்பதில் நாம் நமது சக்திகளை ஒன்றிணைத்து ஏனைய இடதுசாரி ஜனநாயக சக்திகளோடு ஐக்கியப்பட்டு முன் செல்லல் வேண்டும். வடக்கு-கிழக்கு. மலையகம். கொழும்பு பிரதேசங்களில் எமது கட்சி தொடர்ந்தும் தொழிலாளர்கள். விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களுடனும் இணைந்து நின்று போராடும் என்பதையும் தெரிவித்துக் கொண்டார்.

அடுத்து மத்திய குழு உறுப்பினரான தோழர் இராகலை பன்னீர் செல்வம் உரையாற்றுகையில் பிரித்தானியாவில் இருந்து அவுஸ்திரேலியாவிற்கும் அமெரிக்காவிற்கும் சென்ற வெள்ளையர்கள் அந்நாட்டின் கௌரவமான சொந்தக்காரராகி நிற்கின்றனர். ஏறத்தாள இருநூறு வருட காலமாக இந்நாட்டின் உழைப்பாளர்களாக வரவழைக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களான மலையக மக்கள் இன்றும் பத்தடிக் காம்பராவில் அவல வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இன்றும் ஒன்றரை லட்சம் மக்களுக்கு பிரசாவுரிமை வழங்கப்படவில்லை. சம்பள உயர்வு உட்பட நிலம். வீடு. கல்வி, சுகாதாரம் ஆகிய அடிப்படைத் தேவைகள் மறுக்கப்பட்டவைகளாகவே இருந்து வருகின்றன. ஆனால் தங்களை மலையகத்தின் எசமானர்களாகவும் ஏகப் பிரதிகளாகவும் முன்நிறுத்தி வரும் பாராளுமன்றத் தலைவர்கள் மலையக மக்களின் பெயரால் சொத்து. சுகம் பெற்று சுகபோகிகளாக வாழ்கின்றனர்.

மலையகத்தில் பிரதேசவாதத்தைத் தூண்டி அதன் மூலம் தத்தமது இருப்புக்கு வழி தேடும் ஒரு கூட்டம் இருக்கிறது. குறிப்பாக யாழ்ப்பாண விரோதத்தை கக்கி வருவோர் இருக்கிறார்கள். அது முன்பு எடுபடக் கூடியதாக இருந்தது. காரணம் யாழ்ப்பாணத்து மேட்டுக்குடி ஆதிக்க அரசியல் தலைவர்களும். தோட்ட உயர் நிர்வாகிகளும். ஒரு சில பிற்போக்கான ஆசிரியர்களும் நடாந்து கொண்ட மக்கள் விரோத நடைமுறைகளேயாகும். ஆனால் யாழ்ப்பாணத்தில் உழைக்கும் மக்களோடும் பேரினவாதத்தால் ஒடுக்கப்படும் தமிழர்களோடும் சாதியத்தால் அடக்கப்படும் சாதாரண மக்களோடும் ஐக்கியப்பட்டு ஒரே கொடியின் கீழ் நின்று போராட புதிய ஜனநாயக கட்சி புரட்சிகர வழிமுறையை எமக்கு கற்றுத் தந்துள்ளது.

எனவே பேரினவாத ஒடுக்கு முறையாலும் ஆளும் வர்க்கங்களின் வர்க்க சுரண்டல்-அடக்கு முறையாலும் நாளாந்தம் ஒடுக்கப்பட்டு வரும் நாம் ஒரே அணியில் பாட்டாளி வர்க்கப் புரட்சிகர கட்சியான புதிய ஜனநாயகக் கட்சியின் ஊடே உறுதியுடன் முன் செல்வோம் என்றும் கேட்டுக் கொண்டார்.

அடுத்து தோழர் க. தணிகாசலம் தனது உரையில் இப்போது மாக்சிசம்-லெனினிசம் இறந்து விட்டதாகவும் இனிமேல் அதற்கு இடம் இல்லை எனக் குதூகலித்துக் கூறுவோர் இருந்து வருகிறார்கள். ஆனால் மாக்சிசம் தோற்கடிக்கப்பட முடியாத ஒன்றாகும். அது வெறுமனே பதவி. பட்டங்களைப் பெறுவதற்கான அரசியலைக் கொண்டதல்ல. சமூக அமைப்பை விஞ்ஞான பூர்வமாக விளக்கி அதனை மாற்றுவதற்குப் போராடும் ஒரு தத்துவமாகும். எனவே ஏகாதிபத்திய உலகமயமாதல் சூழலில் மார்க்சிசம் தவிர்க்க முடியாத அடக்கப்படும் மக்களின் அரசியல் ஆயுதமாகி உள்ளது என்றும் கூறினார்.

அடுத்து தோழர் சோ.தேவராஜா தனது உரையில் இலங்கையில் பொதுவுடமை இயக்கம் அறுபது வருடங்களுக்கு மேலாக இயங்கி வந்துள்ளது. குறிப்பாக வடபுலத்தில் அதே அளவு காலப் பகுதியில் பல்வேறு போராட்டங் களை முன்னெடுத்து வந்த வரலாறு பொதுவுடமை இயக்கத்திற்கு உண்டு. ஆனால் இந்த வரலாறு சிலருக்குத் தெரிவதில்லை. மூன்று நிலைகளில் வடபுலத்தில் மார்க்சிச-லெனினிச இயக்கம் புரட்சிரப் போராட்டங்கள் மூலம் உழைக்கும் மக்கள் மத்தியிலும் அடக்கி ஒடுக்கப்பட்ட வர்க்க சக்திகளிடையேயும் தன்னை நிலை நிறுத்தி வந்துள்ளது. தமிழர்கள் மத்தியில் இருந்து வந்த பழமைவாத மேட்டுக்குடி அரசியல் ஆதிக்கத்தை உடைப்பதில் பொதுவுடமை இயக்கம் முன்னணிப் படையாக நின்று வந்தது மட்டுமன்றி தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் வழி காட்டியது. அடுத்து சாதியத்தை உடைத்தெறிந்து ஜனநாயகப் போராட்டங்கள் மூலம் சமத்துவத்தையும் இரண்டுபட்ட தமிழர்களை தனித் தேசிய இனமாக வளர்வதற்கு பாதை காட்டியது புரட்சிகரப் பொதுவுடமை இயக்க




மேயாகும். மூன்றாவது ஆற்றல் மிகு கரத்தில் ஆயுதங்களை ஏந்த வைத்து அடக்கப்பட்ட உழைக்கும் மக்களான தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் வரலாற்றுத் திருப்பு முனையை ஏற்படுத்தியுள்ளது.

இவற்றின் படிப்பினையை உள்வாங்கி நிதானமாக முன்செல்வதால் மட்டுமே தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் சரியான எதிர்காலத்தின் ஊடாகப் பயணிக்க முடியும். அல்லாதுவிடின் ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சிகளுக்கு விடுதலைப் போராட்டம் பலியாக நேரிடும். சுயநிர்ணய உரிமைக்கான நீதியான போராட்டத்தை ஆதரித்த எமது கட்சிக்கு புலிகள் ஆதரவுக் கட்சி என்று அரசாங்கம் முதல் தமிழ்க் கட்சிகள் வரை முத்திரை குத்தினர். புலிகளைப் பயங்கரவாதிகள் பாசிசவாதிகள் என்று அப்பட்டமாகப் பேசி வந்தவர்கள் இன்று எங்கே நிற்கிறார்கள். மானிடத்தின் தமிழ் கூடலின் முன் வரிசையில் இருந்ததை அண்மையில் காண முடிந்தது. பழமைவாதிகள். சந்தர்ப்பவாதிகள், பாராளுமன்ற பதவி வேட்டைக்காரர்கள் இன்று எங்கே.

தொடர்ச்சி 11பக்கம்

9ம் பக்க தொடர்ச்சி..

விடயமாகும். ஏனெனில் தனது ஆயுதக் கிளர்ச்சி களின் போது ஜே.வி.பி. கடும் இந்திய எதிர்ப்பு நிலையைக் கடைப்பிடித்த இயக்கமாகும். இந்திய விஷ்தரிப்பு வாதத்தின் கருவிகள் எனக் கூறி மலையகத் தமிழ் மக்களுக்கு எதிராக செயல்பட்ட இவர்கள் இப்போது இந்தியா இலங்கை இனப்பிரச்சினைக்கு மத்தியஸ்தம் வகிக்க வேண்டும் எனக் கோரும் அளவுக்கு இந்திய ஆளும் வர்க்கத்தின் நம்பிக்கையைப் பெற்று ள்ளனர். இதன் மூலம் இவர்களது மார்க்சிச வேடமும் சிகப்புச் சாயமும் கலைந்து காணப்படுகின்றது. முன்னை பாராளுமன்ற இடதுசாரிகளின் சீரழிவு நிலையையும் கடந்து பௌத்த சிங்கள பேரினவாதத்தின் காவலர்களாகவும் ஆட்சி அதிகாரத்தை நோக்கி எப்படியும் பயணித்து விடவும் துணிந்து நிற்கின்றனர். இரண்டு பிரதான கட்சிகளில் எவ்வாறு தமிழ் முஸ்லீம் பிரதிநிதிகள் உள்ளனரோ அவ்வாறே தமது இனவாத முகத்தை மறைக்க தமிழ் முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரை வைத்திருப்பதும் வேடிக்கை மிகுந்த ஏமாற்றாகும். ஜே.வி.பி.யின் அரசியல் நிர்வாணக் கோலம் என்றுமில்லாத அளவுக்கு அம்பலமாகி நிற்கும் ஒரு நிலையே இன்று காணப்படுகின்றது. மக்கள் இதனை அவர்களது ஒவ்வொரு சொல்லாலும் செயலாலும் புரிந்து வருகின்றனர்.

### இடதுசாரி இயக்கம் பற்றி

இன்று இடதுசாரி இயக்கம் பாராளுமன்றத்திற்கு உள்ளும் அதற்கு வெளியிலும் பலவீனமான நிலையிலேயே இருந்து வருகின்றது. தேர்தல் அரசியலை விட்டால் வேறு கதியே இல்லை என்னும் அளவிலேயே அது இருந்து வருகின்றது.

பாராளுமன்றத்திற்கு வெளியே உள்ள இடதுசாரிக் கட்சிகள் மத்தியில் குறைந்த பட்ச ஐக்கியம் ஒரு வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஏற்படுவதை எமது கட்சி வற்புறுத்தி அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டது. தொண்ணூறுகளின் ஆரம்பத்திலிருந்து மார்க்சிச-லெனினிசச் சக்திகளுடன் சேர்ந்து சில ஐக்கியப்பட்ட செயற்பாட்டை முன்னெடுக்க முடிந்தது. அதனைத் தொடர்ந்து தொண்ணூறுகளின் நடுக்கூறில் ட்ரொட்சிசக் கட்சிகள், மார்க்சிச-லெனினிசக் குழுக்கள் மற்றும் அமைப்புகள் ஒன்றிணைந்தே புதிய இடதுசாரி முன்னணி என்பது தோற்றுவிக்கப்பட்டது. யுத்த எதிர்ப்பு, சுயநிர்ணய உரிமை அடிப்படையில் அரசியல் தீர்வு, தனியார் மய எதிர்ப்பு, வெகுஜனப் போராட்டப் பாதை என்பன அப் புதிய இடதுசாரி முன்னணியின் முழக்கங்களாக அமைந்தன. மக்கள் மத்தியில் புதிய இடதுசாரி முன்னணி புதிய நம்பிக்கையைத் தோற்றுவித்தது. அந்த நம்பிக்கையின் வெளிப்பாடு பல முனைகளில் வெளிப்பாடடைந்து கொண்டது. ஒரு புறம் ஆளும் வர்க்க சக்திகளும் மறுபுறம் ஜே.வி.பி.யும் புதிய இடதுசாரி முன்னணியை உடைக்க முயன்று கொண்டன. வழமை போன்று ட்ரொட்சிச வாதக்கட்சியான நவசமாஜக் கட்சியும் அதன் தலைவரான விக்கிரமபாகு கருணாரட்ணாவும் அதற்குப் பலியாகினர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நன்றி - நூலகத்திட்டம்



# தமிழ் ஊடகங்கள் பற்றி (8)

## செய்தி விமர்சன ஏடுகள்

செய்தி ஏடுகள் என்ற வகையில் நாளேடுகள் அன்றாடப் புதினங்களை வழங்குகின்றன. தரமான ஏடுகளில் செய்தி விமர்சனமும் ஒரு முக்கியமான அம்சமாகும். இன்று பரவலாகவே எல்லாப் பெரிய நாளேடுககளிலும் செய்தி விமர்சனம் கட்டுரைகளாகவும், பத்திகளாகவும், சிறு குறிப்புகளாகவும் வருகின்றது. ஆசிரிய தலையங்கமும் செய்தி விமர்சனத்தின் வகையினதே. நாளேடுகள் பெரிய நிறுவனங்களின் வலிமையிலும் வணிக ஆதரவிலும் தங்கியிருப்பதால் அவை பொதுவாகவே வசதி படைத்த சமூகப் பிரிவினரது நோக்கிலேயே செய்திகளையும் விமர்சனங்களையும் ஊக்குவிக்கின்றன. எனவே ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பான நாளேடுகளால் பெரிய பத்திரிகைகளுடன் போட்டியிட முடியாது. இதனாலேயே இடதுசாரி நாளேடுகள் வலிய ஒரு இடதுசாரிக் கட்சியினது ஆதரவின் மூலமோ தொழிற்சங்க நிதியுதவியின் மூலமோ நடத்தப்படுகின்றன. இவ்வாறான ஏடுகள் அரச அதிகாரத்தில் உள்ள ஒரு பாராளுமன்ற இடதுசாரிக் கட்சியின் ஆதரவான ஏடுகளாக இருந்தால் அவை அரசாங்க விளம்பர அனுசரணையைப் பெற முடியும். அல்லாதபோது கட்சிக்கு ஆதரவான வெகுசன அமைப்புகளையும் வாசகரிடையே திரட்டப்படும் நிதியையும் வைத்தே நடத்தப்பட முடியும்.

இலங்கையில் இடதுசாரி நாளேடுகள் தொடங்கியுள்ளன. ஆயினும் அவற்றால் நீண்ட காலம் நிலைக்க முடியவில்லை. "அத்த" என்ற சிங்கள நாளேடு கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவுடன் 1960களில் வெளிவந்தது. 1970களில் இடதுசாரிக் கட்சிகளின் சரிவுடன் அதுவும் நின்றுவிட்டது. பின்னர் அதற்கு உயிரூட்டும் முயற்சிகள் பயனளிக்கவில்லை.

பெரிய கட்சிகட்கு மாறான அரசியல் செய்தி விமர்சன ஏடுகள் ஒரு முக்கியமான பங்களிக்கின்றன. இலங்கையில் ஆங்கிலத்தில் ட்றிபியூன் போன்ற செய்தி விமர்சன ஏடுகள் நீண்டகாலம் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. 1980களில் லங்கா காடியன் பரவலாக வாசிக்கப்பட்ட ஒரு செய்தி விமர்சன ஏடாகும். இன்று ஆங்கிலத்தில் வார ஏடுகளாகச் செய்தி விமர்சன ஏடுகள் வெளிவருகின்றன. ஸோஷல் ஜஸ்ற்றிஸ், ப்ரவாத என்பன குறிப்பிடத்தக்கன.

தமிழில் செய்தி விமர்சனப் பத்திரிகை மரபு இலங்கையில் ஆழமாக வேரூன்றி இருந்தால், இன்று தமிழர்கள் இந்திய டுடே முதல் ஜூனியர் விகடன், தமிழன் எக்ஸ்பிரஸ் போன்ற ஏடுகளைத் தேடி வாங்குகிற நிலை இருந்திராது. தமிழில் செய்தி விமர்சன ஏடுகள் என்று குறிப்பிடுவதானால் அவை அரசியற் கட்சிகளின் அதிகார பூர்வமான ஏடுகளாகவோ அரசியற் கட்சிகளால் நடத்தப்படும் பரந்துபட்ட வாசிப்புக்கான ஏடுகளாகவோ இருப்பனவற்றையே குறிப்பிட முடியும்.

தமிழர் மத்தியிற் கூட, "சற்றடே றிவ்யூ" போல ஒரு செய்தி விமர்சன ஏடு ஆங்கிலத்தில் கண்ட வெற்றியை அதையொத்த எந்தத் தமிழ வார ஏட்டாலும் காண முடியாமைக்குத் தமிழ்ப் பத்திரிகைகள் மூலம் வளர்க்கப் பட்டுள்ள வாசிப்புப் பழக்கத்தின் குறைபாடுகளையும் காரணமாகக் கொள்ள வேண்டியுள்ளது.

செய்தியை வெறும் தகவலாக அல்லாமல் அலசி ஆராயும் பிற தகவல்களுடனும் சமூக-அரசியற் பின்னணியுடனும் ஒப்பிட்டு அலசி ஆராய்வது சுவாரசியமான தகவல்களை வழங்குகிற விடயமல்ல. இது மிகவும் பொறுப்புடன் செய்யப்பட வேண்டிய காரியம். பொறுப்பான எழுத்தும் அக்கறையான வாசிப்பும் இல்லாத சூழலில் தரமான செய்தி விமர்சன ஏடுகள் வெளிவருவது இயலாத காரியமே. இது இலங்கைத் தமிழ்த் தகவல்துறையின் மிகப் பெரிய பலவீனமாகும்.

எனவே, இன்றைய சூழ்நிலையில் செய்தி விமர்சனத்துக்காகவே வெளிவரும் ஏடுகள் அரசியற் கட்சி சார்ந்த ஏடுகளாக மட்டுமே உள்ளன. இது எந்த வகையிலும் அவற்றில் வரும் தகவல்களை அரசியற் சார்பற்ற ஏடுகளின் தகவல்களை விடக் குறைவான உண்மையுடையனவாக்கி விடாது.

அரசியல் அடையாளம் இல்லாத செய்தி ஏடுகளிலும் அவற்றின் வாராந்த இதழ்களிலும் வருகிற. எந்தச் செய்தி விமர்சனமும் ஆய்வும் "நடுநிலையானது" என்று யாராலும் கூற முடியுமா? கூசாமல் பொய்யெழுதுகிற கட்டுரையாளர்களின் பொய்கள் வெளிச்சத்துக்கு வந்த பின்பும் அவர்கள் தொடர்ந்தும் அதே ஏடுகளில் எழுதுவது எதைக் காட்டுகிறது? நடுநிலை என்பது ஒப்புக்காக நான்கு வேறுபட்ட கருத்துக்களை வெளியிடுவத மட்டுமே என்றால் நமது நாளேடுகள் எல்லாமே ஏதாவது வகையான நடுநிலை பேணும் ஏடுகள்தான்.

உண்மையான நடுநிலை, மனிதர் பகையாக முரண்பட்டிருக்கிற ஒரு சூழலில் இயலாதது. எனவே நாம் நேர்மையான நிலைப்பாட்டை மட்டுமே நியாயமாக எதிர்பார்க்க முடியும். இவ்வகையில் குறிப்பிட்ட அரசியற் சிந்தனைப் போக்குகள் சார்ந்த ஏடுகள் இரண்டு விடயங்களில் தெளிவாக உள்ளன. ஒன்று செய்திகள் எந்தக் கண்ணோட்டத்தில் வழங்கப்படுகின்றன என்பதைக் கண்டு அவை சொல்லத் தவறுகிற விடயங்கள் உட்பட்ட இடைவெளிகளை நிரப்புவது. மற்றது குறிப்பிட்ட ஒரு செய்தியோ அதன் மீதான விமர்சனமோ தமது அரசியல் இலக்கை அடையும் தேவையை எவ்வளவு தூரம் பாதிக்கின்றன என்பதை அறிவது.

இந்த விடயத்தில் வெறும் பிரசார நோக்கில் மட்டுமே செயற்படும் ஒரு ஏட்டால் அதன் அரசியல் இலக்குக்கு ஒரு நன்மையும் இராது. அரசியற் கட்சி சார்ந்த ஏடுகளுக்கு ஒரு பிரசார நோக்கு தவிர்க்க இயலாதது மட்டுமல்ல நியாயமாகவே தேவையானதுங் கூட. ஆனால் உண்மையான தகவல்களைப் புறக்கணித்தும், திரித்தும், மறுத்தும் செய்யப்படும் பிரசாரம் நீண்டகாலத்துக்கு எடுபடாது. எனவே, ஒரு அரசியற் செய்தி விமர்சன ஏடு பரவலான அளவில் மக்களைச் சென்றடைவதற்கு அது உண்மை சாராத பிரசாரத்தை நம்பியிருப்பது அதன் அரசியலுக்கும் சமூகத்துக்கும் கேடானது.

இனத்துவேஷ, மதத் துவேஷ, சாதிய வெறி பிடித்த ஏடுகள் உள்ளன என்பது உண்மை. ஆனாலும் இந்த ஏடுகள் சொல்வனவற்றை மக்கள் முற்றாக நம்புவதில்லை. வதந்திகளும் அவதூறுகளும் சில சூழ்நிலைகளில் எவ்வளவு தூரத்துக்கு எடுபடுகின்றனவோ அந்தளவுக்கே இவ்வாறான விஷமப் பிரசாரமும் எடுபடுகிறது.

ஒரு தெளிவான அரசியல் நோக்குடைய பத்திரிகையை வாசிக்கும் போது நாம் நடுநிலை பற்றி எந்தவிதமான மயக்கமுமில்லாமலே வாசிக்கிறோம். அந்த வகையில் "நடுநிலை" பேணுகின்ற ஏடுகளை விடத் தெளிவாக வெளி வெளியாகத் தமது நிலைப்பாட்டை கூறும் அரசியல் விமர்சனன ஏடுகளை வாசிப்பது பயனுள்ளது.

**பொறுப்பான எழுத்தும் அக்கறையான வாசிப்பும் இல்லாத சூழலில் தரமான செய்தி விமர்சன ஏடுகள் வெளிவருவது இயலாத காரியமே. இது இலங்கைத் தமிழ் தகவல் துறையின் மிகப் பெரும் பலவீனமாகும்.**

**தேசபக்தன்**


---

# ஒடுக்கப்படும் மக்கள் மீது நம்பிக்கை வைத்து மக்கள் போராட்டங்களை முன்னெடுப்போம்!

## தோழர் மணியம் காட்டிய பாதையில் முன்செல்வோம்!

தோழர் நவம்பர் 27ம்ள நாள் அன்று தோழர் மணியம் (கே.ஏ. சுப்பிரமணியம்) இயற்கை எய்தினார். அவரது பதின்மூன்றாவது நினைவுநாள் 2002 நவம்பர் 27 ஆகும். இவ்வாண்டு நினைவு நாளை நினைவு கூரும் இவ்வேளை எமது புதிய ஜனநாயக கட்சியின் நான்காவது தேசிய மாநாடு வெற்றிகரமாக (நவம்பர் 8ம் 9ம் திகதிகளில்) நடந்தேறியுள்ளது. தோழர் மணியம் புதிய ஜனநாயக கட்சியின் ஐமுன்பு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது)ஸ ஆரம்பத் தலைவர்களில் தன்மையானவர். 1978ல் யூலை 3ம் திகதி மார்க்சிச லெனினிசக் கட்சியைக் கட்டியெழுப்பும் புரட்சிகர திடசங்கற்பத்தை ஏற்றுக்கொண்ட தோழர்கள் அவரை ஆரம்ப அமைப்புச் செயலாளராகத் தெரிவு செய்தனர். கட்சிக்கும் மக்களுக்கும் பணியாற்றும் அப்பொறுப்பினை ஏற்றுக் கொண்டு செயல்பட்ட அவர் 1984ல் நடைபெற்ற கட்சியின் முதலாவது தேசிய மாநாட்டில் பொதுச்செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். இறக்கும்வரை கட்சியை அமைப்பு ரீதியாகவும் மக்கள் மத்தியில் வர்க்கப் போராட்ட உணர்வுடன் கொண்ட கட்சியாகவும் கட்டியெழுப்புவதற்கு தனது ஆற்றல் அனுபவம் அனைத்தையும் பயன்படுத்திக் கொண்டார். அவரைப் பற்றிக் கொண்ட நோய்களின் மத்தியிலும் உறுதி குலையாத கம்யூனிஸ்ட் தலைமைத்துவப் பண்புடன் செயலாற்றி தனக்குப் பின்னாலும் கட்சி வளர்ந்து செல்வதை தூரநோக்குடன் வழிகாட்டி உரமிட்டுக் கொண்டார். அதன் பெறுபேறாகவே புதிய-ஜனநாயக கட்சி தன்னைப் புரட்சிகரக் கட்சியாக மார்க்சிசம் லெனினிசம் மாஓசேதுங் சிந்தனை அடிப்படையில் கட்டமைத்து உறுதியுடன் வழிநடக்கவும் முடிந்தது.

1989ஆம் ஆண்டு மேதினத்தை கட்சி யாழ்ப்பாணத்திலும் மலையகத்திலும் ஏற்பாடு செய்திருந்தது. அன்றைய நாட்களில் இந்திய இராணுவம் அமைதிப்படை என்ற பெயரில் வடக்கு கிழக்கில் நிலைகொண்டிருந்தது. வேறு எந்தக் கட்சியும் யாழ்ப்பாணத்தில் மேதினம் நடாத்த முன்வராத சூழலில் இந்திய ராணுவத்துடன் வாதிட்டு மேதினத்தை நினைவு கூர்ந்து பெரும் கூட்டத்தை தோழர் மணியத்தின் தலைமையில் நடாத்தியது. அம் மேதினம் இந்திய ராணுவத்திற்கும் ஏனைய ஆதிக்க அரசியல் சக்திகளுக்கும் பெரும் அதிர்வாக அமைத்துக் கொண்டது. அடுத்த ஓரிரு தினங்களில் தோழர் மணியத்தின் உயிருக்கு உலை வைக்கும் இரகசியச் செய்தி கட்சிக்கு கிடைத்தது. கட்சி உடன் நடவடிக்கையில் இறங்கி தோழர் மணியத்தை தலைமறைவாக்கி யாழ்ப்பாணத்திற்கு வெளியே அனுப்பி வைத்தது. ஏழு மாதங்கள் அவர் கண்டியில் தலைமறைவாக கடும் நோயுடன் போராடி வாழவேண்டியதாயிற்று. அந்நிலையிலும் அவர் அங்கிருந்தவாறே கட்சியின் மத்திய குழுவிற்கு வழிகாட்டி வந்தார் என்பது குறிப்பிடவேண்டிய முக்கிய செய்தியாகும்.



தோழர் மணியம் முன் குறிப்பிட்ட 1989ம் ஆண்டு மேதினத்திற்கு இருவாரங்கள் முன்பாக கடுமையான சுகவீனத்திற்கு உள்ளாகி யாழ் மருத்துவமனையில் சிகிச்சை பெற வேண்டியதாயிற்று. தனது நோயின் கடுமையை முன் உணர்ந்து கொண்ட தோழர் மணியம் ஒரு மதிய நேரத்தில் கட்சியின் அரசியல் குழுவில் இருந்த தோழர்களை அழைத்து. தன்னைப் பராமரித்து நின்ற குடும்பத்தவர்களைச் சிறுது நேரம் வெளியில் நிற்குமாறு கூறிவிட்டு தனது முக்கியமானச் செய்தியைத் தெரியப்படுத்தினார். இவர் படுக்கையில் இருந்தவாறு தோழர்களின் கைகளைப் பற்றிக்கொண்டு கூறிய வார்த்தைகள் இப்பொழுதும் நமது நினைவுகளில் எதிரொலித்த வண்ணம் இருக்கின்றன. "இன்னும் சில வருடங்களாவது உயிருடன் இருந்து உங்களோடு இணைந்து நின்று கட்சிக்கும் மக்களுக்குமான எனது கடமைகளைச் செய்யவே விரும்புகின்றேன். ஆனால் என்னைப் பற்றி நிற்கும் நோய் அதற்கு இடம் தரமாட்டாது என்பதை உணர்கின்றேன். ஆனால் நீங்கள் நாம் எடுத்துக் கொண்ட இலட்சியப் பயணத்தில் இருந்து பின்வாங்கவோ, சேர்ந்து போகவோ மாட்டீர்கள் என்ற நம்பிக்கையில் எனது பணி கடமை யாவற்றையும் உங்களிடம் ஒப்படைக்கின்றேன். கட்சிக்கும் மக்களுக்கும் நேர்மையாக விசுவாசமாகப் பணியாற்றும் உங்களது உணர்வும் வாழ்வும் இத்தகைய கொடுநோயின் மத்தியிலும் எனக்கு மகிழ்ச்சியையும் ஆறுதலையும் தருகின்றது. தொடர்ந்து படியுங்கள். கட்சியை கட்டியெழுப்புங்கள். மக்களுக்கு சேவை செய்யுங்கள். உங்கள் எதிர்காலத்திற்கு எனது புரட்சிகர வாழ்த்துக்கள்" இவ்வாறு தனது கரத்தினை உயர்த்தி கம்யூனிஸ்டுக்களின் புரட்சிகர வணக்கத்தை தெரிவித்த அந்த மருத்துவமனைக் காட்சி இப்போதும் பசுமையானதாக எங்களது மனக் கண்முன்னே தெரிகின்றது.

தோழர் மணியம் எம்மிடம் எதிர்பார்ப்புடன் ஒப்படைத்துச் சென்ற அப்பணியினை மிகக் கடுமையான சோதனைகள் சவால்கள் எதிர் நீச்சல்கள் மத்தியிலும் முன்னெடுத்து வந்துள்ளோம். அவரது மறைவுக்குப் பின் கட்சியின் இரண்டாவது மூன்றாவது நான்காவது தேசிய மாநாடுகளை வெற்றிகரமாக நடாத்தி இலங்கையில் எமது கட்சியை ஒரு மார்க்சிச லெனினிசக் கட்சியாக அமைப்பு வாயிலாகவும் வெகுஜன அடிப்படையிலும் நிலை நிறுத்தி வந்துள்ளோம். இது தோழர் மணியம் எதிர்பார்த்து எம்மிடம் ஒப்படைத்துச்சென்ற புரட்சிகரப் பணிக்கு கிடைக்கப்பெற்ற நம்பிக்கைத் துளியேயாகும். அவ்வாறெனில் இன்னும் நாம் தொடர்ந்து ஆற்றவேண்டிய பணிகள் நிறையவே உண்டு. இதனை நினைவுகூறும் இவ்வேளை எமது நான்காவது தேசிய மாநாடு வகுத்துக் கொண்ட புரட்சிகர மார்க்கத்தில் உறுதியாக இருந்து தியாகங்களுக்கு அஞ்சாமல் கஷ்டங்கள் அனைத்தையும் கடந்து முன்னேறிச் செல்வோம் எனத் திடசங்கட்பம் கொள்வோம். அதுவே தோழர் மணியத்திற்கும் ஏனைய மார்க்சிச லெனினிச முன்னோடிகளுக்கும் நாம் செலுத்தும் புரட்சிகர நினைவு அஞ்சலியாகும். ●

---

10ம் பக்க தொடர்ச்சி...

எப்படி இருந்து வருகிறார்கள் என்பதுதான் ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டியதாகும். எனவே நாம் எமது மார்க்சிச-லெனினிசப் பாதையில் தொடர்ந்து முன்செல்வோம். போராடுவோம் என்றும் கூறினார்.

தோழர் எஸ்.இராஜேந்திரன் தனது உரையில் ஒரு காலத்தில் மலையகம் உறங்கிக் கிடந்தது உண்மை. தொழிற் சங்கத்திற்கு சந்தா செலுத்திவிட்டு எல்லாம் அத்தலைவர்களால் ஆகும் என்றிருந்த நிலை மாறிவிட்டது. சமூக விடுதலை, சமூக மாற்றத்திற்கான அரசியல் இன்று மலையகத்தில் பரவி வேகம் பெற்று வருகின்றது. அதற்கு வித்திட்டது புதிய ஜனநாயகக் கட்சியேயாகும். தோட்டத் தொழிலாளர்களுக்கு பாட்டாளி வர்க்க அரசியலையும் இளம் தலைமுறையினரிடையே மக்களுக்கு சேவை செய்யும் பாதையைக் காட்டி அந்தப் புரட்சிகரப் பாதையில் பயணிக்க வைத்தது புதிய ஜனநாயகக் கட்சியேயாகும்.

நாட்டின் பொருளாதாரத்தின் அறுபது வீத வருமானத்திற்கு உழைக்கும் தோட்டத் தொழிலாளர்க்கு சம்பள உயர்வு இல்லை. அதேவேளை பெரும் கம்பனிகளுக்கு வரிச் சலுகை வழங்கப்படுகின்றது. தென்னாசியாவின் தானியக் களஞ்சியமாக ஒரு காலத்தில் திகழ்ந்த இலங்கை இன்று சகல பொருட்களையும் இறக்குமதி செய்கிறது. பொருளாதாரக் கொள்கை இல்லை. அதனால் உருப்படியான கல்விக் கொள்கையும் கிடையாது. உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் காட்டும் அழிவுப் பாதையில்தான் இலங்கை செல்கிறது. அமெரிக்காவிடமிருந்து இலங்கையை மட்டுமன்றி முழு உலகையும் பாதுகாக்க வேண்டிய அவசியமும் தேவையும் ஏற்பட்டுள்ளது. அந்தக் கடமையை எமது மார்க்சிச-லெனினிசக் கட்சியான புதிய ஜனநாயகக் கட்சி மூலம் முன்னெடுப்போம் என்றும் கூறினார்.

தோழர் மு.தியாகராசா தனது உரையில் தனியார் மயம் வேகப்படுத்தப்பட்டு வருகின்றது. இதனுள் கல்வியும் அமுங்கப் போகின்றது. இலவசக் கல்வியும், தாய்மொழிக் கல்வியும் இல்லாதொழிக்கப்படப் போகின்றன. வரவு செலவுத் திட்டம் ஒரு மோசடியும் ஏமாற்றுமாகும். சாதாரண மக்களது வாழ்வுக்கு வழிவகை செய்யாத வரவு செலவுத் திட்டம் யுத்தத்திற்குப் பெற்ற கடன்களுக்கு கணக்குக் காட்டி நிற்கும் ஒன்றாகவே காணப்படுகின்றது. இத்தகைய மக்கள் விரோத, தேச விரோத நடைமுறைகளுக்கு எதிராக மக்கள் அணி திரண்டு போராடுவதைத் தவிர வேறு வழியே இல்லை என்றும் கூறினார்.

பி.ப.4 மணிக்கு ஆரம்பித்த பொதுக் கூட்டம் இரவு ஏழு மணி வரை பெருந் தொகையான மக்களின் ஆதரவுடன் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நன்றி - நூலகத்திட்டம்



# எல்லாம் உலகமயம் II

## கசப்புகளுக்கு அப்பால்

- ஐ. ஐ. ஓ. -

தமிழ்ப் பாட்டியல் மரபின்படி, "உலகம்" என்ற சொல் மங்கலமானது. அந்தச் சொல்லைப் பேசுவதும் கேட்பதும் நன்மை தரும். எழுதுவதும் வாசிப்பதும் கூட நன்மை தரும். இது முற்காலத்தில் நிலவிய நம்பிக்கை.

பெரிய காவியங்களை இயற்றிய புலவர்கள் அந்த மங்கலச் சொல்லினை முதலிலே வைத்துத் தங்கள் நூல்களைத் தொடங்கியிருக்கிறார்கள்.

"உலகம்" அல்லது "உலகு" மங்கலமானது என்று கருதப்பட்டது ஏன்? மங்கலம் என்றால் என்ன?

துன்பதுயரம் இல்லாத, இன்பமயமான, மகிழ்ச்சி நிரம்பிய வாழ்வினை மங்கல வாழ்வு என்று சொல்லலாம். உலகியல் வாழ்க்கையிலே குறைவிலா நிறைவு ஏற்பட வேண்டும் என்று விரும்பி, அந்த விருப்பத்தை எடுத்துரைப்பது மங்கல வாழ்த்து என்று பேசப்படுகிறது. "மங்கலம் என்ப மனமாட்சி..." என்று வள்ளுவரும் சொல்லுவார். பொதுவாக, ஆனந்தம் பொங்கும் சூழ்நிலைகளை நாம் மங்கலமானவை என்று சொல்லுகிறோம். அப்படிப்பட்ட மங்கல நிலைக்கு ஓர் அடையாளமாக "உலகம்" என்னும் சொல் கொள்ளப்பட்டது. இது குறிப்பிட்ட மரபுநெறியின்படி வந்த பழக்கம், பண்பாட்டியலின் வழிவந்த ஒரு வழக்கம்.

இந்த வழக்கம் உலகியல் வாழ்க்கைச் சிறப்பை விரும்பி வரவேற்கும் ஒரு மனக்போக்கின் அடையாளம்.

இந்த உலகம் இனியது, இதில் தடங்கலின்றி வாழும் வாய்ப்பு இனியது. இதில் உள்ள உயிர்களின்பால் அன்பு செலுத்துவது இனியது-இவ்வாறாகச் சிந்திக்கும் மனப்பான்மை ஒரு வகை.

இந்த மனப்பான்மைக்கு மாறான-எதிர்மறையான-ஒரு நோக்கினையும் வேறொரு சாராரிடம் காண்கிறோம். அவர்கள் உலகம் பெரும்பாலும் துன்பமயமானது என்று கருதுகிறார்கள். சிற்சில சமய நெறிகளும் அவ்விதமான கருத்தியலை எடுத்துப் பேசுகின்றன. இன்ப சுகங்களை வெறுத்துத் தம்மையும் பிறரையும் வருத்துவதிலே நாட்டம் உடையோரும் உண்டு.

உலகியல் வாழ்வு ஒரு படுகுழி என்றும் ஒரு சாரார் கருதுகிறார்கள். மேலோட்டமாகப் பார்க்கும்போது இன்பமயமான சங்கதிகளாகத் தோன்றுவன பல. ஆழ்ந்து நோக்கும்போது துன்பக் கேணிகளே என்று கொள்வது சில சமயநெறிகளின் பார்வைக் கோணமாகும். பவுத்தம், சமணம் போன்ற மார்க்கங்களின் அடிநாதமாக உள்ள கருத்தியல்கள் இப்படியான மனச்சாய்வினாலே உருவானவையோ என்று நாம் கருதிப் பார்க்கலாம். ஆனால், இவ்விதமான மனச்சாய்வை உடையவர்கள் ஒப்பீட்டளவில் மிகச் சிறிய தொகையினரே என்று நாம் எடுத்துக்கொள்ளலாம். "பொதுவர்களான" சாமானிய மக்கள் உலகியல் வாழ்க்கையை அவ்வாறு வெறுத்துத் தள்ளுவதில்லை.

பல்வேறு காரணங்களால் அடிக்கடி மனம் கசந்து போவோர் கூட, அந்தக் கசப்புகளுக்கு அப்பால், தங்கள் சித்தங்களிலே நன்னம்பிக்கையினை நட்டு வளர்க்கிறவர்களாகத்தான் காணப்படுகிறார்கள். இது பொது அனுபவம்.

உலகியல் வாழ்வின் உள்ளுந்தலாய் நிற்பது நன்னிலையை நோக்கிய ஒரு நாட்டம் தான். எப்படி என்றாலும் தடங்கல்களையும் தடைகளையும் முடைகளையும் தாண்டி, தொல்லை இல்லாத சுகமான சூழல்களை நாடுவதே மனித இயல்பாக உள்ளது. இவ்விதமான சூழல்களை, பெருமுயற்சி செய்தவாறு படைத்துக் கொள்ள வேண்டும் என்ற வேட்கைதான் உயிரினங்களின் தணியாத தாகமாய் உள்ளது.

### இடைவிடாத முயற்சி

பூச்சி புழுக்கள் கூட, தம் இருப்புக்காகவும் தமது வழித்தோன்றல்களின் இருப்புக்காகவும் இடைவிடாது பாடுபடுகின்றன. அழிவுகளையும் ஆபத்துக்களையும் எதிர்கொள்கின்றன. தடைகளையும் இடைஞ்சல்களையும் தகர்த்து நீக்கி வெல்ல முயல்கின்றன. இதனை நாம் நாள்தோறும் கணந்தோறும் கண்கூடாக, நம் அனுபவத்திலே காண்கிறோம்.

இந்த உயிர் வாழ்க்கைப் போராட்டத்திலே, ஒவ்வோர் உயிரியும் ஏனைய உயிரிகளிலே தங்கி இருக்க வேண்டியது ஒரு தவிர்க்க முடியா நிபந்தனை ஆகிறது. மரஞ்செடி கொடிகள் மாத்திரம் தான் தமக்கு வேண்டிய உணவினை, காற்று, தண்ணீர், வெயிலொளி என்பவற்றிலிருந்து நேரடியாகப் பெற்றுக் கொள்ளும் வல்லமை உடையனவாய் இருக்கின்றன. ஆடுகளும் மாடுகளும் யானைகளும் குரங்குகளும் - அதாவது சில வகையான மிருகங்கள் தமக்கு வேண்டிய உணவு வகைகளைத் தாவரங்களிலிருந்து பெற்றுக் கொள்கின்றன. வேறு சில வகை விலங்குகள் ஏனைய விலங்கு வகைகளைக் கொன்றுதான் தங்கள் பிழைப்பை நடத்த வேண்டும்.

எப்படிப் பார்த்தாலும் உயிரிகள்யாவும் ஒன்றிலொன்று தங்கித்தான் வாழ வேண்டும்.

மனிதர்களும் அப்படித்தான். அவர்கள் தனித்திருந்து வாழக் கூடிய "தவமணிகள்" அல்ல. உயிரியல் முறைப்படி மனிதர்களும் விலங்குகள் தான். ஏன், "தவமணிகள்" கூட, பொதுமணிகளிலே தங்கித்தான் சீவிக்கிறார்கள். பொதுமணிகளாகிய சாமானியர்கள் உண்ணவும் உடுக்கவும் உறையவும் பாடுபட்டு உழைத்தக் கொண்டிருப்பவர்கள்.

### எப்படிச் சுகம்?

அவர்களைப் போய் "எப்படிச் சுகம்" என்று விசாரித்தால் "நானூறு தொல்லை நமக்கு" என்று தான் பெரும்பாலானவர்கள் சொல்லுவார்கள்.

ஆனால், அந்தத் தொல்லைகளைப்பற்றி ஒப்பாரி வைத்துக் கொண்டு திரிவதோ, புறுபுறுப்பாளர்களாகச் சோம்பிவிடுவதோ எந்த நன்மையையும் தராது, இதையும் பெரும்பாலான மனிதர்கள் அறிவார்கள்.

அதேவேளை, உலகியல் வாழ்வினைக் கண்டு அஞ்சி ஒதுங்கிக்கொள்ளும் சிலர், தம் ஒதுக்கத்துக்குச் சார்பாகச் சில பல நியாயங்களையும் காட்டுவார்கள். "துன்பமே வாழ்க்கை; எல்லாம் துயரமே! அறிவீர் அய்யா!" என்று அவர்கள் போதிப்பார்கள். தன்னிரக்கம் கொள்வார்கள்; தளர்ச்சி அடைவார்கள். "காலமே இது பொய்யடா" என்று கசந்து தொய்ந்து போவார்கள். உலகியலின் சவால்களை ஆமைகள் போலவும் தத்தம் ஓடுகளுக்குள் முடங்கிக் கொள்வார்கள். இவர்கள் தமக்கும் பயனில்லாமல், மற்றவர்களுக்கும் பயனில்லாமல், ஏனோ தானோ என்று தம் சீவியத்தை ஓட்டிக்கொண்டிருப்பார்கள். "எப்படிச் சுகம்" என்று கேட்டால், "என்ன உலகமடா! இதில் எத்தனை கலகமடா!" என்று பாடவும் தொடங்கி விடுவார்கள். வெளியிலுள்ள உலகினைப் பார்க்கக் கூசிக் கண்களை இறுக மூடிக்கொள்வார்கள்; காதுகளைச் சிக்காராகப் பொத்திக் கொள்வார்கள். புறவுலகுடன் தொடர்பு கொண்டு செயலாற்றுவதைத் தவிர்க்கவும் விரும்புவார்கள்.

அவ்வாறு புறநிலை மெய்மைகளைப் புறக்கணித்து ஒடுங்கும் போக்கு விரும்பத்தக்கதல்ல. இந்தப் போக்கினை விலக்கி, மாநிலம் பயனுற வாழவேண்டும் என்ற விருப்பமும் வேட்கையும் ஆரோக்கியமானவை; வரவேற்கத்தக்கவை.

"தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந்தோர்"

இது திருக்குறள். நாமும் இன்பமாக வாழவேண்டும்; ஏனையோரின் சுமுகமான இருப்புக்கும் இடையூறாக இருக்கக் கூடாது. இதுதான் சால்பு-பண்பு-பண்பாடு.

போட்டியையும் அவாவையும் தன்னலத்தையும் அடிப்படையாகக் கொண்டது விலங்கு வாழ்வு; தாழ் விலங்குகளாகிய மிருகங்கள் அப்படித்தான் உயிர் தரித்திருக்கின்றன

தொடர்ச்சி 15ம் பக்கம்.

# பல்கலைக் கழகங்களில் மனிதவதை தொடர்கிறது

நாட்டின் வருங்கால சிற்பிகளை உருவாக்கும் உயர்ந்த கல்வி நிறுவனமே பல்கலைக்கழகம் என்று கூறப்படுவதைக் கேட்டிருக்கின்றோம். ஆற்றல் மிக்க மூளைசாலிகள் அங்கிருந்தே வளர்க்கப்படுகிறார்கள் என்பதும் நடைமுறையில் இருந்து வருகின்றது. ஆனால் இத்தகைய பல்கலைக்கழகங்களில் இப்பொழுது அடிக்கடி மனித வதைகள் மூலம் அவலக் குரல்கள் கேட்பதைத்தான் காண முடிகின்றது. பகிடிவதை என்பது அதன் உச்சத்திற்குச் சென்று மனிதவதையாகி உயிர் குடிக்கும் நிலையங்களாக இப் பல்கலைக் கழகங்கள் மாறி உள்ளன.

இருவாரங்களுக்கு முன்பு ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மூன்றாவது வருட மாணவன் சமந்தா விதானகே பல்கலைக்கழகத்திலேயே வைத்து அடித்து கோரமாகக் கொல்லப் பட்டிருக்கிறான். மேலும் நான்கு மாணவர்கள் படுகாயங்கள் அடைந்து ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இக் கொலையும் படுகாயங்களும் அவற்றுக்கான மோதலும் ஏன் இடம்பெற்றது. பகிடி வதையை எதிர்த்த காரணத்திற்காகவே இக் கொடுமை நிகழ்த்தப்பட்டிருக்கிறது. பல்கலைக்கழகங்களில் இப்போது மாணவர்கள் இரு பிரிவினராகக் காணப்படுகின்றனர். பகிடிவதையை எதிர்க்கும் பிரிவினர் ஒருபுறம், அதனை ஆதரிக்கும் பிரிவினர் மறுபுறம். கொல்லப்பட்ட சமந்தா என்ற மாணவனும் படுகாயமடைந்த மாணவர்களும் பகிடிவதையை எதிர்க்கும் பிரிவைச் சேர்ந்தவர்களாவர்.

பகிடிவதையை ஆதரிக்கும் பிரிவினர் ஜே.வி.பி.யின் அரசியலைக் கொண்ட மாணவர் சங்கத்தைச் சேர்ந்தவர்களாவர். நாட்டைக் காப்பதற்கு கூக்குரல் இட்டு பாராளுமன்ற அரசியல் பிழைப்பு நடாத்தி வரும் ஜே.வி.பி. இதுவரை பகிடிவதைக்கு எதிராக ஒரு சொல்தானும் கூறியது கிடையாது. ஆனால் பகிடிவதையைத் துணிவுடன் எதிர்த்து ஜே.வி.பி.யின் அரசியலை நிராகரித்து தெற்கின் சகல பல்கலைக் கழகங்களிலும் மாணவர்கள் அணி திரண்டு நிற்கின்றனர். இதன் காரணமான ஆத்திரமும் வக்கிரமும்தான் ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் தாக்குதல்களாக, மனித வதையாக மாறி கொலை இடம்பெற்றது.

பகிடிவதைக்கு எதிரான மாணவர் குழாம் தாக்கப்பட்டு பாதுகாப்பு தேடி ஒரு அறையில் தஞ்சமடைந்து விரிவுரையாளர்களால் பாதுகாக்கப்பட்ட சூழலில் அறைக் கதவுகளை உடைத்தெறிந்து உட்புகுந்தே இந்த தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இரும்புக் கம்பிகள், ஆணிகள் இறுக்கப்பட்ட பொல்லுகள் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. தாக்குதல் நடத்திய மாணவர்கள் போதை நிலையில் காணப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இதில் ஆச்சரியம் இருக்க முடியாது. ஏனெனில் இலங்கையில் உள்ள பதின்மூன்று பல்கலைக்கழகங்கள் அமைந்திருக்கும் இடங்களைச் சுற்றியே அதிகளவு மதுபான நிலையங்கள் இருந்து வருவதாகக் கூறப்படுகின்றது. உதாரணத்திற்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகச் சுற்றாடலில் பதினாறு மதுபான நிலையங்கள் பகிரங்கமாகவே இயங்கி வருவதாக அங்கிருந்து வந்த தககவல் கூறுகிறது.

பல்கலைக்கழகங்கள் பெருகின, பாடவிதானங்கள் அதிகரித்தன. மாணவர் தொகையும் கூடின. பட்டதாரிப் படிப்பும் நடைபெறுகின்றன. ஆனால் மாணவர்களின் ஒழுக்கமும் கட்டுப்பாடும் சீரிய சிந்தனைகளும் நாளாந்தம் அழிக்கப் படுகின்றன. இது மாணவர்களின் தவறு அன்று. கல்விக் கொள்கையின் தவறால் ஏற்படுபவையாகும். இன்றைய நாற்ற மெடுக்கும் சமூக அமைப்பின் காரணமாக ஒரு சிறப்பான கல்விக் கொள்கை தோன்ற முடியவில்லை. பல்கலைக் கழகங்களில் விரக்தியும் வேதனைகளும் நிச்சயமற்ற எதிர்காலம் பற்றிய பயமும்,



மாணவர்களை ஆட்கொள்கிறது. பல்கலைக்கழகங்களை விட்டு பட்டதாரிகளாக வெளியேறிய முப்பதினாயிரம் பேருக்கு இன்னும் வேலை வாய்ப்புக் கிடைக்கவில்லை. படிக்கும் காலங்களில் கூட மாணவர்களது ஆற்றல்கள் கவனிக்கப்படுவதில்லை. திட்டமிட்ட "அறுவைகள்" மூலம் திறமைகள் மட்டம் தட்டப்படுகின்றன. இவற்றின் காரணமாக மாணவர்கள் பலர் பகிடிவதைகளில் மது போதையில் சுகம் கண்டு திருப்தி கொள்ள முனைகின்றனர். போதாதற்கு ஜே.வி.பி.யின் இனவெறி அரசியலும் தஞ்சம் கொடுக்கின்றது. ஒழுக்கம் என்பது வானத்திலிருந்து கிடைப்பதில்லை. சமூக அமைப்பு, கல்விக் கொள்கை, ஆசிரியர்-மாணவர்-பெற்றோர் என்ற பரந்த தளத்திலிருந்தே சிந்தனைகள், ஒழுக்கம், கட்டுப்பாடு என்பன தோன்றுகின்றன.

பகிடிவதை என்ற கேடுகெட்ட நடைமுறையால் இதுவரை எத்தனை மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதற்கு ஒரு பரந்த ஆய்வு அவசியமாகும். வரப்பிரகாஷ் என்ற மாணவன் பேரதெனியா பல்கலைக் கழகத்தில் பகிடிவதையால் கொல்லப் பட்டான். இப்போது பகிடிவதையை எதிர்த்ததாக சமந்தா விதானகே என்ற மாணவன் கொல்லப்பட்டிருக்கிறான். இங்கே அவதானிக்க வேண்டிய மற்றொரு விடயம் உண்டு. அதாவது வரப்பிரகாஷ் என்ற தமிழ் மாணவனைப் பகிடிவதை செய்து கொன்றவர்கள் சக தமிழ் மாணவர்களே! அவ்வாறே சமந்தாவை அடித்துக் கொன்றவர்களும் சக சிங்கள மாணவர்களே! சொந்த இனங்களின் மத்தியிலும் காட்டுமிராண்டித்தனம் இருந்து வருவதையே இது எடுத்துக் காட்டுகிறது. இங்கே இன நோக்கிற்கு அப்பால் சமூகப் பார்வையின் கோளாறே முன் நிற்கிறது.

இவர்கள் மட்டுமல்ல பகிடிவதைக்குப் பலியானவர்கள். தற்கொலை செய்து கொண்டவர்கள். அங்கவீனமாகியவர்கள், மனநோயாளிகள் ஆனவர்கள், பல்கலைக்கழகமே வேண்டாம் என விட்டவர்கள் எனப் பலர் இப் பகிடிவதைகளால் பாதிக்கப்பட்டு வந்துள்ளனர். இனிமேலும் இந்த அநாகரிகம் மாறிவிடும் என எதிர்பார்க்க இயலாது. உலகமயமாதலின் சகல கழிவுகளும் கல்வி பண்பாட்டுச் சீரழிவுகளும் நாட்டிற்குள் வேகமாக வந்து கொண்டிருக்கின்றன. அமெரிக்க "யங்கிக்" கலாச்சாரம் இளைஞர்-யுவதிகளை ஆட்கொண்டு வருகிறது. இவை பல்கலைக்கழகங்களில் வேகமாகப் பரவியும் வருகின்றன. ஆதலால் பல்கலைக்கழக மாணவர்களின் சீரழிவை தனி ஒரு அம்சமாகவோ சம்பவமாகவோ மட்டும் காணுதல் அர்த்தமற்றதாகும். நாட்டின் பொருளாதார, அரசியல், சமூக, பண்பாட்டுச் சீரழிவுகளின் ஊடாகவும் நோக்குதல் வேண்டும். ஏற்றத்தாழ்வும் ஒடுக்குமுறைகளும் நிறைந்த இன்றைய சமூக அமைப்பை மாற்றுவது பற்றிச் சிந்திக்காமல் அத்தகைய அமைப்பைப் பாதுகாத்து நிற்கும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து முறியடிக்காமல் கல்விச் சீரழிவைத் தடுக்க முடியாது. அதன் ஒரு பகுதியாகிய பகிடிவதையை முற்றுமுழுதாக நிறுத்தவும் முடியாது.

# நம்மவர்கள் நம்புவார்களா?

"செய்யும் தொழிலே தெய்வம்" என்கிற நம்பிக்கை அடிப்படையில் தொழிற் கருவிகளை வைத்து வழிபடுவதை, "ஆயுத பூசை" என நாம் அறிவோம். ஆனால், கொலைக் கருவிகளான வீச்சரிவாள், பட்டாக்கத்தி, துப்பாக்கி, தோட்டாக்களை வைத்து ஆயுதபூசை நடத்துபவர்களை என்ன செய்வது? கசாப்புக் கடைக்காரன் பட்டாக்கத்தியை வைத்து செய்வதைக்கூட புரிந்துகொள்ள முடியும். அது அவனது தொழில். ஆனால், இந்திய தேசியம், இந்தியக் கலாச்சாரம் ஆகியவற்றின் காப்பாளர்கள் என்கிற அடிப்படையில், நாட்டின் பிரதமர், துணைப்பிரதமர், அமைச்சர்கள், பல மாநில ஆளுநர்கள் போன்றவர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ள - சமூகப் பண்பாட்டு சேவை நிறுவனம் என்று கூறிக் கொள்ளும் ஆர்.எஸ்.எஸ். [Rashtriya Swayamsevaka Sangh- (RSS)] கொலைக்கருவிகளை வைத்துப் பொட்டிட்டு, பூவிட்டுப் பூசை நடத்தியிருக்கிறது.

ஆர்.எஸ்.எஸ். இன் நிறுவன நாளான விஜயதசமி அன்று, போபால் நகரில் இந்தச் சிறப்பு வழிபாட்டை நடத்தியிருக்கிறது. அவ்வமைப்பு . இதன்மூலம், அந்த அமைப்பின் தொழில்- அதன் சமூக- பண்பாட்டு சேவை என்பதே கொலைத் தொழில்தான் என்பதைப் பகிரங்கமாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

பயங்கரவாதம், பயங்கரவாதிகள், வகுப்புவாதம், மதவெறியர்கள் என்றாலே இஸ்லாமியர்களைத் தான் குறிக்கும் என்கிற கருத்தை இந்து மதவெறியர்களும் அவர்களின் ஆதரவாளர்களான பத்திரிகை, வானொலி, முதலிய செய்தி ஊடகங்களும் ஏற்படுத்தியிருக்கின்றன. இன்னும் ஒருபடி மேலே போய், இசுலாமியர்கள்அனைவருமே வகுப்புவாதிகள், மதவெறியர்கள். பயங்கரவாத ஆதரவாளர்கள்என்கிற தோற்றத்தை ஏற்படுத்துகின்றன.இதற்கு மாறாக, ஆர்.எஸ்.எஸ்., விசுவ இந்து பரிசத், பஜ்ரங் தள் போன்ற சங்கப் பரிவாரங்கள் எனப்படும் அமைப்புக்கள் சமூக சேவகர்கள், தேச பக்தர்கள் என்றும் சித்திரிக்கப்படுகிறார்கள்.

ஆனால், இந்த அமைப்புக்கள், தாம் உண்மையில் பாசிச பயங்கரவாதிகள் என்பதைத் திரும்பத் திரும்ப நிரூபித்து



கொலைக்கருவிகளான துப்பாக்கிகள், வீச்சரிவாள், பட்டாக் கத்திகளுக்கு "ஆயுத பூசை" நடத்துகிறார்கள் ஆர்.எஸ்.எஸ். இந்து மதவெறியர்கள். இவர்கள் பயங்கரவாதிகள் இல்லையா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நன்றி - நூலகத்திட்டம்



# தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும் (10)

1970 களின் அந்தநிலையில் தொடங்கிய தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்ட இயக்கங்களின் தோற்றமும் 1983-சிங்களப் பேரினவாத ஒடுக்கலின் பின் விடுதலை இயக்கங்கள் பல்கிப் பெருகியமையும் இந்தியாவை தளமாகப் பயன்படுத்த தொடங்கியமையும் மக்கள் மத்தியில் பலவித சிந்தனைக் கோலங்களை உருவாக்கின.

மேட்டுக்குடி கனவான்களைப் பாராளு மன்றம் அனுப்பி இருபத்தைந்து வருடங் களுக்கு மேலாகப் பெறமுடியாதவற்றை இளைஞர் இயக்கங்களின் எழுச்சி யாலும் வளர்ச்சியாலும் இந்தியாவின் முயற்சியாலும் பெற்றுவிடமுடியுமென மக்கள் நம்பவைக்கப்பட்டனர்.

இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளில் இரண்டு பிரதான நோய்கள் உள்ளன. 1. வறுமை 2. அறியாமை- இவை இரண்டுமே மேலாண்மைத் தமிழர் அந்நிய ஆக்கிரமிப்புச் சக்திகளுடன் இணைந்து சாதாரண தமிழ்ப் பொதுமக்கள் மீது சவாரி செய்யும் வசதியை ஏற்படுத்துவனவாகும்.

வறுமையும் அறியாமையும் தேசங்களின் மூலதனமாக இருக்கும்வரை விடுதலை என்பது கற்பனையானது. பொது மக்களின் கருத்துக்கள் வெளிப்படுத்து வதற்குப் பதிலாக அவர்கள்மீது விதேசியக் கருத்துக்கள் திணிக்கப்படும். மக்களது ஜனநாயக-மனித உரிமைகள் என்பன விடுதலையின் பேராலும் தேசத்தின் பேராலும் சிதைக்கப்படும்.

பொதுமக்கள் என்போர் வெறும் விட்டில் பூச்சிகளாகவே கணிக்கப்படுவர். பொதுமக்களின் மரணங்கள் என்பன கணக்கெடுப்புக்குப் பயன்படுகின்றனவே தவிர அரசியல் அவதானிப்புக்கு உள்ளாக்கப்படுவதில்லை.

பொதுமக்கள் மீதான வன்முறை என்பது வெறுமனே படுகொலை களையும் உடல்ரீதியான உபாதை களை ஏற்படுத்துவது மட்டுமல்ல. "வன்முறை எனும்போது. நேரடியான சரீரத் தாக்குதல் மட்டுமே வன்முறை என்று அதை வரையறுக்க முடியுமா? மனிதருக்கு உணவும், மருந்தும், நிழலும் மறுக்கப்படுவது வன்முறையாகாதா? உண்மையில் ஒருவரை நோயில் வாடி அழியவிடுவதை விட, பட்டினியில் சாகடிப்பதை விட. இயற்கையின் சீற்றத்துக்குப் பலியாக விடுவதைவிட, அவரைச் சுட்டுக் கொல்வது இரக்கம் மிக்கது என்று தோன்றுகின்றது'' என்று 'மறுபக்கம்' கட்டுரையில் கோகர்ணன் என்பார் குறிப்பிடுவது சிந்தனைக்குரியது.

இவ்வகையில் கடந்த 19வருட யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்குண்டு மரணமடைந்த எழுபத்தையாயிரம் பொதுமக்கள் புண்ணியம் செய்தவர்க ளெனினும் அவர்களைச் சார்ந்தவர் களும் அவர்களைத் தங்கி வாழும் பெற்றோர், பிள்ளைகள், குடும்பத்துணை வர்கள், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரின் பிரிவுத்துயர் தாங்கிக் கொள்ள முடியாதது. இவ்வாறு நடைப் பிணங்களாக வாழும் மக்கள் தொகை கணக்கற்றது.

யுத்த காலத்தில் மக்களின் கடல் -வயல் உழைப்புகளுக்கு அனுமதி இல்லை. சொந்தவீடுகளில் வாழ்வதற்கு உத்தரவாதம் இல்லை. இடப்பெயர்வு ஒன்றுமட்டுமே நிச்சயமானதாக இருந்தது. மருந்துவ வசதிகளில்லை. பட்டினியும் நோயுமே வாழ்வின் நிரந்த உடன்பிறப்புக்களாயின. இவற்றை யெல்லாம் தாங்கியும் தாண்டியும் வாழும் மக்களின் மனவடுக்களும் உடல், உளத்துன்பங்களும் சொத்திழப்புகளும் சீர்செய்யப்படுவதன் மூலம் மட்டுமே சமாதானத்துக்கான வாசல் திறக்கப்பட முடியும்.

போர்க்களத்தில் மரணித்த மாவீரர் மட்டுமே மரியாதைக்குரியோர். போர்க் காலத்தில் மரணித்த மக்கள் அப்பாவித் தனமாக மடிந்தோர் என இவ்வா றெல்லாம் எண்ணி மரணித்த மக்கள் பற்றிய விபரச் சேகரிப்பு உதாசீனப் படுத்தப்படக் கூடியதல்ல.

மிதிவெடிகளிலும் யுத்தக் கெடுபிடி களிலும் ஊனமுற்ற பொதுமக்கள் பற்றிய விபரம் எவரிடமும் கிடையாது. இவற்றை வைத்து ஏய்த்து வாழும் என்.ஜி.ஓக்களே அதிகம். ஊனமுற்ற மக்களின் குடும்பவாழ்வுக்குரிய பொருளாதார வசதிகளையும் நிரந்தர உழைப்பையும் வருமானத்தையும் பெறு வதற்கான சிந்தனையோ அதற்கான அரசியலோ எவரிடமு மில்லை.

புனர்வாழ்வு, புனர் நிர்மாணம் என்பது உடைந்த கட்டிடங்களுக்கு மட்டுமன்றி உடைந்த உள்ளங்களுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டியதாகும். உடல் ஊனமுற்றோர், இறந்தோர் மட்டுமன்றி பத்தொன்பது வருட யுத்தக் கொடூரங்களினூடாகப் பயணித்த பொதுமக்ளின் வாழ்வு, வன்முறைச் சிந்தனைகளிலிருந்தும் வன்முறைச் செயல் திணிப்புகளிலிருந்தும் சிறைமீட்கப்படவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

பேரினக் கொடுமைகளிலும் அரச பயங்கரவாதத்திலும் விடுதலை இயக்கங் களுக் கிடையிலான மோதல்களிலும்

## விடுதலை இயக்கங்களின் வீரதீரங்களும் வெகுஜன விரோத நிலைப்பாடும்

### செண்பகன்

விடுதலை இயக்கங்களின் உள்முரண் பாடுகளிலும் இந்திய இராணுவ அட்டூழியங்களிலுமிருந்து தட்டித் தவறித் தப்பிப்பிழைத்த பொதுமக்களுடைய வாழ்வு விரக்தி நிலையிலிருந்து மீட்கப் பட்டு நம்பிக்கையூட்டப்பட வேண்டிய தாகும்.

தமிழ் மக்களின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தின் முக்கிய கட்டங் களைத்தாண்டி சமாதான காலத்தில் வாழும் பொதுமக்களின் விருப்பு வெறுப்புகளை அரச அதிகாரிகள் முதல் விடுதலைப் போராளிகள் வரையான சகல மேய்ப்பர்களும் புரிந்து கொள்ளு தல் முக்கிய கடனாகும்.

பொதுமக்கள் மத்தியில் அரசியல் போதம் ஊட்டப்பட வேண்டும். மக்களை மேய்ப்பதற்கோ மேய்வதற்கோ எவரும் முயலக்கூடாது. மக்களின் அரசியல்-ஜனநாயக-மனித உரிமைகளை எவரும் விடுதலையின் பேரால் இரவல் பெறக் கூடாது. மக்கள் தமது இவ்வுரிமை களை எவரிடமும் விட்டுக் கொடுத்துத் தியாகிகளாகிப் பொறுமை காக்கும்படி எவரும் நிர்பந்திக்கும் ஆலோசனை வழங்குவது தவிர்க்கப்படவேண்டும்.

விடுதலை இயக்கங்களில் இணைந்து கொள்ளும் பிள்ளைகள் பெற்றோரின் அனுமதியுடன் சேர்வதை காண்பது இல்லை எனலாம். அவ்வாறு செல் வோரில் மிக அதிகமானோர் வீட்டை விட்டு ஓடுபவராகி விடுதலையா கின்றனர். குடும்பங்களில் ஏற்படும் குழப்பங்களும், அரசபயங்கரவாதம் குடும்ப அங்கத்தவர்களில் எவரை யேனும் ஊனப்படுத்தியோ கொன்றோ அழிப்பதால் ஏற்படும் விரக்தியும் வேதனையும் குடும்பத்தில் நிலவும் பட்டினியும் வறுமையும், கல்வியைத் தொடரமுடியாத அழுத்தங்களும், இளைஞர்களின் பருவ உணர்வுகளைப் பகிரமுடியாத சமூகத்தின் பழமைவாத கெடுபிடிகளும் இளைஞர்களை வீடுகளைவிட்டு வெளியேறும்படி நிர்பந்திக்கின்றன.

இளைஞர்கள் இயக்கங்களுடன் இணைந்து கொண்டதும் தமது குடும்பத்தினருடன் உறவுகளை அறுத்துக்கொண்டு இராணுவ மயப்படுத்தப்படுகின்றனர். இராணுவ வெற்றியைத் தமிழ்தேசிய இயக்கங்கள் பெற்றுக் கொள்வதற்கு இத்தகைய குடும்ப முறிவுகள் உதவும் அதேவேளை சமூகத்தில் இருந்து விலகியவர்களாக போராளிகள் உருமாறும் அபாயம் நேர்ந்து விடுகிறது.

தமித்தேசிய போராளிகளின் உணர்வி லும் செயலிலும் பொதுமக்கள் பற்றிய தமது பார்வையில் ஆதிக்க உணர்வைப் பெறுகின்றனர். பொது மக்களை 'நைன்ரிகள்' என அவர்களின் வ்யோதிபம் எள்ளி நகையாடப்பட்டது. பொதுமக்களை 'ஐயா' என்று அழைக்கும்போதே தொனியில் எள்ளல் வெளிப்படும். 'என்ன' என்று விசாரிக்கும் போதோ 'ஏன், எதற்கு' என்று கேள்வி கள் தொடுக்கும்போதோ வெருட்டல் மேலோங்கும். தனியே வயோதிபர்கள் தமது வீடுகளிலே வாழும்போது 'அப்புவுக்கு பெரிய வீட்டிலே இருக் கிறதுக்குத்தான் ஆசையாய் இருக்கோ. எங்களுக்கு வீடு தேவை. வேறை சின்ன வீடு தாறம். வெளிக் கிடத்தயாராய் இருங்கோ' என்பது போன்ற போராளிகளின் நற்றமிழ்ப் பேச்சுப் பண்பின் உத்தரவுகளுக்கு மக்கள் ஒடுங்கியே போய்விடுகிறார்கள்.

புலம்பெயராமல் தமது சொந்த நாட்டிலே யே தொடர்ந்துவாழும் தமிழ்ப்பொது மக்கள் பேரினவாத வடுக்களைச் சுமந்தும், தமது ஊரவர், அயலவர், நண்பர்கள், உறவினர், பிள்ளைகளை போரில் இழந்தும், புகலிடங்களுக்குப் போனதால் பிரிந்தும் தனித்துப்போய் தம்மண்ணில் தமது உயிர்போவதை விரும்பி வாழுவோருக்கு விடுதலை இயக்கங்களின் வரியும், விசாரணையும், வெருட்டலும், ஹர்த்தாலும், பேரணி களும் பயத்தையும் வருத்தத்தை யும் கூட்டுகின்ற சேதிகளை நாம் வீரஞ்செறிந்த எமது மறத்தமிழ் மண்ணில் அன்றாடம் அறிந்து வேதனைப்படுகிறோம்.

மக்களின் 'பயபக்தி' விடுதலைக்குச் சார்பானது அல்ல. ஒடுக்குதலுக்கே உதவக்கூடியது. விடுதலையின் பங்குதாரர்களாக வேண்டிய மக்கள் பார்வையாளராகக்கூட இருக்கப் பயந்து ஒதுங்கி ஓரங்கட்டப்பட்ட வர்களாக நடைப்பிணங்களாக வாழ்வது நம்மால் சகிக்கக்கூடியதல்ல.

இராணுவ சுற்றிவளைப்புக்கள் நடக்கும் போதுகூட- பின்தங்கிய ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் கிராமங்கில் நடப்பதை நியாயப்படுத்தும் உயர்குடிபிறந்தோர் என்ற உயர்வுச் சிக்கல் எனும் உளநோய்க்காட்பட்டோர் "ஆமிக்காரர், இஞ்சை வராங்கள். கஷ்டப்பட்டதுகளும் கண்ட நிண்டதுகளுந்தானே உதுகளுக்குப் போறது'' என்று சொல்வதை நாம் அதிகம் கேட்டும் பார்த்தும் இருக்கிறோம்.

'என்ரை பிள்ளைக்கு என்ன குறை வைச்சனான். ஏன்தான் இந்தப்பிள்ளை எங்களை விட்டிட்டு இப்பிடிப் போவிட் டுது'' எனப் புலம்பும் பெற்றோரின் அழுகுரல் எங்களுக்குக் கேட்கிறது.

இவ்வாறாக மக்களுக்கும் விடுதலை இயக்கங்களுக்குமிடையிலான உறவில் விரிசலும் வர்க்க வேறுபாடுகளும் நிறைந்திருப்பதைக் காணலாம்.

தற்போது கொழும்பில் புதுமுறைக் களவு ஆரம்பித்துள்ளது. "புலிகள்" என போலி ஆவணங்களுடன் தங்களை அறிமுகப்படுத்தி 'பாஸ்' எடுத்த முறையில் தவறிருப்பதாகக் கூறி மல்லாவிக்கு விசாரணைக்கு வரும் படியும்; வராமல் சரிக்கட்டுவதெனில் குற்றப்பணம் தரும்படியும் நிர்பந்திக்கப் பட்டுள்ள சம்பவங்கள் பத்திரிகைகளில் கூடவராமல் நடந்தேறி உள்ளன. அவ்வளவுக்கு மக்கள் பயந்துபோய் உள்ளனர். பயம் என்பது பொது மக்களை தேச விடுதலையிலிருந்தும் வெகுதூரத்தில் வைத்துள்ளது.

'பெடியள் விடாங்கள்' என்று விலகி நின்று தமது பிள்ளைகளைப் பாதுகாப்பாக பிறநாடுகளுக்கு அனுப்பி வைத்த மேல்குடித்தமிழரையும், "ஐயோ, சமாதானம் வந்துவிடுமோ, பிள்ளை களை அனுப்பிப் போடுவங்கள்" என அங்கலாய்ப்போரையும் அவர்களது வர்க்க சிந்தனையையும் புரிந்து கொள்ளல் அவசியம். விடுதலை இயக்கங்கள் சமூக-விஞ்ஞான கண்ணோட்டத்தில் மக்கள் யார் எனத்தேர்ந்து செயற்படுங்காலங் கனியுமா? வர்க்கப் போராட்ட அரசியல் முன்னுக்கு வந்து தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு வழிகாட்டும் வரை பீடிக்கப்பட்ட நோய் தொடர்வே செய்யும்.




## மாக்ஸியமும் மாற்றுச் சிந்தனை முறைகளும்

மாக்ஸியத்தை நடைமுறை அரசியல் தளத்தில் மறுப்பதற்கு எந்தவிதமாகப் பெண்ணியம் முதல் தேசியவாதம் வரையிலான சமூக-அரசியல் சிந்தனை வழிப்பட்ட இயக்கங்கள் பயன்பட்டனவோ அதே அளவில் சிந்தனைத் தளத்தில் மாக்ஸியத்தை மறுப்பதற்கு மாற்றுச் சிந்தனைகளாகப் பலவேறு அணுகுமுறைகள் ஊக்குவிக்கப்பட்டன.

மாக்ஸியச் சிந்தனையின் அடிப்படையாக இருப்பன இயங்கியலும் பொருள்முதல்வாமுமே. எனவே இரண்டில் ஒன்றை வலுவிழக்கச் செய்வதன் மூலம் மாக்ஸியத்தை வலுவிழக்கச் செய்யலாம் என்பது பிற்போக்குவாதிகளது இலக்காக இன்றுவரை இருந்து வந்துள்ளது. இது நாம் நியாயமாக எதிர்பார்க்கக் கூடியதே. மாக்ஸியத்தை ஆன்மீக விழுமியங்களற்ற, அறஞ்சாராத வரட்டுப் பொருள் முதல்வாத மாகக் காட்டி அதற்கு மாற்றாக ஆன்மீகத்தையே அடிப்படையாகக் கொண்ட மதஞ்சார்ந்த சிந்தனைகளையும் நேரடியான மதச்சார்பற்ற கருத்து முதல்வாதச் சிந்தனைகளையும் முன்னிறுத்தும் முயற்சிகள் பல மேற்கொள்ளப்பட்டு வந்தன.

சோஷலிஸ சமுதாயங்களில் சோஷலிஸ நிர்மாணத்தின் போக்கில் நிகழ்ந்த தவறுகளும் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட இடைஞ்சல்களும் மாக்ஸியத்தின் போதாமைகளாகக் காட்டப்பட்டன. பொருள்முதல்வாத விளக்கங்கள் வேண்டிய சூழ்நிலைகளில், அதைத் தவிர்த்து ஆன்மீகத்தில் மாக்ஸியம் கவனங் காட்டாததாலேயே பிரச்சனைகள் ஏற்பட்டன என்றவாறான விளக்கங்கள் முன்வைக்கப்பட்டன.

நமது சூழலிலும் தென்னாசியாவிற் பொதுவாகவும் காந்தியம் சார்ந்த சிந்தனைகளும் "இந்து" சீர்திருத்தவாதிகளது சிந்தனைகளும் மாக்ஸியத்துக்கு மாற்றாக முன்வைக்கப்பட்டன. இந்தச் சிந்தனைப் போக்குகளின் வர்க்க நிலைப்பாட்டை ஆராய்வதைத் தவிர்க்கும் விதமாக, வர்க்கங் கடந்த மனிதாபிமானம் வலியுறுத்தப்பட்டது. இன்றுவரை இவ்வாறான அணுகுமுறைகளில் எதுவுமே செல்லுபடியான ஒரு சமூக-அரசியற் சிந்தனையாக நிலைக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

சர்வோதய இயக்கம் இந்தியாவில் சுயவிருப்பின் பேரில் நிலமற்றவர்களுக்கு நிலவுடமையாளர்களிடமிருந்து நிலத்தைப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் தோல்வி கண்டது. வினோபாவே தனது முயற்சியின் தோல்விகளால் மனமுடைந்து போக, அவரது விரக்தி அவரை இந்திராகாந்தியின் அடக்குமுறைக்கு அனுசரணையாகப் போகவும் தூண்டியது. ஜெயப்பிரகாஷ் நாராயணண் இந்திராகாந்தியின் அவசரகாலச் சட்ட அட்டூழியங்களை எதிர்த்து நின்று. முடிவில் இந்தியாவின் படுபிற்போக்குவாதிகளுடைய கூட்டாளியாகினார். இன்றுங் கூடப் பொருள்முதல்வாதத்துக்கு மாற்றாக காந்தியத்தின் அம்சங்களை முன்வைக்கும் போக்கு முற்றாக ஓயவில்லை. மெய்யியலாளரான அஸிஷ நந்தி போன்றோருக்கு அவர்களது பொருள்முதல்வாத. விஞ்ஞான விரோத, மாக்ஸிய எதிர்ப்புக் கருத்துக்கள் காரணமாகத் தேசிய மட்டத்திலும் சர்வதேச அளவிலும் கணிசமான விளம்பரம் இருந்தாலும், சமூக நீதிக்கான ஒரு மாற்றுச் சிந்தனையோ செயற்திட்டமோ அந்தத் திசையிலிருந்து இதுவரை வரவில்லை. குறிப்பான சில சமூக நெருக்கடிகளின் போது அவர்கள் கொடுமைகளைக் கண்டித்துப் பேசினாலும் அடிப்படையான சமூகப் பிரச்சனையைத் தொடுவதை அவர்கள் தவிர்த்தே வந்துள்ளனர்.

இலங்கையில் சர்வோதய இயக்கம் ஒரு தனிமனிதரது செல்வத்தையும் செல்வாக்கையும் பெருக்க மிகவும் உதவியுள்ளது. இந்திய சர்வோதய இயக்க முன்னோடிகள் போதித்த எளிமை, தன்னடக்கம், சுயநல மறுப்புப் போன்ற விழுமியங்கள் இலங்கையின் சர்வோதய இயக்கத்திடம் அறவே இல்லை. அரசாங்கங்களை அனுசரித்து நடந்து தமது வளங்களையும் பெருக்குகிற போக்கே இலங்கையின் சர்வோதய இயக்கத்தில் உள்ளது.

அரவிந்தரின் போதனைகள், காந்தியம், சர்வோதயம் போன்றவற்றின் சில பண்புகளை உள்வாங்கி வெளிவெளியாக எந்த மத அடையாளத்தையும் ஏற்காது பேரளவில் மாக்ஸியத்தின் மனித சமத்துவத்தை ஏற்று அடிப்படையில் அதன் பொருள்முதல்வாதத்தை நிராகரித்தவரான மு. தளயசிங்கம் என்பவரது "மெய்முதல்வாதம்" மாக்ஸியத்தைக் கடந்து செல்வதாகப்பட்டது. தளய சிங்கத்தின் சிந்தனையில் மாக்ஸியம் பற்றியோ பொருள்முதல்வாதம் பற்றியோ போதிய தெளிவு இல்லை என்பதும் அவர் முன்வைக்க முயன்றதெல்லாம் பெருமளவும் ஏற்கனவே சொல்லப்பட்டு எடுபடாமற்போன சிந்தனைகள் தாம் என்பதும் 1970அளவில் நிறுவப்பட்ட பின்பு அது நீர்த்துப்போன ஒரு சிந்தனையாகி விட்டது. எனினும் மாக்ஸிய விரோதிகளின் சிந்தனை வறுமையின் விளைவாக (புதிதான ஒரு மாக்ஸிய விரோதச் சிந்தனை ஆயுதம் இல்லாத காரணத்தால்) "மு.த" புறக்கணிக்கப்பட்ட ஒரு பெரிய சிந்தனையாளன் என்ற பிரகடனம் எழுவதும் ஓய்வதுமாக இடையிடை நடந்துள்ளது. தமிழகத்தின் கடுமையான மாக்ஸிய விரோத இலக்கியவாதிகளுள் முக்கியமானவரான சுந்தர ராமசாமி என்பவரும் அவருடைய குடும்பத்தின் ஆளுமைக்கு உட்பட்ட காலச்சுவடு சஞ்சிகை- நூல் வெளியீட்டு நிறுவனமும் மு.த.வுடைய அரசியல்-மெய்யியல் கருத்துக்களுக்குப் புத்துயிரூட்டுவதில் இதுவரை மும்முரமாகவே இருந்துள்ளனர். எனினும் குறிப்பிடத்தக்க தாக்கம் எதுவும் இதுவரை ஏற்படவில்லை.

மாக்ஸியத்துக்கு மாற்றாக ஒரு சிந்தனை முறையை விருத்தி செய்வதில் தென்னாசியாவில் ஏற்பட்ட முற்குறிப்பிட்ட தோல்விகளின் அடிப்படை, பொருள்முதல்வாத மறுப்பே எனலாம். மனிதருடைய வாழ்வு பொருள் அடிப்படையிலானது. பொருள் அடிப்படையிலான மனித இருப்பே மனிதச் சிந்தனையின் விருத்தியை வழி நடத்துகிறது. எனவே, பொருளை விடச் சிந்தனை அடிப்படையானது என்ற கருத்து, மனித இன வரலாற்றையோ மனிதச் சிந்தனையின் விருத்தியையோ சமூக மாற்றங்களையோ விளக்கப் போதுமானதாக இல்லை என்பது, காள்மார்க்ஸ் காலத்திலிருந்து திரும்பத் திரும்ப நிறுவப்பட்டு வந்துள்ளது.

மாக்ஸியம் என்றுமே மனித மனம் சார்ந்த விடயங்களை அற்பமானதாக்க கருதியதில்லை. ஆனால் மனிதரது அகச்சார்பான சிந்தனைகள் புறவய்மான உண்மைகளையும் உலகின் யதார்த்த நிலைமைகளையும் மீறித் தம்மை நிலை நிறுத்த முடியாது என்பது மாக்ஸியக் கண்ணோட்டம். உலகை மாற்றுவது மாக்ஸியத்தின் இலக்கு. ஆனால் உலகின் இயற்கை விதிகளையோ சமூக இயக்கத்தின் விதிகளையோ அறியாமலும் அவ்விதிகளுக்கு ஏற்ப செயற்படாமலும் எதையும் நாம் வேண்டுகிற திசையில் மாற்ற முடியாது. அகச்சார்பான எந்த மனித விருப்பமும் இந்த விதிகளை மீறி நிறைவேற முடியாது.

இயற்கை விதிகளை அறிவதற்கான இயற்கை விஞ்ஞான முயற்சிகள் இயற்கை உலகு பற்றிய மனித அறிவை வளப்படுத்தியுள்ளன. இவ்விதிகள் பற்றிய அறிவின் அடிப்படையிலேயே விஞ்ஞானம், மருத்துவம், தொழில்நுட்பம் போன்ற ஒவ்வொரு துறையிலும் மனித இனம் பெரும் வெற்றிகளைப் பெற்றுள்ளது. இது போலவே மனித சமூகம் செயற்படும் முறையை அறிவதற்கு நமக்குச் சமூக விருத்தியையும் மாற்றத்தையும் ஆளும் விதிகள் பற்றிய அறிவு அவசியம். சமூகத்தை

தொடர்ச்சி 15ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நன்றி - நூலகத்திட்டம்



# பலஸ்தீனப் போராட்டம்

## அரை நூற்றாண்டை தாண்டிச் செல்கிறது!

தென்னவன் கலை

பாலஸ்தீனம்-55 ஆண்டுகளுக்கும் மேலாக தீர்க்கப்படாத சர்வதேச பிரச்சனை. சிலருக்கு அது தேசிய விடுதலைப் போராட்டம். சிலருக்கு அது கிறிஸ்தவ-யூத ஆதிக்கத்துக்கெதிரான இஸ்லாமியரின் கிளர்ச்சி. சிலருக்கு அது அரேபிய தேசியத்தின் எழுச்சி.சிலருக்கு அது ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம். இவ்வாறு பலதரப்பட்ட மக்களும் பாலஸ்தீனத்தை தமது பிரச்சனையாகப் பார்க்கின்றனர். இதனால்தான் உலகின் மறுகோடியில் இருக்கும் இனரீதியாக வேறுபட்ட இந்தோனேசிய முஸ்லீம்களும் கவலைப்படுகின்றனர். மதத்தால் வேறுபட்ட அரேபியக் கிறிஸ்தவர்களும் கொதித்தெழு கின்றனர். ஐரோப்பியக் காலனிய எசமானர்களின் "இடதுசாரிப்" பிள்ளைகளும் ஆதரவு தெரிவித்தனர். இன்று உலகில் பரந்துபட்ட ஆதரவைப் பெற்ற தேசிய விடுதலைப் போராட்டமாகவிருந்த போதும், பாலஸ்தீனம் தீவிர எதிர்ப் பிரசாரத்திற்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அரபு மக்கள் வாழும் பிரதேசம் யாவும் துருக்கிய சக்கரவர்த்தி ஒஸ்மான் அலியின் (அல்லது ஓட்டோமான்) சாம்ராஜ்ஜியத்தின் மாகாணங்களாக விருந்தன. துருக்கியரின் அடக்குமுறை ஆட்சி அரேபியர்களை கிளர்ந்தெழ வைத்தது. அதுவே அரேபிய தேசியத்தின் எழுச்சியாகவும் இருந்தது. கிளர்ச்சிக்கு ஆயுத உதவி வழங்கிய ஆங்கிலேயரை அரபுக்கள் மீட்பர்களாகப் பார்த்தார்கள். கிளர்ச்சி வெற்றி பெற்று துருக்கியர்கள் விரட்டியடிக்கப்பட்டு. அரபுக் குடியரசு அமைக்க விரும்பிய விடுதலை வீரர்களை தடுத்தது ஆங்கிலேய ஏகாதிபத்தியம். இங்கிலாந்து பிரான்சுடன் சேர்ந்து கொண்டு அரபு பிரதேசங்களை கூறு போட்டு காலனியாக்கிக் கொண்டது. இன்று நாம் காணும் "அரபு தேசங்கள்" யாவும் அவ்வாறு கூறு போடப்பட்ட நிலங்களில் இருந்து பிறந்தவைதாம். இங்கிலாந்தின் துரோகத்தை அரபு மக்கள் புரிந்து கொள்வதற்கிடையில் விடுதலைப் போராட்டக் குழுக்களின் தலைவர்கள் புதிய அரபு தேசங்களின் "மன்னர்"களாக்கப்பட்டனர். எதிர்பார்த்தது போலவே இந்த "மன்னர்கள்" ஏகாதிபத்திய விசுவாசிகளாக மாறினர். அதே நேரம் மீட்பர்களாக வந்த ஆங்கிலேயர்கள் உண்மையில் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்கள் என்பதை மக்கள் புரிந்து கொள்ள அதிக காலம் எடுக்கவில்லை.

இவையெல்லாவற்றுக்கும் மாறாக பாலஸ்தீன பிரதேசம் இரண்டாம் உலக யுத்த முடிவு வரை இங்கிலாந்தினால் "பாதுகாப்பு பிரதேசம்" என்ற பெயரில் நிர்வகிக்கப்பட்டது. புனிதபூமி எனக் கருதப்படும் பாலஸ்தீனத்தில் (இன்று இஸ்ரேல்) அப்போது வாழ்ந்த மக்கள் அரபு மொழி பேசினர். அவர்களில் இஸ்லாம், கிறிஸ்தவம், யூதம் ஆகிய மும்மதங்களைச் சேர்ந்தவர்களும் அடங்குவர். அதேநேரம் பைபிளில் சொல்லியிருப்பதன்படி "தாயகம்" திரும்ப விரும்பிய ஐரோப்பிய யூதர்களின் தேசியவாதிகளான "சியோனிஸ்டுகள்" (சியோன் என்பது ஜெருசலேம் அருகில் உள்ள ஒரு குன்றின் பெயர்) பாலஸ்தீனத்தில் சென்று குடியேறினர். பெரும் பணத்தோடு வந்த இந்த யூதக் குடியேறிகள் பாலஸ்தீன நிலப் பிரபுக்களிடம் இருந்து கரையோரமாக பெருமளவு காணிகளை வாங்கினர். ஐரோப்பிய யூதர்களிடம் நிலங்களை விற்ற அரபு நிலப்பிரபுக்கள் இன்று வெளி நாடுகளில் வசதியாக வாழ்கின்றனர். அதேநேரம் மண்ணின் மைந்தர்களான அப்பாவி பாலஸ்தீன ஏழை விவசாயிகள் தம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை அறிந்திருக்கவில்லை. ஒரு புறம் நாஸிகளின் யூதப் படுகொலைகளை கேள்விப்பட்ட பாலஸ்தீன அரபுக்கள் யூதர்கள் மீது அனுதாபம் காட்டினாலும் ஆயிரக்கணக்கான யூதர்கள் பாலஸ்தீனத்தில் வந்து குடியேறியதற்கு மறுபுறம் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். இதனால் ஒரு கட்டத்தில் இங்கிலாந்து அரசு நேரடியாகத் தலையிட்டு புதிய யூதக் குடியேறிகள் வருவதைத் தடுத்தது.

இதற்கிடையே ஏற்கனவே வந்து நிரந்தரமாக தங்கிவிட்ட (கிழக்கு) ஐரோப்பிய யூதர்கள், பாலஸ்தீன யூதர்களையும் சேர்த்துக் கொண்டு இங்கிலாந்துக்கெதிரான தமது தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்தனர். இவர்களை அன்று இங்கிலாந்து அரசு பயங்கரவாதிகள் என அழைத்தது. எனினும் சியோனிச தேசியவாதிகளின் பக்கம் நின்ற அமெரிக்கா ஐ.நா.சபை மூலம் கொடுத்த அழுத்தம் காரணமாக கடைசியில் இங்கிலாந்து பாலஸ்தீனத்தை விட்டு வெளியேறியது. இவ்விடத்தில் இங்கிலாந்து இன்னொரு துரோகத்தை இழைத்தது. உலகில் பிற காலனிகளை அந்தந்த நாட்டு மக்களிடையே திருப்பிக் கொடுத்த இங்கிலாந்து பாலஸ்தீனத்தை மட்டும் எந்தத் தீர்வும் இன்றி அப்படியே விட்டுச் சென்றது. இதற்கிடையே அமெரிக்காவினால் அழுத்தம் கொடுக்கப்பட்ட ஐ.நா.சபை பாலஸ்தீனத்தை (யூத) இஸ்ரேல், (அரபு) பாலஸ்தீனம் என இரண்டாகப் பிரிப்பதாகத் தீர்மானித்தது. இந்தத் தீர்வை யூதர்கள் ஆதரித்தனர், அரபுக்கள் எதிர்த்தனர். தொடர்ந்து யூத-அரபு யுத்தம் மூண்டது.

வெளியிலிருந்து கிடைத்த ஆயுத உதவியினால் யூதப்படைகளின் கை ஓங்கியது. ஐ.நா.சபை கொடுத்ததை விட கூடுதல் பிரதேசங்களை யூதப்படைகள் கைப்பற்றின. கைப்பற்றப்பட்ட அரபுக் கிராமங்களில் வாழ்ந்த மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர் அல்லது முன்னேறி வந்த யூதப்படைகளைக் கண்டு அஞ்சி ஓடினர். இவ்வாறு கைப்பற்றப்பட்ட பிரதேசங்களை சேர்த்து 1948ல் இஸ்ரேலியக் குடியரசு பிரகடனப்படுத்தப்பட்டது. ஜோர்டான் நதியின் மேற்குக் கரை பிரதேசங்களில் ஜோர்டானிய ஆயுதப் படைகளின் பலம் மேலோங்கியிருந்ததால் அது ஜோர்டானின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. இதே போல கடற்கரையோரமாக பாலஸ்தீனர்கள் பெருமளவு வசித்த காஸா பிரதேசம் எகிப்தின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. யூதப்படைகளால் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் இருந்து வெளியேறிய மக்கள் இந்த மேற்குக்கரை, காஸா பகுதிகளில் தஞ்சமடைந்தனர். அந்த அகதிகள் இன்றும் அகதிமுகாம்களில்தான் வாழ்கின்றனர். இந்த அகதிமுகாம்களைத்தான் இன்று இஸ்ரேலிய அரசு "பயங்கரவாதிகளின் குகைகள்" என்று பிரச்சாரம் செய்து வருகின்றது.



பாலஸ்தீன அகதிகள் லெபனான். சிரியா, ஜோர்டான், எகிப்து போன்ற அயல் நாடுகளிலும் சென்று தஞ்சமடைந்திருந்தனர். இந்த "பாலஸ்தீன பிரச்சனை" உருவாக்கிய அகதிகள் பெருமளவில் மேற்கைரோப்பிய, அமெரிக்க நாடுகளை நோக்கி வரலாம் என்றஞ்சிய மேற்குலக நாடுகள், அயல்நாடுகளில் அமைக்கப்பட்ட அகதி முகாம்களை பொறுப்பெடுக்கு மாறு ஐ.நா. சபையை வற்புறுத்தினர். இதற்கிணங்கிய ஐ.நா.சபை UNRWA (பாலஸ்தீன நிவாரணத்திற்கான ஐ.நா.அமைப்பு) என்ற நிர்வாகத்தின் கீழ் பாலஸ்தீன அகதி முகாம்களை கொண்டு வந்தது. இதற்கு இன்று வரை மேற்குலக நாடுகள் நிதியுதவி செய்து வருகின்றன.

அயல்நாடுகளில் தஞ்சமடைந்த அகதிகள் மத்தியில் இருந்த புதிய அரசியல் எதிர்ப்பியக்கங்கள் எழுந்தன. இவற்றில் குறிப்பிடத்தக்கன: எகிப்தில் படித்த யாசீர் அரபாத் தலைமையில் குவைத்தில் நிறுவப்பட்ட ஃபதாஹ். லெபனானில் ஜோர்ஜ் ஹபாஷ் தலைமையில் நிறுவப்பட்ட அரபு தேசிய இயக்கம். பின்னர் PFLP. இந்த அரசியல் அமைப்புகள் ஆரம்பமாக உந்து சக்தியாக இருந்தது பாலஸ்தீன தேசிய உணர்வு. ஐம்பதுகளில் இளைய சமுதாய புத்திஜீவிகள் மட்டத்தில் புதிய சிந்தனை பிறந்தது. அரபு-யூதப் போரில் பிற அரபு நாடுகள் முழுமனதுடன் ஈடுபடாமை, பாலஸ்தீனத்தை கைவிட்டு விட்டு தமது நாட்டு விவகாரங்களில் கவனம் செலுத்தியமை, இவற்றை விட பாலஸ்தீன அகதிகளை அகதிகளாகவே இருக்கவிட்டு புறக்கணித்தமை என்பன இந்த இளைய சமுதாயத்தை தாம் அரபுக்கள் என்பதை விட, முஸ்லிம்கள் என்பதை விட, பாலஸ்தீனியர்கள் என்பதையே தன்மையாகக் கருத வைத்தது. இதிலிருந்துதான் பாலஸ்தீன தாயகத்துக்கான தேசிய விடுதலைப் போராட்டம் ஆரம்பமாகியது. இதைவிட அரபுநாடுகளின் கூட்டமைப்பான அரபுலீக்கினால் ஸ்தாபிக்கப்பட்ட பாலஸ்தீன விடுதலை இயக்கம் (P.L.O) என்ற அரசுசாரா நிறுவனம் (NGO) ஒன்று இயங்கி வந்தது. அது பல நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட போதிலும் பத்திரிகைகளுக்கு அறிக்கைகள் அனுப்புவதற்கப்பால் எதுவும் சாதிக்கவில்லை. அந்நேரம் மிகப்பெரிய இயக்கமாகிவிட்ட யாசீர் அரபாத்தின் ஃபதாஹ் இயக்கத்தினர் பாலஸ்தீன விடுதலை இயக்க அலுவலகங்களை கைப்பற்றி தாமே P.L.O என்ற பெயரில் இயங்கினர். இது அவர்களை சர்வதேச மட்டத்தில் செயல்பட வழிவகுத்தது.

1967ல் இஸ்ரேல் அயல்நாடுகள் மீது திடீர் தாக்குதல் நடத்தி பாலஸ்தீன பிரதேசங்களான மேற்குக்கரையையும், காஸாவையும் கைப்பற்றியது. இந்த யுத்தத்திற்குப் பிறகு உலக வரை படத்தில் முன்னர் பாலஸ்தீனம் என்றறியப்பட்ட பிரதேசம், இஸ்ரேலாகக் காட்சியளித்தது. ஜோர்டான் நதி இஸ்ரேலின் சர்வதேச எல்லையாகியது. மேற்குக்கரை. காஸா பிரதேசங்கள் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளாகின. இந்தப் பகுதிகளைத்தான் பாலஸ்தீன தாயகமாக மேற்குலக நாடுகள் கருதி வருகின்றன. ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இஸ்ரேலிய அரசு புதிய யூதக் குடியேற்றக் கிராமங்களை அமைத்தது. இவை பரவலாக மேற்குக்கரை. காஸா பிரதேசமெங்கும் காணப்படுகின்றன. இந்த குடியேற்றத் திட்டங்கள் பாலஸ்தீன பிரதேசங்களை கூறு போடுவதுடன் தொடர்களையும் துண்டிக்கின்றன. இன்றும் கூட பாலஸ்தீனர்கள் ஒரு இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு செல்ல முடியாமல் தவிக்கையில், குடியேற்றக் கிராமங்களில் வாழும் யூதர்கள் இஸ்ரேலிற்குள்ளே சுதந்திரமாக போய் வரலாம். பெரும் வரிச்சலுகைகளுடன் அரசு கட்டிக்கொடுத்த நவீன வீடுகளில் வாழும் இந்தக் குடியேற்றக்காரர்களுக்கு ஆயுதங்களும் வழங்கப்பட்டுள்ளன. ஆயுதபாணிகளான குடியேற்றக்காரர்கள் அயல்கிராமங்களில் வாழும் பாலஸ்தீன மக்களுக்கு அடிக்கடி தொல்லை கொடுத்து வருகின்றனர். பாலஸ்தீனர்கள் திருப்பித்தாக்காமல் தடுப்பதற்காக யூதக் குடியேற்றக்கிராமங்களைச் சுற்றி இராணுவப் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. பாலஸ்தீன விடுதலை இயக்கங்களின் தொடர்ச்சியான கெரில்லாப்போர். மக்கள் எழுச்சியான "இன்டிஃபதா" என்பன இஸ்ரேலிய அரசு பாலஸ்தீன சுயாட்சிப் பிரதேசங்களை வழங்க நிர்ப்பந்தித்தது. பலரும் எதிர்பார்த்தது போல ஒஸ்லோ ஒப்பந்தம் பாலஸ்தீன தாய்கத்தை அமைப்பதற்கான முதல்படியல்ல. இஸ்ரேல் என்ற ஒரே நாட்டின் உள்ளே பாலஸ்தீன சுயாட்சிப் பிரதேசங்களை உருவாக்கி, அவற்றை நிர்வகிக்கும் பொறுப்பை யாசீர் அரபாத் தலைமையிலான பாலஸ்தீன அதிகார சபையிடம் ஒப்படைப்பது தான் ஒஸ்லோ ஒப்பந்தத்தின் நோக்கம். இதற்கு ஆதாரமாக ஜோர்டானுடனான சரவதேச எல்லையோரமாக அமைக்கப்பட்ட யூதக்குடியேற்றங்களை அப்படியே இருக்கவிட சம்மதித்ததை குறிப்பிடலாம்.

சமாதான காலத்திலும் குடியேற்றங்களை சுற்றியே பேச்சுவார்த்தைகள் நடந்தன. இஸ்ரேல் அரசு "சட்டவிரோத குடியேற்றங்கள்" என்று சொல்லி ஒரு சிலவற்றை அகற்றிக் கொண்டே. மறுபக்கத்தில் புதிய குடியேற்றங்களை கட்டிக் கொண்டிருந்தது. நாம் யூதர்களுக்கு மட்டுமல்ல. பாலஸ்தீனர்களுக்கும் சேர்த்துத்தான் வீடுகள் கட்டுவதாக சாட்டுச் சொல்லியது. ஆனால் உண்மை அதற்கு மாறானது. குறிப்பிட்ட நகர/கிராமப் பகுதிகளில் பாலஸ்தீன மக்களின் வீடுகளை புல்டோசரை கொண்டு வந்து இடித்து தரைமட்டமாக்குகின்றது. இவை யெல்லாம் அரசு அனுமதியின்றி கட்டப்பட்ட வீடுகள் என அதற்கு காரணம் கூறப்படும். பின்னர் அந்த இடங்களில் புதிய வீடுகள் கட்டப்பட்டு யூதர்கள் கொண்டு வந்து குடியேற்றப் படுவார்கள். இப்படித்தான் இஸ்ரேலிய அரசு பாலஸ்தீனியர்களின் நிலங்களை சிறிது சிறிதாக கைப்பற்றி வருகின்றது. ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இஸ்ரேலிய விரிவாக்கம் நடைமுறைப் படுத்தப்படுகின்றது.




இஸ்ரேலில் மட்டுமல்ல ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் குடியேற்றவாதிகளின் பண்ணைகளிலும், தோட்டங்களிலும், தொழிற்சாலைகளிலும் பாலஸ்தீன தொழிலாளர்கள் குறைந்த கூலி கொடுக்கப்பட்டு வேலை வாங்கப்படுகின்றனர். சமாதான காலங்களில் கூட பெரும்பான்மையான பாலஸ்தீனர்கள் யூத முதலாளிகளின் கீழ் வேலை செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது. ஒஸ்லோ ஒப்பந்தத்தின் பின் பல பகுதிகள் பாலஸ்தீன அதிகார சபையின் கட்டப்பாட்டின் கீழ் வந்த பின்னர். பல புலம்பெயர்ந்த பாலஸ்தீனர்கள் நாடு திரும்பி தமது பணத்தை பல தொழிற்துறைகளிலும் முதலீடு செய்திருந்தனர். ஆனால் இந்த முதலீடுகள் எதுவும் குறிப்பிடத்தக்க பொருளாதார முன்னேற்றத்தை எட்டிவிடவில்லை. சிறிய அளவிலான வியாபாரம், சிறிய தொழிற்சாலைகள் இவற்றிற்கப்பால் அவர்களால் போக முடியவில்லை. அதேநேரம் வெளிநாடுகளின் குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவி பெற்று இயங்கிய பாலஸ்தீன அதிகார சபையில் பதவி வகித்த அதிகாரிகள் விரைவிலேயே ஊழல் பெருச்சாளிகளாகிவிட்டமை மக்களிடையே அதிருப்தியை தோற்றுவித்தது.

இவ்வாறு பலவழிகளிலும் மயக்கத்திலிருந்து விடுபட்ட, உண்மை நிலையுணர்ந்த ஏழைகளான பாலஸ்தீன மக்கள் சமாதானமாக அடங்கிப் போவதை விட, வீரனாக போரிட்டு மடிவது மேல் என்ற நிலைக்கு வந்தனர். இந்த அடிநிலை மக்களின் தன்னெழுச்சிதான் இரண்டாவது இன்டிஃபதா என அழைக்கப்படும் இன்றைய பாலஸ்தீன போராட்டம். உலகின் மிகவும் வலிமை வாய்ந்த இராணுவங்களில் ஒன்றான இஸ்ரேலிய ராணுவத்தை தாம் எதிர்த்துப் போராடுகின்றோம் என இந்த மக்கள் நன்றாகவே உணர்ந்துள்ளனர். அவர்கள் தம்மால் இயன்றவரையில் கற்களாலோ, துப்பாக்கிகளாலோ அல்லது தமது உடல்களாலோ போராடு கின்றனர். இவற்றால் இராணுவ ரீதியான வெற்றிகளைப் பெற முடியாமல் போனாலும். இதன்மூலம் தமது எதிர்ப்பை தெரிவிக்கவே விரும்பு கின்றனர். ஹமாஸ் போன்ற இஸ்லாமிய தேசியவாத இயக்கங்கள் பெருமளவு மக்களின் ஆதரவை பெற்றிருப்பது வியப்புக்குரிய ஒன்றல்ல. பாலஸ்தீன அதிகார சபையின் இயலாமையைக் கண்டு ஏமாற்றமடைந்த மக்களுக்கும். தமது எதிர்ப்பை பயன் தரத்தக்கதாக விரும்புவோருக்கும் ஹமாஸ் போன்ற இஸ்லாமிய தேசியவாத இயக்கங்கள் வழிகாட்டுகின்றன.

வெளியுலகில் பாலஸ்தீன எதிர்ப்பியக்கத்தை கொச்சைப்படுத்தும் பிரச்சாரம் நடக்கின்றது. குண்டு வெடிப்புக்களை "பாலஸ்தீன வன்முறை"யென்றும். இராணுவ நடவடிக்கைகளை "இஸ்ரேலிய பதிலடி"என்றும் சொல்வதன் மூலம் பிரச்சினையை ஆரம்பித்தவர்கள் பாலஸ்தீனியர்கள்தான் என்ற கருத்து பரப்பப்படுகின்றது. ஓரளவு நடுநிலையாளர்கள் என்றால் "இருதரப்பும் மனிதத்தன்மையற்று பழி வாங்கும நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன" எனக் கூற வைக்கப்பட்டுள்ளனர். "கருத்துச் சுதந்திரம்" உள்ள அமெரிக்காவில் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்: "தற்கொலைக் குண்டுதாரிகள் என்று சொல்வது தவறு மனிதக்கொலை யாளிகள் என்று சொல்ல வேண்டும்" எனக் கூறியதை அமெரிக்க பத்திரிகையாளர்கள் அப்படியே பின்பற்றுகின்றனர். இவற்றின் மூலம் திட்டமிட்டு பரப்பப்படும் கருத்துக்களாவன : பாலஸ்தீன பிரச்சனையென்பது இஸ்ரேலின் உள்நாட்டு விவகாரம். அதாவது இஸ்ரேலிய அரசுக் கெதிரான சிறு கிளர்ச்சியாளர்கள் தான் பாலஸ்தீனியர்கள். தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை உலக மக்கள் அங்கீகரிக்கக் கூடாத. அவற்றை அப்பாவி மக்களைக் கொல்லும் பயங்கரவாதமாகப் பார்க்க வேண்டும். இதனால்தான் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடந்தால் தொலைக் காட்சிகள் முக்கியத்துவம் கொடுத்து காட்டுகின்றன. காயமடைந்தவர்களை திரும்பத் திரும்பக் காட்டி சாதாரண மக்கள் மனதில் தாக்குதலை செய்தவர்களே குற்றவாளிகள் என்ற எண்ணம் உருவாக்கப்படுகின்றது. ஆனால் அதற்கு மாறாக பாலஸ்தீன பகுதிகளில் இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கைகளால் பலியான அப்பாவி மக்களை தொலைக்காட்சிகள் திரும்பத் திரும்பக் காட்டுவதில்லை. கூடிய பட்சம் அவற்றை வெறும் செய்தியாக மட்டும் சொல்லிவிட்டு நிற்கின்றன. குண்டுத் தாக்குதல்களுக்கான பதிலடிதான் இவை என்ற ரீதியில் செய்தி அறிக்கைக் அமைவதால். பாலஸ்தீனர்கள் பக்கம் பொதுமக்களின் அனுதாபம் போவது தடுக்கப்படுகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நன்றி - நூலகத்திட்டம்



# மறைந்த தோழர் சிவஞானம் இறுதிவரை உறுதி குலையாத கம்யூனிஸ்டாக வாழ்ந்தவர்.

தோழர் கி. சிவஞானம் நவம்பர் முதலாம் திகதி இயற்கை எய்தினார். கடந்த ஒரு வருடமாக நோய்வாய்ப்பட்டிருந்த அவரது மறைவு ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் பெரும் இழப்பாகவும் அமைந்து கொண்டது. அவரது இறப்பு இலகுவில் நிரப்பிக் கொள்ள முடியாத ஒரு இடை வெளியை நம் அனைவர் மத்தியிலும் ஏற்படுத்தியுள்ளது.

தோழர் சிவஞானம் மாணவப் பருவத்திலிருந்தே மாக்சிச உலகக் கண்ணோட்டத்தால் ஈர்க்கப்பட்டவர். 1964ல் மார்க்சிச-லெனினிசப் பொதுவுடமைக் கட்சி பழைய கட்சியிலிருந்து தோற்றம் பெற்ற போது அக் கட்சியின் இளைஞர் அணியிலும் பின் கட்சியிலும் அங்கம் பெற்றவர். நெல்லியடி-கரவெட்டிப் பகுதிகளிலும் மட்டுமன்றி வடமராட்சியில் கட்சியின் வளர்ச்சிக்கு உந்துதல் அளித்ததில் தோழர் சிவஞானத்தின் பங்கு முக்கியமானதாக இருந்தது.

ஒரு கம்யூனிஸ்ட்டிற்குரிய அளவுகோல் அவரது சொல்லும் செயலுமாகும். தான் வரித்துக் கொண்ட மார்க்சிச உலகக் கண்ணோட்டத்தின் ஊடே சமூக வாழ்வைக் கண்டு கொள்வதும். அதன் மத்தியில் தன்னை ஒழுங்குபடுத்தி நிலைநிறுத்திக் கொள்வதும். சமூக மாற்றத்திற்கான பணிகளில். அரசியல் போராட்டங்களில் ஈடுபட்டுக் கொள்வதும் கம்யூனிஸ்ட்டுக்களின் அடிப்படை நிலைப்பாடாகும்.

அந்த வகையில் தோழர் சிவஞானத்தின் வாழ்வின் ஊடாகப் பல்வேறு அம்சங்களை அவரிடத்தில் காண முடிந்தது. வெளிப் பார்வைக்கு அவர் ஒரு அரசாங்க ஊழியர். புகையிரத நிலைய அதிபராகக் கடமை புரிந்தவர் என்றே கூற முடியும். ஆனால் அவர் இறுதிவரை உறுதி குலையாத ஒரு கம்யூனிஸ்ட்டாக வாழ்ந்தவர் என்பது முக்கிய அம்சமாகும். அவரது இயல்பு அதிகம் பேசாதவர். தன்னடக்கம் மிக்கவர். அதிகம் கதைத்து காலத்தை வீணாக்குவதை விட உரிய செயற்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுப்பவர். மிக நிதானமான முடிவுகள் மேற்கொள்ளப்படுவதற்கு தோழர் சிவஞானத்தின் கருத்துக்கள் காத்திருந்து கேட்கப்படுவது உண்டு. மிக நெருக்கடியான தருணங்களில் அவரது அணுகுமுறை கட்சிக்கும் மக்களுக்கும் பலம் சேர்க்கும் வகையிலேயே அமைந்திருக்கும். அவரது எளிமையான வாழ்வு, கடுமையான பணி என்பது குடும்ப வாழ்விலும் பொது வாழ்விலும் அரசியல் களத்திலும் ஒரு முன்னுதாரணத்தை வழங்கி நின்றது. அதனால் இளைய தலைமுறையினர் மத்தியில் அதிக ஈர்ப்புக்கும் அன்புக்கும்



மதிப்பிற்கு முரியவராக இருந்து வந்தார். அதே வேளை தனது அரசியல் நிலைப்பாட்டை எந்த வேளையிலும் விட்டுக் கொடுக் காத சமரசம் செய்யாத ஒருவராக வாழ்ந்தும் வந்தார். தோழர் சிவஞானம் குடும்பத்தினர் மத்தியில் சிறந்த வழி காட்டியாகவும், நண்பர்கள் மத்தியில் நல்ல ஆலோசனை வழங்குபவராகவும், உரிய வேளைகளில் நிலை அறிந்து உதவக்கூடிய ஒருவராகவும் வாழ்ந்து வந்தார்.

தோழர் சிவஞானம் இளைஞர் இயக்கத்தின் வடபிரதேசக் குழுவில் அங்கம் பெற்று பணியாற்றியவர். 1972ல் கட்சியின் வடபிரதேசக் குழுவில் அங்கம் பெற்று பொருளாளராகச் செயல்பட்டவர். நெல்லியடியில் அம்பலத்தாடிகள் அமைப்பை உருவாக்குவதில் முன்னின்று செயல்பட்ட தோழர்களில் சிவஞானம் முக்கியமானவராக இருந்தார். 1966-70 காலத்தில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் முன்னெடுத்த வெகுஜனப் போராட்டங்களுக்கு பிரச்சார உந்துவிசை கொடுத்த கலை இலக்கிய முன்னெடுப்புகளில் தோழர் சிவஞானம் தனது பங்களிப்பை வழங்கியவர். குறிப்பாக "கந்தன் கருணை" காத்தான் கூத்து மெட்டு நாடகம் கூட்டு முயற்சியாக உருவாகுவதற்கும் ஐம்பதுக்கு மேற்பட்ட மேடைகள் கிராம-நகரங்களில் ஏறுவதற்கும் கடும் உழைப்பைக் கொடுத்த தோழர்களில் தோழர் சிவஞானம் முக்கிய இடத்தை வகித்தார். தேசிய கலை இலக்கியப் பேரவையை உருவாக்கவும் அதன் சஞ்சிகையாகிய "தாயகம்" வெளிவரவும் கடுமையாகச் செயல் புரிந்த தோழர்களில் தோழர் சிவஞானம் ஒருவராக இருந்தார். 1974ம் ஆண்டு சித்திரை புதுவருடத் தினத்தன்று நெல்லியடியில் அம்பலத்தாடிகள் நடாத்தும் வருடாந்த கலைவிழாவில் தேசியக் கலை இலக்கியப் பேரவையின் தாயகம் சஞ்சிகை மறைந்த பேராசிரியர் க. கைலாசபதி தலைமையில் வெளியிட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

அன்று கட்சியினால் வழி நடாத்தப்பட்டு தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தால் முன்னெடுக்கப்பட்ட சாதிய தீண்டாமைக்கு எதிரான புரட்சிகர வெகுஜனப் போராட்டங்களுக்கு ஒரு தனித்துவமும் சிறப்பும் இருந்தது. அது யாதெனில் அன்றைய போராட்டங்கள் தனியே தாழ்த்தப்பட்ட மக்களால் மட்டும் முன்னெடுக்கப்பட்ட போராட்டமாக இருக்கவில்லை. சாதிய-தீண்டாமையை எதிர்த்த கம்யூனிஸ்ட்டுக்களினதும். வர்க்க சக்திகளயினதும். ஜனநாயகத்திற்கும் சமத்துவத்திற்கும் மனித உரிமைக்குமான போராட்டமாகவே திகழ்ந்தது. அதனை உறுதிப்படுத்தும் வகையில் நெல்லியடி. கரவெட்டி. பொலிகண்டி. இருபாலை. யாழ்-முஸ்லீம் வட்டாரம் போன்ற பகுதிகளின் கட்சி உறுப்பினர்கள். இளைஞர் அணிகள். பொதுமக்கள் என்போர் அப் போராட்டங்களில் இரண்டறக் கலந்து நின்றமையாகும். குறிப்பாக நெல்லியடி தேனீர்க்கடைப் பிரவேசப் போராட்டம் உச்ச நிலையில் இருந்த வேளையில் நெல்லியடி, கரவெட்டி வடமராட்சி கட்சித் தோழர்கள், இளைஞர்கள் காட்டிய உறுதியும் போராட்ட நிலையும் பொதுமக்களின் ஆதரவும் முன்னு தாரணம் காட்டி நின்றது. அப்போராட்டக் கட்டங்களில் மறைந்த தோழர் கு. சிவராசா, தோழர் சிவஞானம் வகித்த வழிகாட்டும் தலைமைப் பாத்திரம் என்றும் நினைவு கூரத்தக்கதாகும்.

தோழர் சிவஞானத்தின் மறைவு துயரத்தை தந்த போதிலும் அதனைப் பலமாக மாற்றி அவர் தனது வாழ்வாலும் சொல்லாலும் செயலாலும் நமக்கு வழங்கிச் சென்றவற்றையெல்லாம் நாம் கையேற்று முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இளைய தலைமுறையினர் இத்தகைய உறுதி மிக்க தோழரிடம் இருந்து கற்றுக் கொள்ளல் வேண்டும். தோழர் சிவஞானத்திற்கு எமது புரட்சிகர அஞ்சலியைச் செலுத்துகின்றோம். அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

---

## எல்லாம் உலகமயம்.

12ம் பக்க தொடர்ச்சி..

### பகுத்தறிவு

ஆனால், மனிதர்கள் வித்தியாசமானவர்கள். அவர்களுக்குப் பகுத்தறிவு உண்டு. எதனையும் வகுத்தும் தொகுத்தும் கணக்குப் பார்ப்பது பகுத்தறிவு; காரண காரியங்களை விசாரிப்பது பகுத்தறிவு; உண்மை பொய்களை நிறுத்துப் பார்த்து நிச்சயிக்க முற்படுவது பகுத்தறிவு; அவர் சொன்னார், இவர் சொன்னார் என்பதற்காக மட்டும் சொல்லப்படுகிறவை எல்லாவற்றையும் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ள மறுப்பது பகுத்தறிவு; சமன் செய்து சீர்தூக்கும் தராசு போல அமைந்து ஒரு பக்கத்துக்கும் சரிந்து கொடாது நிறுதிட்டமாய் நிற்பது பகுத்தறிவு; நடைமுறை மெய்ம்மைகளை வழிகாட்டியாய்க் கொள்வது பகுத்தறிவு; அனுபவங்களை ஒழுங்குபடுத்தி அலசி ஆராய்ந்து முன்னேறிச் செல்வது, பகுத்தறிவு.

பகுத்தறிவு அகவுலகையும் புறவுலகையும் கூர்ந்து நோக்குகிறது. அதனால், நியாய-அநியாயங்களை அடையாளங்கண்டு நிருணயிக்கும் தன்மை அதற்கு உண்டு.

பகுத்தறிவின் துணையுடன் உலகின் இயல்பினைக் கூர்ந்து நோக்கும் தன்மையையும் உலகமயமாதல் என்று குறிப்பிடலாம். தனக்குள்ளும், தன் சிறிய வட்டத்துக்குள்ளும் முடங்கிக் கிடக்காமல், விட்டுவீதியாய் உலாவி வரும் போக்கு. அது "அறிவினை விரிவு செய்; ஆற்றல் பெருக்கு; துரைகளுக்கு அஞ்சேல்; தூள் செய் கொடுமையை; நல்லது இவ்வுலகம்; நாங்கள் மனிதர்" என்று புத்தம்புதிய ஆத்திசூடிகளைக் கண்டறிவது பகுத்தறிவின் பணி. "பசிப்பணி நீக்கு; பாடு படுக; விஞ்ஞானம் பயில்; வீண் பயம் நீக்கு;வெற்றிமேல் வெற்றி கொள்; வேலையால் உய்திகாண்" என்றெல்லாம் துணிந்து முடிவெடுப்பது பகுத்தறிவின் பணி.

சுருங்கச் சொன்னால், பகுத்தறிவுப் பார்வை உலகின் இயல்பு பற்றிய தெளிவினை நமக்குத் தருகிறது; பண்பாட்டின் அத்திவாரங்களை அது இனங்காட்டுகிறது. எனவேதான், அது சிறந்தவற்றுள் எல்லாம் சிறந்தது.

ஊர்மகளாய், குருடர்களாய், செவிடர்களாய்த் தேங்கும் இழிநிலை ஒழிப்பது பகுத்தறிவுப் பார்வை; அது உள்ளும் புறமும் பார்க்கும்; வெறும் கனவுகளை நம்பாது; அழகிய கனவுகளை நயக்குமே தவிர, அவற்றை அப்படியே அள்ளி விழுங்கிவிடாது; அகவுலகின் கட்டுக்கதைகளைக் காட்டிலும் புறவுலகின் பருமையான சாட்சியங்களைத்தான் அது நாடும். அதனாலேதான் பகுத்தறிவுப் பார்வை உலகமயமான்து என்று சொல்வதும் ஒரு விதத்திலே பொருத்தமானதுதான். ஏனென்றால், பகுத்தறிவுப் பார்வை போலிப் போதகர்களுக்குச் சவால் விடும் தன்மை வாய்ந்தது.

### புதிய பரிமாணம்

என்றாலும், "உலகமயமாக்கல்" என்ற பதம் இன்று புதியதொரு பரிமாணத்தை எடுத்துள்ளது. அது என்ன பரிமாணம்?

தொலைத்தொடர்பு நுட்பத்தின் வளர்ச்சியினால், உலகம் இன்று சிறுத்துவிட்டது. உலகம் முழுவதும் ஒரு சிறு குறிச்சி போல் ஆகிவிட்டது; ஆனபடியால், சர்வதேசமும் பன்னாட்டு மக்களும் நெருங்கிய உறவினர்கள் ஆகிவிட்டார்கள் என்று ஒரு "கதை" இன்று பரப்பப்படுகிறது.

இந்தக் "கதையின்" உயிர்நிலையாய் உள்ளதுதான், "எல்லாம் உலகமயம்" என்ற மூலமந்திர உச்சாடனம். இதற்குப் பின்னால், பொருளியல் ஆதிக்கம், கருத்தியற் சண்டித்தனம், போரியல் மேலாண்மை, ஏகாதிபத்தியத் திமிர்த்தனம், உள்ளறுப்பு ஊடுருவல் போல்வன ஒளித்துக்கொண்டிருக்கின்றன. பதுங்கித்திரியும் மோசடிகளை இனங்காணத் தவறினால் நாம் ஏமாளிகள் ஆகிவிடுவோம்.

---

## நம்மவர்கள்......

12ம் பக்க தொடர்ச்சி.

வருகிறார்கள். கொலைக்கருவிகளை வைத்து சிறப்புப்பூசை நடத்தியும் அறிவித்திருக்கிறார்கள். இது தவிர, சொல்லாலும் செயலாலும் ஏராளமான சம்பவங்களில் வெளிக்காட்டியும் இருக்கிறார்கள்.

ஆர்.எஸ்எ.எஸ். முதலிய சங்கப் பரிவார அமைப்புக்கள் வகுப்புவாத- மதவெறி அமைப்புகள்தாம் என்று ஒப்புக் கொள்ளும் இந்துக்களிலேயே பலர், அவை இசுலாமியர்கள், கிறிஸ்த்தவர்கள் முதலிய சிறுபான்மை மதத்தவர்களுக்கு மட்டுமே எதிராகச் செயல்படுவதாக எண்ணுகிறார்கள். இல்லை, அவர்கள் இந்துக்கள் என்று முத்திரை குத்தப்படும் தாழ்த்தப்பட்ட மக்கள், பெண்கள் மற்றும் அனைத்து ஒடுக்கப்பட்ட சாதிகளுக்கும் எதிரான பயங்கரவாதிகள்.

ஆதாரம் : புதிய ஜனநாயகம்

---

## மாக்ஸியமும் மாற்றுச் சிந்தனை முறைகளும்

13ம் பக்க தொடர்ச்சி.

மாற்றுவதானால் சமூகத்தை அறிய வேண்டும். அதன் இயக்க விதிகளை அறிய வேண்டும். மற்ற எந்தச் சிந்தனை முறையையும் விட மேலாக மாக்ஸியம் இதில் வெற்றி பெற்றதன் காரணம் இயங்கியலையும் பொருள் முதல்வாதத்தையும் இணைப்பதில் மாக்ஸ் கண்ட வெற்றியேயாகும். பொருள் முதல்வாத மறுப்பின் மூலம் மாக்ஸியத்தைத் தவிர்க்க இயலாது போன சூழ்நிலையில் இயங்கியல் மறுப்பு மாக்ஸிய விரோதிகட்குப் பயனுள்ள ஒரு கருவியாயிற்று. இயங்கியல் மறுப்பு பல்வேறு வடிவங்களில் இருந்து வந்துள்ளது. எனினும் அண்மைக்கால வரலாற்றை நோக்கினால் இயங்கியல் மறுப்பின் வழிவந்த சிந்தனைகள் பலவும் மாக்ஸிய விரோதத்தையே மையமாகக் கொண்டிருப்பதை நாம் காணலாம்.

இயங்கியல் மறுப்பும். விஞ்ஞான மறுப்பும் நெருக்கமான உறவுடையவைகளாகவே இருந்துள்ளன என்பதும் கவனிக்கத்தக்கது. எனினும் விஞ்ஞானத்தை ஏற்று இயங்கியலை மறுத்த மாக்ஸிய விரோதச் சிந்தனையாளர்களும் இருந்துள்ளனர். உதாரணமாகக் காள் பொப்பர் எனும் மெய்யியலாளர். விஞ்ஞானக் கொள்கைகள் பற்றிய பயனுள்ள சிந்தனைகளை முன்வைத்த பொப்பர் மனித அறிவுக்கும் அனுபவத்துக்கும் உள்ள உறவு பற்றித் தெளிவீனமான கருத்துக்களையும் கொண்டிருந்தார் என்று அவரை விமர்சிப்போர் சுட்டிக் காட்டியுள்ளனர். வரலாற்று அறிவின் முக்கியத்துவத்தைப் பொப்பர் ஏற்கவில்லை. மாக்ஸியத்தையும் இயங்கியல் பொருள் முதல்வாத ஆய்வுமுறையையும் அவர் ஏற்கவில்லை. சுதந்திரமான சமூகம் என்ற கருத்தை வற்புறுத்திய பொப்பர் அதற்குத் தடையாகக் கண்டது . மாக்ஸியத்தையே ஒழிய ஏற்றத்தாழ்வான சுரண்டல் சமுதாய முறையை அல்ல. இன்று. மாக்ஸிய விரோதிகள் கூடப் பொப்பரது சமூக-அரசியல் கருத்துக்களை முன்னிறுத்திப் பேசுவதில்லை.

ஒவ்வொரு அறிவுத் துறையும் தனக்கேயுரிய சில அணுகுமுறைகளை வகுத்துக் கொள்கிறது. ஆய்வுக்குரிய விடயத்தைப் பற்றிய ஒரு மாதிரியுருவையோ படிமத்தையோ கொண்டுதான் விஞ்ஞான அறிவு இன்றுவரை வளர்ந்து வந்துள்ளது. இவ்வாறான கொள்கைகள் நிரந்தரமான உண்மைகளாக இருக்க அவசியமில்லை. அவை திரும்பத் திரும்ப நடைமுறையில்பயன்பட்டுப் பரீட்சைக்குள்ளாவதன் மூலம் தமது தகுதியை நிலைநாட்டுகின்றன. அல்லாதபோது புதிய கொள்கைகட்கு வழிவிட்டு ஒதுங்குகின்றன. அறிவுக்கும் நடைமுறைக்குமான இயங்கியல் தன்மையான உறவின் ஒரு அம்சம் இது. எனவே, மாக்ஸியம் தனக்கென வகுத்துக்கொண்ட சில ஆய்வு முறைகட்கு வெளியே எதையும் ஏற்கமாட்டாது என்பது உண்மைக்கு முரணானது.

எந்தவொரு புதிய சிந்தனைமுறையும் புதியது என்பதற்காக ஏற்கப்பட வேண்டியதும் இல்லை. அதே காரணத்துக்காக எதிர்க்கப்பட வேண்டியதும் இல்லை. மனிதரதும் அவரது சூழலும் பற்றிய புதிய பார்வைகளை நிராகரிப்பது அறிவுக்கான தேவையை நிராகரிப்பதாகும். அதேவேளை புதிய அல்லது வித்தியாசமானது என்ற காரணத்தால் ஒரு கொள்கை அதற்கு முந்திய அனைத்திலும் சிறப்பானது என்று கொண்டாடுவது சிறுபிள்ளைத்தனம்.

நமது சூழலில், குறிப்பாகத் தமிழ் நாட்டில். மேல் நாடுகளில் வித்தியாசமான எதையும் கண்டால் அதை விளங்கிக் கொள்ள நேரமில்லாமலே அதைத் தமிழிற் கொண்டுவந்த முதலாவது பேர்வழி என்று பெருமை பேசுகிற ஒரு ஆய்வறிவாளர் குழாம் இருந்து வருகிறது. இவர்களுடைய தனிப்பட்ட கோபதாபங்களும் குறிப்பிட்ட அரசியற் கட்சிகளுடனான முரண்பாடும் இவர்கள் அயலிலிருந்து பேசப் பெறுகிற புதிய சரக்கின் தன்மையையும் பயன்பாட்டையும் தீர்மானிப்பது வழமை எனலாம். அதை விடப். விடலைப் பருவத்துப் பிள்ளைகள் போல தமது அறிவாற்றலைப் பறை சாற்றவும் தமது வாசிப்பின் பட்டியல்களையும் நூலாசிரியர்களது பேர்களையும் சிலசமயம் தவறாக விளங்கிக் கொண்ட மேற்கோள்களையும் கொண்டு பிறரை மிரட்டும் ஒரு பண்டிதர் பாவனையும் இந்த ஆய்வறிவாளர்களிடம் மிகுதி.

இந்திய இடதுசாரிப் பாராளுமன்ற அரசியலின் சீரழிவின் பின்னணியில் உருவான புரட்சிகர கம்யூனிஸ்ட்டுக்களால் ஒரு வலிய மாக்ஸிய-லெனினிய சக்தியாகத் தம்மைக் கட்டமைத்துக் கொள்ள இயலாது போனதன் விளைவாகவும், பின்னர் சோவியத் யூனியனின் சரிவின் காரணமாயும் சீனாவில் சோஷலிசத்துக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவாலும், ஒரு காலத்தில் தம்மைப் புரட்சிவாதிகளாகவும் மாக்ஸியச் சிந்தனையின் முன்னோடிகளாகவும் காட்டிக்கொண்ட பல ஆய்வறிவாளர்கள் தமது சிறுமுதலாளி வர்க்கச் சிந்தனைப் போக்கை நன்கு வெளிப்படுத்திக் கொண்டார்கள்.

தமது முன்னைய அரசியல் நிலைப்பாட்டிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவும் இவர்கட்கு இருப்பியல்வாதம் (எக்ஸிஸ்ற்றென்ஷலிஸம்), அமைப்பியல் (ஸ்ற்றக்சுரலிஸம்), பின் நவீனத்துவம் (போஸ்ற்-மொடேனிஸம்) போன்ற நூலேணிகள் பயன்பட்டன. இவற்றின் மூலம் இவர்கள் புரட்சிகரச் சிந்தனையிலிருந்து நழுவிக் குறுகிய தேசியவாதம், தலித்தியம் போன்ற கொள்கைகளில் நிழல் தேடினார்கள். ஈ.வெ.ரா. (பெரியார்), அம்பேத்கர் ஆகியோரது வரலாற்று முக்கியம் வாய்ந்த சமூக விடுதலைச் சிந்தனைகளையும் பங்களிப்பையும் அவர்களது காலத்துச் சமூக அரசியற் சூழலின் சார்பாக நோக்குவதற்கு மாறாக, பெரியாரியம், அம்பேத்கரியம் என்ற பேர்களின் கீழ் விமர்சனத்துக்கு அப்பாற்பட்ட விடயங்களாக அவர்களது ஒவ்வொரு சொல்லையும் செயலையும் கொண்டாடினார்கள். வேறு சிலர் மாக்ஸிய விரோதச் சிந்தனைகளை முற்றாகத் தழுவிக் கொண்டனர். இவர்களிற் சிலர் ஆட்சியாளர்களது செல்லப்பிள்ளைகளாகியும் விட்டனர்.

இவர்களது அணுகுமுறைகளோ முடிவுகளோ விளக்கங்களோ கேள்விக்குட்பட்டால், அவ்வாறு கேள்வி எழுப்புவோரைப் பழமைவாதிகள் என்றோ ஸ்ற்றாலினிஸ்ற்றுக்கள் என்றோ (வசதியானால்) பார்ப்பானிய வாதிகள் என்றோ தட்டிக் கழிப்பது இவர்களுக்கு இலகுவாகப் பயன்படும் கேடயமாகிவிட்டது. இவர்களது அரசியல் முக்கியத்துவம் இன்று மங்கிவிட்டாலும் இவர்கள் முன்வைக்கிற மாற்றுச் சிந்தனைகள் என்ன வகையானவை என்பதை நாம் ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

மாக்ஸிய விரோதமானது என்பதாலோ மாக்ஸியத்திற்கு எதிராகப் பயன்படுகிறது என்பதாலோ எதையும் அலட்சியம் செய்ய முடியாது. எந்தச் சிந்தனைப் போக்கையும் அறவே பயனற்றது என்று நிராகரிக்கவும் முடியாது. ஆயினும் ஒவ்வொரு சிந்தனைமுறையும் எந்தவிதமான உலக நோக்கிலிருந்து எழுகிறது என்பது பற்றி நாம் அறிய வேண்டும். ஒவ்வொன்றிலும் சாதகமானது எது பாதகமானது எது என்று சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். ஒரு சிந்தனை முறை சமூக நீதிகட்கு எதிரான செயற்பாடுகட்குத் துணைபோகிறதானால் அது அதன் அடிப்படையான குறைபாடா, அதன் பிரயோகம் சார்ந்த குறைபாடா, சீர்செய்யக்கூடிய ஒரு குறைபாடா என்பன பற்றி நாம் தீர விசாரிக்க வேண்டும். இதுவே மாற்றுச் சிந்தனை முறைகள் பற்றிய மாக்ஸிய அணுகுமுறை.

பொருள்முதல்வாதம், வரலாற்று மறுப்பு, பொதுமைப்படுத்தல் போன்றவற்றை நிராகரிக்கிற ஒரு சிந்தனை முறை, தவிர்க்க முடியாமலே, மாக்ஸிய விரோதமான ஒன்றாகி விடுகிறது. இதுவே பின்நவீனத்துவத்தின் கோளாறு. அது பற்றி இங்கு விரிவாக எழுதுவது இயலாததால் பின்னொரு போதில் அதை நோக்க இயலும். எனினும், மாக்ஸியத்தின் அடிப்படைகளை நிராகரிக்கிற ஒரு சிந்தனை முறையை வளைத்துப்போட்டு மாக்ஸியத்தைச் செழுமைப்படுத்தலாம் என்கிற போக்கு வரலாற்று அனுபவத்துக்கு முரணானது. மாறாக அதன் குறை நிறைகளை ஆராய்ந்து அதிற் பயனுள்ள அம்சங்கள் இருந்தால் அவற்றை அடையாளங் காண்பதும் அவற்றைப் பிரயோகிப்பதும் பரீட்சிப்பதும் மாக்ஸியத்துக்கு வளமூட்டும் ஒரு முயற்சியாகலாம்.

துரதிஷ்டவசமாக, பின்நவீனத்துவம் போன்ற சிந்தனைகள் பற்றிய ஆரவாரத்தில் மயங்கித் திகைத்த சில இடதுசாரி ஆய்வறிவாளர்கள், முழுமைக்கும் பகுதிக்கும் உள்ள உறவு பற்றிய தெளிவின்மையால் கும்பலில் கோவிந்தா போடுகிற விதமாக நடந்து கொண்டுள்ளனர். மயக்கம் தெளிகின்ற வேளையில் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் அவதிப்படுவதை நாம் இன்று காணுகிறோம்.

~ இமயவரம்பன் ~

நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி
புதிய பூமி REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA PUTHIYA POOMI
சுற்று 09 டிசம்பர் 2002 பக்கம் 16 விலை 10/- சுழற்சி 53






பாலியல் வல்லுறவுக் கொலைகளுக்கு எதிராக மக்கள் எதிர்ப்பு ஊர்வலம் நடாத்தினர். வவுனியாவில் இடம் பெற்றதை முதலாவது படத்திலும் இரத்தினபுரியில் இடம் பெற்றதை இரண்டாம் படத்திலும் காணலாம்.

# இந்தியத் தலையீட்டிற்கு அழைப்பு அன்று தமிழர் தலைமைகள் இன்று சிங்களத் தலைமைகள்

என்பதுகளின் நடுக் கூறிலே இலங்கை இனப்பிரச்சினையில் தலையிடுமாறு தமிழர் தலைமைகள் இந்தியாவை வருந்தி அழைத்தனர். அந்த அழைப்பை ஏற்றுத் தான் அன்று 1987ம் ஆண்டில் இந்தியப் படைகள் வடக்கு கிழக்கிற்கு வந்து கொண்டன. அதன் மூலம் தமிழீழம் அல்லது அதற்கு ஈடான ஒன்று தமிழர்களுக்கு கிடைத்து விடும் எனவும் நம்பப்பட்டது. தானே முன்னின்று இந்திரா காந்தியோடு பேசி இந்தியாவை இங்கு வரவழைத்துக் கொண்டதாக அன்று தமிழர் கூட்டணியின் செயலாளர் நாயகம் சு.அமிர்தலிங்கம் கூறி இருந்தார். ஆனால் அதே இந்தியப் படை என்ன செய்தது. எவ்வாறு நடந்து கொண்டது. தமிழர்களுக்கு எவை கிடைத்தன என்பதெல்லாம் மறக்க முடியாத அனுபவங்கள். அவை அன்று நடந்தவையாகும்.

ஆனால் இன்று அதன் எதிர்நிலையான சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன. நாடு பிரியப் போகிறது. புலிகள் ராணுவக் கட்டமைப்பையும், நீதி நிர்வாக அமைப்புக்களையும் பொலீஸ் நிலையங்களையும் ஏற்படுத்தி வருகின்றனா. எனவே இந்த ஆபத்திலிருந்து இலங்கையின் இறமை ஒருமைப்பாடு சுயாதிபத்தியத்தை நீங்கள்தான் காத்துத் தரவேண்டும். அல்லாதுவிடில் உங்களுக்கும் ஆபத்துத்தான் எனச் சிங்கள எதிர்க்கட்சிகளின் சார்பாக அனுரா பண்டாரநாயக்கா தலைமையில் ஒரு பெரிய தூதுகோஷடி. டில்லி சென்று கோள்மூட்டி ஒப்பாரி வைத்துள்ளது. முக்கிய தலைவர்களை எல்லாம் சந்தித்து விபரங்கள் கூறியுள்ளது.

இந்தியத் தலைவர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு இவர்களை வரவேற்று உபசரித்து விருந்தளித்து விபரங்கள் கேட்டறிந்து உற்சாகமடைந்து நிற்கின்றனர். தலையீடுக்கு காத்திருந்த அதற்கான அலுவல்களை திரைமறைவில் செய்து வந்த இந்திய ஆளும் வர்க்க சக்திகளுக்கும் 'றோ' விற்கும் மட்டற்ற மகிழ்ச்சியாகும். எனவே சிங்களத்தரப்பு தலைமைகளுக்கு சமாதானத்தை எப்படிக் குழப்ப வேண்டும் என்பதை இவர்கள் கோடிட்டுக் காட்டியே இருப்பார்கள். தாங்கள் தலையிடுவதற்கு ஏற்ற ஒரு களத்தை எப்படி இலங்கையில் உருவாக்க வேண்டும் என்பதையும் சுட்டிக் காட்டியே இருப்பார்கள்.

அவசியம் இங்கே ஒரு விடயத்தை ஊன்றிக் கவனிப்பது அவசியம். பிராந்திய மேலாதிக்கமோ அன்றி உலக மேலாதிக்கமோ எதுவானாலும் பிரிவினையை ஆதரித்தும் தலையிடுவார்கள். பிரிவினையை எதிர்த்தும் தலையிடுவார்கள். அழைப்பு விடுவதற்கு ஆட்கள் இருந்தால் போதுமானதாகும். அவர்களது நலன்கள் மட்டுமே முக்கியமானவை யாகும்.

# உலகப்பாவும் அரசியல்பாவும்

~ ஈழத்துத் தேவன் பூதனார்

உஷ்~ மௌனம்.

ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்
சீரிலங்கை கூறுபட்டால் யாரிங்கு கூத்தாடி?
வேரறுந்து வெளிநாடெலாம் தேடி சீரழிந்து மொழி மறந்து
பாரெங்கும் பரதேசிகளாய்
ஐரோப்பிய வெள்ளைத் தோல்களுக்கடிபணிந்து
தூசி, புளுதியிலாத் தேசத்தில்
கொசுக்களும் ஈக்களுமில்லா குளிர்நாட்டில்
போயிருக்கும் புலம்பெயர் தமிழர்களே
ஊர் இரண்டுபட உதவாதீரே!

உஷ்~ மௌனம்.
புஷ்~ கவனம்.

அரசியல் என்பது விஞ்ஞானம்
தெரியாதார் பேசாதிருப்பது நலம்.
புரியாத பத்திரிகை ஊடகப் புளுகுகளை
அரிதான உண்மையென அன்றாடம் ஏற்பதும்
ஏன் எதற்கு எப்படியென்ற சான்றுகளின்றி
சன்னதமாடி கண்டபடி பேசிக்காறித்துப்புவதும்
தான் தோன்றித் தனமாய் தலைவரெலாம்
தம்பாட்டில் உளறுவதும் காசும் அரசியலும்
கலப்படமாய்ப் போனதனால்
ஊரும் உலகும் உருவழிந்து போனதையோ!

முஸ்லீம்~மலையகம்~ தமிழர் என
ஒடுக்கப்பட்டோர் இனம் மூன்று~தம்முள்
வடுக்கிளறிக் கொடுக்கிழுக்காது~தாம்
படுகின்ற துயரெலாம் பகிர்ந்து ~ நாம்
நடுகின்ற இனஉறவுப் பயிர்வளர்த்து
எடுக்கின்ற அரசியல் தீர்வின் முடிவில்
தொடுக்கின்ற போர் வெற்றி பெறும்

~உறுதி திண்ணம்! திண்ணம்!

# நிவாரணமும் நிர்வாணமும்

எறிகணைத் தாக்குதலாலும், விமானக் குண்டுத் வீச்சாலும் எனது வீடு சின்னாபின்னமாகி விட்டது. சமாதானச் சூழலில், இதனைப் பல கோணங்களிலும் படம் எடுத்து ஸ்ரீ லங்கா காவற்துறையில் முறைப்பாடு செய்து, பின் அதன் பிரதியை கிராம அலுவலரிடமும், பிரதேச செயலாளரிடமும் கொடுத்திருந்திருந்தேன். நட்டத்தின் மதிப்பீடும் புகாருடன் இணைக்கப்பட்டிருந்தது. மதிப்பீட்டில் இருந்த கற்குவியல்களை அகற்றுவதற்கும் ஒரு கணிசமான தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. கற்குவியல்களுக்கு இடையில் குருவிகள் எச்சத்தின் காரணமாக முளைத்திருந்த ஓர் அரசங்கன்றை நான் சட்டை செய்யவில்லை.

கற்குவியல்களை அகற்றுவதற்கு எனது வளவிற்குச் சென்ற போது கற்குவியல்கள் அகற்றப்பட்டு அரசங்கன்றுக்குக் கம்பு நடப்பட்டு பாதுகாப்பு கொடுக்கப்பட்டு அருகே ஒரு மேடை அமைத்துப் புத்தர் சிலை ஒன்றும் வைக்கப்பட்டிருந்தது. இவற்றிற்குக் காவலாக வளவில் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டிருந்தனர். புத்தர் முத்தி பெற்ற நிர்வாணம் அடைந்து விட்டார். நான் நிவாரணம் பெறுவது யாரிடம்? எப்போ? எங்கே?

வீடிழந்த அன்பர்

## கல்வி அதிகாரி...

4ம் பக்க தொடர்ச்சி..

மீதும் கோபம் உள்ளது. இவ்வாறான சூழலில் தமது விடயம் தொடர்பாக கதைக்க முற்பட்டபோது அவ்விடத்திற்கு வந்த மேற்படி அதிகாரி அதிபரை தாக்கியுள்ளார். அதிகாரி மலையக அமைச்சர் ஒருவரின் உறவினர் என்றும் தெரிய வருகின்றது. அதிபரும் அரசியல் சிபாரிசு இன்றி வந்திருக்க முடியாது என்பதால் அவரும் தம் பலத்தை இனிக் காட்டக்கூடும். என்றாலும் கல்விக் கூடங்களும், கல்வித் திணைக்களங்களிலும் சண்டித்தனம் காட்டும் இடமல்ல என்பதைப் புரிந்துகொண்டால் சரி. ஒவ்வொரு தாக்கத்திற்கும் எதிர்த்தாக்கம் உண்டு.

- நுவரேலியா சுரேஸ் -

## பிரதேச சுயாட்சி

1ம் பக்க தொடர்ச்சி..

திட்டவட்டமாகத் தெரிவித்து வந்தோம். அதன் காரண மாகவே தமிழ் மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட்டு வந்த புலிகளின் ஆயுதப் போராட்டத்திற்கு நாம் ஆதரவு தெரிவித்து நின்றோம். நமது கொள்கை, போராட்டம், தந்திரோபாயங்கள் வேறுபட்டதாயினும் பேரினவாத ஒடுக்கு முறையை எதிர்த்த போராட்டத்திற்கு ஆதரவு வழங்கி வந்தோம்.

இன்று புலிகள் இயக்கம் முன்வைத்துள்ள பிரதேச சுயாட்சி முடிவு வரவேற்கப்பட வேண்டியதாகும். பேச்சுவார்த்தையில் அதனை முன்வைத்து பேசுவது அவசியமாகும். அதேவேளை வடக்கு கிழக்கு இணைந்த சுயாட்சி அமைப்பில் முஸ்லீம் மக்களின்உரிமைகளுக்கான அரசியல் உத்தரவாதத்தை சுயாட்சி அமைப்பு வாயிலாக நிலைநிறுத்துவதும் அவசியமாகும். ஏனெனில் முஸ்லீம்களின் தாயகமும் வடக்கு கிழக்கேயாகும். எனவே மொழியாலும் பிரதேசத்தாலும் ஒன்றாக வாழ்ந்து வரும் முஸ்லீம் மக்களை எக்காரணம் கொண்டும் அந்நியப்படுத்த முடியாது. ஏனெனில் பேரினவாதிகள், பிராந்திய மேலாதிக்கவாதிகள் என்போர் தமிழ் முஸ்லீம் உறவுக்கு வேட்டுவைத்து சமாதான சூழலைக் குழப்ப ஏற்கனவே கங்கணம் கட்டி நிற்கிறார்கள். அவ்வாறேதான் மலையக மக்களின் இன உரிமைகள் பற்றிய பிரச்சினை களும் தேசிய இனப்பிரச்சினையின் ஒரு பகுதி என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

புலிகள் இயக்கத்தின் பிரதேச சுயாட்சிக்கான யோசனைகூட பேரினவாதிகளால் உள்வாங்க முடியவில்லை. பிரிவினை என்றும் நாடு துண்டாக்கப் படுகின்றது எனவும் கூக்குரல் வைத்துப் பாராளுமன்ற அரசியல் பிழைப்பு நடாத்திவரும் ஆளும் வர்க்க சக்திகள் அதிகாரத்திற்கே நின்று வந்தவர்கள். இப்பொழுதும் பிரதேச சுயாட்சி என்பது பிரிவினை என்றே பிரச்சாரம் செய்கிறார்கள். சிங்கள ஆங்கில ஊடகங்களும் மாவீரர்தின உரையில் மயிர் பிளக்கும் விவாதங்களை நடாத்திக் கொண்டிருக்கின்றன. புலிகள் இயக்கம் முன்வைத்துள்ள பிரதேச சுயாட்சிக் கோரிக்கையை இன்றைய அரசியல் யதார்த்தமாக பேரினவாத ஆளும் வர்க்க சக்திகள் தூரநோக்குடன் பரிசீலித்து சாதகமான முடிவுகளுக்கு வரவேண்டும் அல்லாதுவிடின் நாட்டு க்கும் மக்களுக்கும் பேரழிவு நிச்சயமான தாகும்.

பிரதேச சுயாட்சித் தீர்வை முன்மொழிந்துள்ள அதேநேரம் புலிகள் இயக்கம் இன்னும் அரசியல் தளத்திலும் பேச்சுவார்த்தை மேசையிலும் கடுமையான போராட்டத்தை நடாத்த வேண்டியே இருக்கும். புற நிர்பந்தங்களும் அழுத்தங்களும் கூட ஏற்படலாம். அமெரிக்கா ஒரு புறத்தால் நிர்பந்திக்கலாம். இந்தியா மறுபுறத்தால் குழப்பிக் கொள்ளலாம். பேரினவாதிகள் தமது வழமையான பேயாட்டங்களை சிங்கள மக்களிடையே நடாத்தலாம்.

எனவே இன்றைய சமாதான சூழலைப் பாதுகாத்து பேச்சுவார்த்தையில் உறுதியான நிலைப்பாட்டை முன்னிறுத்தி முன்மொழியப்பட்ட பிரதேச சுயாட்சித் தீர்வை வென்றெடுக்க செயல்பட வேண்டும். அதற்கு தமிழ் மக்கள் மத்தியில் பரந்துபட்ட ஐக்கியம், புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு கடந்தகால கசப்புணர்வுகளுக்கு அப்பால் பல மட்டங்களிலும் கட்டியெழுப் பப்படல் வேண்டும். இதனை நிர்பந்தத் தாலோ அதிகார நிலை நின்றோ அன்றி மக்களின் அடிப்படை நலன்களில் இருந்து செய்யப்படல் வேண்டும். இதுவே இன்று தேவைப்படுவதாகும்.

## போராசிரியர்...

4ம் பக்க தொடர்ச்சி..

தீர்க்கதரிசனமாய் எச்சரித்தமையை நாம் நடைமுறையில் இன்று தெளிவாகக் கண்டுள்ளோம். இது பற்றிய வேறு விளக்கங்கள் அவசியமில்லை.

மேலும் இப்பத்தியில் (1) அமிரின் மாக்சிசப் போதனை சாத்தான் வேதம் ஓதியது போலுள்ளது (2) தமிழ் ஈழத்திற்கு ஆதரவாம் (3) சுருட்டுத் தொழிலாளர் நலன் காக்கும் முதலாளி (4) அமிர்தலிங்கத்தின் திமிர்த்தன ஆணை (5) அமிரின் நம்பிக்கைக் குரியவர் ஜே.ஆர். (6) அபிவிருத்திப் பணம் சட்டப்பைகளில் (7) மாவட்ட சபை களுக்குப் பின்னால் (8) மரணச் சடங்கிலும் குழிபறிப்பு (9) எல்லாம் தனியார் மயம் (10) கூட்டணிப் பிரமுகர் சட்டவாக்கம் செய்கிறார் (11) இரவில் கூடி பகலில் பிரியும் கூட்டணித் தலைமையின் முகமூடி கிழிகிறது (12) யாழ்-கச்சேரி மாநாட்டில் கூட்டணியின் பரிதாப நிலை (13) தனி நாடு கேட்டவர்கள் தனி வீடுகளுக்கு மன்றாட்டம் (14) தமிழர் கூட்டணியின் அடுத்த வேலை என்ன? பேரப் பேச்சா? அன்றி உரிமைப் போரா? யூஎன்.பி. மெத்தையில் நீலனும் வில்சனும் (15) தமிழர் கூட்டணி ஒரு விடுதலை இயக்கமா? (16) மாவட்ட சபைகளின் வண்டவாளம் தெரிகிறது (17) தள(ர்)பதியாருக்கு படை தேவையாம் (18) அமிர் இந்தியத் தூதுவரை அடிக்கடி சந்திப்பது ஏன்? (19) கல்வி வெள்ளை அறிக்கையும் கூட்டணித் தலைமையும் (20) தமிழ் இளைஞர்கள் பற்றி தலைவர்கள் அன்றும் இன்றும் (21) கூட்டணித் தலைவர்கள் சொத்து சேகரிப்பு (22) அமெரிக்கன் அமிர் அமெரிக்கப் பயணம் (23) அமிரின் மினி சர்வாதிகாரம் (24) அமிரின் தலைமைக்கு ஆபத்து (25) பகிஸ்கரிப்பதல்ல வாக்களிப்பதே இன்றைய தேவை ஆகிய தலைப்புகளில் வெளி வந்த கட்டுரைகளையும் மேலும் ஆய்வது பயன் தருவதாகும்.

## முஸ்லிம் காங்...

1ம் பக்க தொடர்ச்சி..

கரங்களாக இருக்கலாம் என நம்பப்படுகின்றது. கிழக்கில் ஏற்கனவே இரு தடவைகள் ஏற்பட்ட தமிழ்-முஸ்லீம் மோதல்கள், மு.கா. பாராளுமன்ற உறுப்பினர்களின் பாராளுமன்ற பகிஷ்கரிப்பு போன்ற வற்றில் இவ்விரு பகுதியினரும் சம்மந்தப் பட்டிருந்தமை குறிப்பிடக் கூடியதாகும்.

இன்றைய சமாதானத்தைக் குழப்புவதில் இந்தியா இலங்கையில் எங்கெங்கு தனது கரங்களை நீட்டிக் கொள்ள முடியுமோ அங்கெல்லாம் நீட்டி வருகிறது. அதற்குரிய போதிய பணத்தையும் வழங்கி வருவதாக அறிய முடிகிறது. இதனை மோப்பம் பிடித்தே மு.கா. தலைவர் ரவ்வூப் ஹக்கீம் புதுடில்லி சென்று இந்தியத் தலைவர்களைச் சந்தித்து விபரங்கள் கூறியிருந்தார் என்றும் பேசப்படுகிறது. டிசம்பர் 5ம் திகதி வந்துள்ளதால் அரசாங்கத்தை வீழ்த்தும் காலம் கனிந்துள்ளதாகவே பேச்சுவார்த்தையைக் குழப்பி சமாதானத்தைக் குலைக்கவுள்ள சக்திகள் குதூகலம் கொண்டுள்ளனர். அதற்கே மு.கா. பிளவு முன் தள்ளப்பட்டுள்ளது.

## பாராளுமன்றத்தை..

1ம் பக்க தொடர்ச்சி..

அள்ளி வழங்க முன்வந்திருப்பதும் ஜனாதிபதிக்கு பலத்த அடியாக அமைந்துள்ளது. மறுநிலையில் இந்தியாவிற்கு அனுர குழு காவடி எடுத்துச் சென்றுள்ளது. இந்தியா எவ்வழி காட்டும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். நிச்சயம் தனது மேலாதிக்கத்திற்கான சூழலை ஏற்படுத்தவதே வழி காட்ட முயற்சிக்கும்.

எனவே உடனடியாகப் பாராளுமன்றத்தைக் கலைத்து மீண்டும் மண் கவ்விக் கொள்வதை ஜனாதிபதி விரும்ப மாட்டார். அதனை மறுவார்த்தையில் நாகரீகமாக "நான் பாராளுமன்றத்தைக் கலைத்து விடுவேன் என அஞ்ச வேண்டாம்" என அபயக்கரம் காட்டி ஜனநாயகவாதி போன்று பேசி நிற்கிறார். "ஓடுமீன் ஓடி உறுமீன் வருவம் வரை வாடி நிற்கும் கொக்கு" போல சந்திரிகா அம்மையார் சந்தர்ப்பம் பார்த்திருக்கிறார் என்பது மட்டும் உண்மை.

## மலையக மக்கள்...

1ம் பக்க தொடர்ச்சி..

இருந்து வருகின்றன. அவை முன் முயற்சி செய்து ஒரு கூட்டானதும் தொடர்ச்சியானதுமான செயற்பாட்டிற்கு முன்வரல் வேண்டும். எமது மக்களின் பிரச்சினைகளுக்கு இச்சந்தர்ப்பவாத சுயநலத் தலைமைகளிடம் எதிர்பார்த்து நிற்கும் போக்கிலிருந்து மக்களின் கவனத்தை சரியான தடத்திற்குத் திருப்ப வேண்டும்.

ஆதலால் மலையக மக்களின் அடிப்படையான இனவுரிமைகள் பற்றியும் அவற்றை அடையாளம் கண்டு அவற்றுக்குரிய தீர்வு ஆலோசனைகளை விவாதிக்கவும் கோரிக்கைகள் ஆக்கவும். அக்கறையுள்ள அனைத்து சக்திகளும் தாமதமின்றி முன்வரல் வேண்டும். வெறும் சலுகைகளுக்காக கைகட்டி காத்திருப்பதை விட உரிமைகளுக்காக குரல் கொடுத்து போராட்டப் பாதையில் இறங்குதல் வேண்டும். அப்போதுதான் மலையக மக்கள் மீதும் அவர்களது பிரச்சினை எவை என்பது பற்றியும் வெளியில் அக்கறை காட்டப்படும் நிலை வர முடியும். அதற்கான முன் முயற்சிகளில் நேர்மையான அரசியல், சமூக அமைப்புகளும் அதன் தலைமைகளும் முன்வரல் வேண்டும்.

வெளியிடுபவர் : இ. தம்பையா, இல. 47, 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு யூகே. பிரின்டஸ் 98A, விவேகானந்தா மேடு, கொழும்பு 13.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்